161

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

பீவிமறியமுடைய கிஸ்ஸா.

இதனை வேதசாரப்படி
முன்னோர்கள் உரைச்செய்ததை

பேட்டை ஆழூரிலிருக்கும்
வாலே பாவா ஸாஹிபு அவர்கள் குமாரராகிய
அப்துல் காதிர் ஸாஹிபு
அச்சிட்ட பிரதிக்கிணங்க

சென்னை, திருவல்லிக்கேணி,
ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
அவர்களால்
தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1948

[அணா. 10.

Q7
N48
111152

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

பீவிமறியமுடைய கிஸ்ஸா.

இதனை வேதசாரப்படி
முன்னோர்கள் உரைச்செய்ததை

பேட்டை ஆமூரிலிருக்கும்
வாலை பாவாஸாஹிபு அவர்கள் குமாரராகிய
அப்துல் காதிர் ஸாஹிபு.
அச்சிட்ட பிரதிக்கிணங்க

OFFICE OF THE R[illegible]RAR OF
4 J[illegible]L 1948
MA[illegible]RAS

சென்னை - திருவல்லிக்கேணி,
ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
அவர்களால் தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு.

1948

இதன் விலை] [அணா 10.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

பீவி மறியமுடைய கிஸ்ஸா.

காப்பு—வெண்பா.

ஓதமுடியா படைப்பை வுலகுவிண்ணிற் றானமைத்த
வாசுபிறை யோனே யழிவில்லா—சோதியே
ஆவலுட னிந்நூலை யம்புவியி லோத
காவலளித் தானே நீ காப்பு.

அம்மானை.

எல்லாம் படைத்திரண பீபவனே தூயவனே
வல்லாண்மை யுள்ள வரிசை நிறைந்தவனே
அரசு குரும்சோடு வடுக்கடுக்கா விண்ணேழும்
வரிசைபெற தானமைத்த வல்லறஹ மானே
உன்னையன்றி வேறில்லை யுதவிகிருபை செய
அன்னை தந்தை யில்லாத வாதிபெரிய வனே
பீவிமரியம் பிறந்த பெரியகிஸா வதனை
பூவுலகில் யாமோத பெரியகிருபை செய்வாய்
அடியவன்செய் பிழைக ளத்தனையு நீபொறுத்து
மிடுமை தனைநீக்க வேணும றஹமானே
ஆரணத்தை யிப்புவியி லனைவோருக் தானோதக்
காரணத்தை காட்டிவித்த கத்தன் றிருதூதாக
வந்தநபியின பதத்தை வாகா யிராப்பகலும்
புந்திதனி லமைதது புகலுவே னிந்நூலை
ஆதநபி தொடுத்து அகமம தீரூவந்த
வேதநபிமார் பதத்தை வித்தாக யான்புகழ்வேன்
வெற்றிநபி மாமனென விண்ணுமண்ணுந் தானபோற்றும்
பெற்றியபு பக்கர்திரு பொற்றாளை யானபுகழ்வேன்
நீதநெறி பிறழாத மநடியநபி மாமனெனும்
வேதர்வுமர் பதத்தை விருப்போடு யான்புகழ்வேன்
பண்பிநபி மருகரெனபா ரோர்கடான றதிகும்
தண்மல ருசுமானின றாளிரண்டை யான்புகழ்வேன்
நடுங்கக் குபர்பரித்த நபியின மருகொனும்
முடங்கலலி பதத்தை முடியில்வைத்து யான்புகழ்வேன்
பத்தினி பீவிபாத்திமா பாலரென தானுதித்த

சித்திரவடிவோர் பதத்தை சென்னிமிசை தரிப்பேன்
பேரா யுதித்துபுவி யெங்கும் பெயரணிந்த
மீரா முகையதின் மினனடிமை யான்புகழ்வேன்
மற்றவொலி மார்பதத்தை மறுவாமலே யடியேன்
பெற்றிட தானமைத்து பிரியமொடு யான்புகழ்வேன்
மறையறிந்த பெரியோர்கள் மலரடியே யான்போற்றி
தரைமிசை யிந்நூலே சாற்றமுயலானேன்
பேட்டை ஆழூர்வாலே பாவாசாயபுப் புதல்வர்
தேட்டைத தமிழ்மொழியாற் செப்பினே னிந்நூலே
இந்நூலையோதி மிகவின்பங் கொளுமாந் தருக்கு
நந்நூலே தந்திடுவாய் நாயனே ஆமீன்.

சரித்திரவசனம்.

அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன் வஸ்ஸலாதுவஸ்ஸலாமு அலா றஸூலிஹி ஸய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன்.

இவ்வகிலத்தின் ஆண் பெண் இருபாலர்களும் பீவிமரியம் கிஸ்ஸாவை கண்ணுறும் மக்கள் மனம் குளிர்வார்கள். இக்கிஸ்ஸாவில் அடங்கிய அதிசயம், சந்தோஷம், அவர்கள் பிறப்பு, ஜீவிய வணக்கம், நற்குணம், நற்செய்கை, சாலிகுதனம், வபாத்து, அதபு ஒழுங்கு நடை முதலியனவைகளைக் கேட்கக் கேட்க இன்ப சாகரத்தில ஆழ்வார்கள். பல முறைவாசித்தாலும் தெகிட்டா இக்கிஸ்ஸாவைப் படிக்கவோ, படிக்கக் கேட்கவோ அவாக்கொள்ளும் அன்பர்களுக்குத் தேன பாரிப்பாழிந்தாப் போலிருக்குமென்பதில் ஐயமில்லை. பீவிமரியம் கிஸ்ஸாவை எழுதி முடித்ததின் பின்னர் ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய கிஸ்ஸாவை அருமையாகவும் விளக்கமாகவும எழுதியுள்ளோம்.

ஹஸ்றத் பீவி மரியம் அவர்களுடைய தகப்பனாராகிய இம்றானும், தாயாகிய ஜன்னத்பீவியும் பனிஇஸ்றாயீல்கிளையிலுள்ளவர்கள். மிகுந்த சிறப்பும் மேன்மையும்பெற்ற பைத்துல் முகத்திஸென்கிற ஊரில் வாழ்ந்திருந்தனர். இம்றானுடைய பெண்ஜாதிக்கு பிள்ளையே யில்லாமல் போயிற்று. அதனாலவர்கள் மிகுந்த மன வருத்தமடைந்து துக்கித்து நமக்குப் புத்திரபாக்கியமே யில்லாமற் போயிற்றே என்று இரவும் பகலும் மெத்த சலிப்போடு ஹக்கதஆலாவினிடத்தில் "ஓ நாயனே! எனக்குப் பிள்ளைகொடு" என்று முனாஜாத்து கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். அல்லாஹுத்தஆலா அவர்களது முனாஜாத்தை கபூலசெய்து, அன்றிரவே கர்ப்ப

வதியடையச் செய்தார். அந்த கர்ப்பமானது வளர்பிறை வளர்ந்து பூரண சந்திரனவது போல வளர்ந்து பத்து மாதமும் நிரப்பமான பின்பு சவுந்தரியமுள்ள ஒரு பெண்பிள்ளையைப் பெற்றார்கள். அப் பெண்பிள்ளை மிகுந்த அழகினை பொருந்திய வடிவான பிள்ளையாக பிறந்திருப்பதை அவ்வூராரெல்லாம் பார்த்து பிரமித்து இப்பிள்ளைக்கு சந்திரனையும் சூரியனையும் கூட சரியாக ஒரு போதும் ஒப்பிட முடியாது என்றார்கள். ஹூறல் ஈன்களுடைய அழகிற்கும் மெத்த அழகான இப் பெண்குழந்தைக்கு மரியமென்று பெயரிட்டார்கள். பின்பு அப்பிள்ளை பிறந்த நாற்பதானுள தாய் சந்தோஷக்கடலில் மூழ்கி மிகுந்த ஆனந்தத்தோடு, தலை நீராடி, சீப்பிட்டு, மேன்மையான உடுபாவங்களணிந்து கொண்டு மிகுந்த களிப்போடு தனது பகளையெடுத்து மடியில்வைத்து, தலைமுழுக் காட்டி, குப்பாயந்தரித்து அப்பிள்ளையை தாயுந்தகப்பனும் இன்னும் மற்றபேர்களு மொன்றாகக்கூடி மனமகிழ்ச்சயோடு தூக்கிக்கொண்டு பைத்துல் முகத்திஸென்னும் பள்ளியினுட் கொண்டுபோய் வைத்தார்கள். அங்கு மிகுந்த தாட்சியையோடு, அல்லாஹூ ஸுபுஹா னஹூவத் தஆலாவினிடத்தில், "எல்லாவற்றையும் படைத்து ஆளுகிற குத்றத்துள்ள வல்லவனே! நீ எங்களபேரில் கிருபை செய்து மிகுந்த அழகையுடைய ஒரு பெண்பிள்ளையை கொடுத்தாய். அப்பிள்ளையைக்கொண்டும அப்பிள்ளையினுடைய அவுலாதுகளைக்கொண்டும் ஒரு ஆபத்தும முஸீபததும் வராமல் உன் கிருபையினால் காத்தருள்வாயாக" என்று மிகுந்த அதபுடனே முனாஜாத்துக் கேட்டார்கள். பின்பு இந்தப்பிள்ளையை பார்வளர்க்கிறவர்களென்று மூன்று தரம் குறிப்பார்த்தார்கள். அம்மூன்று விடுத்தமும் ஸகரியா அலைஹிஸ்ஸலாம் பேரிலேயே வந்து விழுந்தது. இதனால் அவருடைய பெண்ஜாதியும் மனதினுள் அதிக சந்தோஷமானார்கள். ஸகரியா அலைஹிஸ்ஸலாம் பேரால் மூன்று தரமும் குறிவந்து விழுந்ததென்ற செய்தி நாடங்களும் தேசமடங்களும் வெளிபடையாயிற்று. பிறகு தாயும் தகப்பனும அவரிடம் விட கபூல்செய்து, தங்களூரவினர்களை எல்லாங் கூப்பிட்டுக் கூட்டமிட்டு சந்தோஷத்துடனே பிள்ளையையெடுத்து ஸகரியா அலைஹிஸ்ஸலாம் வசம் ஒப்படைத்தார்கள்.

ஸகரியா அலைஹிஸ்ஸலாம் யூஸுபு அலைஹிஸ்ஸலாமை யெப்படி வுவப்பாக மனமகிழ்ச்சியோடு வளர்த்தார்களோ அப்படிப் போலவும், உள்ளங்கையின புண்ணையெப்படி யென்னோமுங் கண்ணோட்ட மிடுவார்களோ அதுபோலவும், தனபொருளை பிறர் கொண்டுபோகாதபடி காப்பாற்றுவார்களோ அதுபோலவும், தன்னுயிரை யெப்படிக் காப்பாற்றக் கொள்வார்களோ அதுபோலவும், பீவி மறியம் பேரில் மிகுந்த பிரியம்வைத்து இரவும் பகலுமாக

வளர்ந்து வந்தார்கள். அவரிடத்தில் மரியம் வளர்பிறை நாளுக்கு நாள் வளர்வதுபோல் வளர்ந்து ஏழாம் வயதடைந்தார்கள். அப்பொழுது பீவிமரியம்மா இரவுபகலும் ஹக்தஆலாவினுடைய வணக்கத்தில மிகவும் தாகூஷையுடையவராய் துனயாவின் பராக்கின்றி எப்பொழுதும் இபாதத்தின பராக்காயிருந்தார்கள். இன்னமும் அல்லாஹுத ஸுபுஹானஹுத வத்தஆலாவினுடைய அச்சத்தை மனதுள் நினைத்து இரவும், பகலும், காலே, மாலேபாகக் கண்ணீர் விட்டழுதுக்கொண்டிருப்பார்கள். துனியாவினுடைய வாழ்வு உடுப்பு உண்பன முதலியவைகளே மனதினுள் அணுவளவும் நினைக்கிறதே யில்லே, இரவுபகல் காலங்களில் சவுக்கியமான நித்திரையே செய்த தில்லே, அல்லாஹுத ஸுபுஹானஹுத வத்தஆலாவின் நாட்டமும் தேட்டமும் வணக்கத்தின பராக்கைதபொழிய மற்றொன்றுமில்லே. உலகத்தில் பீவி மரியம் அவர்கள தமது ஏழாவது வயதில் துப்புரவாக ஹக்தஆலாவினுடைய இபாதத்தில் மூழ்கியதுபோல பெண்ணுய்ப் பிறந்தவர்களில் ஒரு பெண்ணுமில்லே. அப்படி நடந்துவருகிற நாளேயில் ஒருநாள ஸகரியா அலேஹிஸ்ஸலாம் மரியம் பீவியினிடத்தற்கு வந்து "என கண்மணியான மகளே! நீ பிறந்த நாள் தொடுத்து இதுவரைக்கும் ஒரு நாளும் நாம் நல்ல ருசிகரமான வஜீபனமும உண்டது தினகிறதுமிலலே. இன்னமும் பட்டு முதலிய நல்ல உயர்ந்த ஆடைகளும, ஆபரணஙகளும, மேனகைகளும் தரித்து, மணவாடைகளுமணிந்து மனமகழ்ச்சியாக விருக்க நானொருநாளுங கண்டதில்லே. நீ ஏன் இப்படியாக யிருக்கிறுய்" என்று கேட்டார்கள். பின்னும பீவி மரியத்தின் முகத்தை நோக்கி "என் மகளே! நாளேயதினம் பெருநாளொன்று வருகிறது. அன்றைய தினம் உலகததிலுள்ளோர்களெல்லாம் நல்ல அழகான உடுமானஙகளும், உயர்நத வாசனையுள்ள பரிமளஙகளும் மேலிற் பூசி, ரொம்ப மகிழ்ச்சியாய் இருப்பார்கள. நீயும் அவர்களேப்போல நாளேய தினம் அழகான நலல ஆடையாபரணங்களேத் தரித்து மிகுந்த மணமுள்ள பரிமளங்களும் மேலிற் பூசி நல்ல வஜீபனமுமுண்டு அலஙகாரமாகச் சந்தோஷமா யிருப்பாயாகில் எனக்கு சந்தோஷமாகும்" என்று சொன்னார்கள். அசசொல்லே பீவிமரியம்கேட்டு "ஓ என் தகப்பனே! ஹக்த ஆலாவினுடைய நபியே! நாளேயதினம் பெரிய நாளென்று சொன்னீர்களே. நானெவ்வளவு அறிவுள்ளவள், எவ்வளவு அற்ப மனதுள்ளவள், எவ்வளவு வயதுளளவள். நானிப்படிபபட்ட சிறிய வயதும் அறிவில்லாதவளாயிருக்கிற படியினுல்லவெனக்கேது பெரிய நாள், ஆனல் என்னுடைய சரீரமுமெனக்கு நிலேயுளளதா, யென்னுடைய சந்தோஷமுமெனக்கு நிலேயுளளதா, யென்னுயிரு மெனக்கு நிலேயுளளதா இதுகளெல்லாம எப்பொழுதும் அழிவதேயொழிய நிலேயாக யிருப்பதல்லவே. அப்படி யிருக்க இந்ததுனியாவில் நான் உன்

ணத்தின்ன நிச்சயமென்று நம்பி சந்தோஷமா யிருப்பேனாகில்
நாளை ஆகிறத்தில் கட்டிலடங்காத சலிப்பாக விருக்கவேண்டிய
தால் துனியாவினுடைய பலஆசைகளை விட்டு விட்டு
ஒழிந்திருக்கிறதே பெரிய நாளுடைய சந்தோஷம்'' என்று
சொன்னார்கள்.

" அல்லாஹுத் தஆலாவினுடைய நபியே! பூஉலகில் உயிரோடு
வாழ்ந்திருக்கையில் திடீரென்று நம்முடைய உயிர்போய் விட்டால்
பெருநாளுடைய சந்தோஷங்களை யெங்கிருந்து காண்கிறது. என்
னேரமுமெனக்கு மவுத்தினுடைய நினைப்பேவருகின்றது. அந்த
நினைப்பு வந்தவுடனே என்னுடைய அறிவும் உணர்ச்சியுமென்னை
விட்டு ஓடிப்போகிறது. என்னுடைய ஆசை, இன்பங்களெல்லாம்
விலகி கபறினுடைய நினைப்பும் அதனுடைய அதாபின் அச்சப்
பாடும் வந்தவுடனே என்னுடைய அறிவும் புத்தியுந் தடுமாறி திடுக்
கிட்டு திகிலடைந்துத் தட்டுக்கெட்டு போகின்றது. அந்த கபறி
னுடைய பாதை மிகவும் கடிதான சங்கட முள்ளதும், நடக்க தூர
மானதும் பாம்பு தேள்கள் அதிகமுள்ளதும் பயமும் கிடுகிடுப்பும் நடு
நடுக்க முள்ளதும், ஒருதுணையுமில்லாத வீடும், ஆதரிப்பாரும் உதவி
யொத்தாசைச்செய்பவரொருவரு மில்லாததாகவும் இருக்கிறது.
அல்லாஹு ஸுபுஹானஹு வத்த ஆலாவினுடைய நபியே!
இதன்றி எனக்கு கியாமத்தினுடைய நினைப்பே யன்றி மற்ற நினைப்
புகள் யாதொன்றுமில்லை. அந்த கியாமத்தினுடைய அமளியின்
கலக்கமும் திடுக்கமுமாகிய நினைப்பும் வந்து விடுமேயானால் அக்
கொடூர காலத்தினுடைய சங்கடமு மிருப்பதினால் என்னுடைய
சந்தோஷமெல்லாம் என்னை விட்டு காற்றில் பஞ்சுபோல பறந்து
போகின்றது. அதனால் என்னறிவும் உணர்ச்சியுமாறிப்போகிறது.
நரகத்தின் முதுகின்பேரிலிருக்கிற பாலத்தினுடைய நினைப்பும்
வந்து விடுகின்றது. அப்பாலமும் நரகின் முதுகின்பேரில் இருட்
டில் ஆயிர வருஷவழிப்பாடும் ஏறல் இறங்கலுமாய் மயிரிலும் சிறிது
வாளின் சுணையிலுமதிக திணையுள்ளது. அவ்வழியில் மிகுந்த
சங்கடமும் அதிக முஸீபத்துமுண்டு. அதில் எப்படி நடக்கிற
தென்ற எண்ணமும் வந்து விடுகின்றது. அதனால் கல்பெல்லாங்
கிடுகிடுத்து நடுங்கி ஒடுங்கிப் போகின்றது. இதுவுமன்றி மீஸா
னென்னுந் திராசில் நன்மை தீமைகளைவைத்து நிறுப்பதுண்டோ
அந்த நினைப்பு வந்தவுடனே என்னுடைய வல்லமையெல்லாங்
குன்றி யொரு நாழிகைவரையிலும் யிருக்க வல்லமையில்லாமல்
என்னுடலுமுயிருந் தத்தளித்துத் தடுமாறி போகின்றது ஆனபடி
யினாலே அல்லாஹு ஸுபுஹானஹு வத்தஆலா திருவுளமானபடி
இந்த உலகவாழ்வு கொசுவினுடைய ஒற்றை சிறகிற்கு ஒப்பான
தால் துனியாவினுடைய வாழ்வு மகிழ்ச்சியும் ரொம்ப கைசேத

முள்ளதாக இருக்கின்றது. இதில் என்ன சந்தோஷமுண்டு. துனியாவினுடைய இச்சையே நாய் எலும்பை விரும்புவதுபோலாம். இந்த துனியாவு மழிவதாயிருப்பதால் இவ்வுலகத்தினுடைய பிழைப்பும் வாழ்வுங் கழுத்தில் நெருப்பினாற்செய்த சங்கிலியைப்போட்டால் எவ்வளவு வருத்தமோ அப்படிபோலிருக்கிறது. ஓ அல்லாஹுத் தஆலாவினுடைய நபியே! நமக்குப்பெரிய நாளாகிறதுசீதேவித் தனமுடைய நாளாயிருக்கும். அல்லாஹுத் ஸுபுஹானஹு வத் தஆலா நாம் செய்தவைகளை யெல்லாம் விசாரித்து கணக்குகேள்விகள் கேட்டு நாம் செய்த பாவங்களடங்கலையும் பொறுத்து தனது றஹ்மத்தாகிய கிருபையோடு அலங்காரமும் செழிப்பும் சிறப்பும் பொருந்தியச் சோலைகள் நெருங்கிய பிர்தௌஸென்னுஞ் சுவர்க்கத்தைக் கொடுப்பானே அந்நாள்தான் பெரிய நாளாயிருக்கும். இன்னும் அல்லாஹுத் தஆலா தன்னுடைய கமாலியத்தைக் கொண்டு நாம் சந்திக்கும்படியாக தன்னுடைய தீதாரைக் காணும்படி உதவிசெய்வானே அப்போதுதான் நமக்கு மிகுந்த ஏற்றமான பெருநாள்" என்று சொன்னார்கள். பின்னும், "ஓ அல்லாஹு ஸுபுஹானஹு வத் தஆலாவினுடைய நபியே! என்னை படைத்து உயிருமிரணமுங் கொடுத்து யாதொரு முஸீபத்தும் வராமல்படிக் காவல்கள் வைத்து என்னை வளர்க்கும் இறைவனின் நாட்டமாய் இரவும் பகலும் என்னுடைய பிழைகளை பொறுக்கும்படியாக அவனுடைய பாதங்களைக் கெஞ்சிக்கேட்டு இபாதத்துச் செய்து கொண்டிருக்க ஒரு வீடு கட்டி வைத்துத்தாரும். அதற்குள்ளிருந்து நான் துனியாவுடைய கொடிதாகிய அலம்பலாகிய காரியங்களை விட்டொழிந்து, மனம் பேதகமும், வேற்றுமையு மாகாமற்படி இபாதத்துச் செய்துகொண்டிருப்பேன்" என்று பீவி மரியம் சொன்னார்கள். இவைகளை ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் கேட்டு மெத்தப் புதுமையோடு உண்மையான மொழியென்று மனம் மகிழ்வு கொண்டு சந்தோஷப்பட்டு உடனே பயித்துல் முகத்திஸ் பள்ளிக்கு அடுத்தாப்போல் அதிக திரவியங்களைச் சிலவு செய்து மிகுந்த உன்னதமாக சிங்காரித்து மிகுந்த அலங்காரமான மெத்தையொன்று கட்டி வைத்தனர். அந்த மாளிகையுடைய அழகையும் வடிவையு மிவ்வளவென்று கணக்கிட்டுச் சொல்ல முடியாது. அந்த மெத்தையை சகல ஜனங்களும் கண்ணாறக்கண்டு பிரமித்து கூட்டங் கூட்டமாக வேடிக்கைப்பார்த்து நின்றார்கள். இன்னும் அம்மாளிகையினுடைய உயரமானது, நல்ல வல்லமையுள்ளவனொருவன் அம்பெடுத்தெறியில் அவ்வம்பானது அம்மெத்தையினுடைய உயரமட்டும் போகமாட்டாது. அவ்வளவு உயரமாகிய மாளிகைக்குள் ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் பீவி மரியத்தைக் கொண்டு போய் வைத்தார். அம்மாளிகைக்குள் பீவிமரியம் யிருந்து கொண்டு எந்நேரமும் இரவும் பகலுமாக அல்லாஹு

ஸுபுஹானஹுவத் தஆலாவினுடைய வணக்கத்தின்பேரில் தன்னுடைய மனதை திருப்பி அவர்களுடைய நாட்டமுந் தேட்டமும் அவனே யென்று ஓரே மனதாக அவன் பேரில் தரிபாடாக இருந்தார்கள். இப்படி யிருப்பதை ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் கண்டு கட்டிலடங்காத சந்தோஷமாய் நித்தியகாலம் தவராமல் இரண்டு ரொட்டிகளைக்கொண்டுவந்து கொடுப்பார். அவ்விரண்டுரொட்டிக்கு இரண்டு கட்டி உப்புக்கல்லைக்கொண்டு கரியாக புசித்து வந்தார்கள். இவற்றை மரியம் பீவி தின்று ஹக்த் தஆலாவினுடைய பெருமையை சுக்கூறுச் செய்து புகழுவார்கள். அம்மாளிகைக்குள் ஸகரிய்யா நபியைத் தவிர மற்றெவரும் போகிறதில்லை. அப்படி கட்டுள்ள மாளிகைக்குள் ஸகரிய்யா நபி காலையில் ஒரு விடுத்தம் போவார். அப்போதுதான் மரியம் பீவி கபாடத்தை திறப்பார்கள். சாயந்திரம் ஒரு தரம் போவார். அப்போது கதவைத் திறப்பார்கள். இன்னும் ஸகரிய்யா நபி கொண்டு வந்து கொடுக்கிற ரொட்டியை வைத்திருந்து • அவர் தன்னிடம் வரும்போது அவர்கள் இருவரும் ஒன்றாக உட்கார்ந்து அவ்விரண்டு ரொட்டியை புசித்து தங்கள் பசியாறி நோன்பை வைத்து பின்பு நோன்பை திறப்பார்கள். இப்படி நடந்தேறி வருங்காலத்தில் பீவி மரியம் ஹக்த் தஆலாவினுடைய வணக்கத்தில் தரிபாடாயிருப்பார்கள்.

ஒரு நாளாகிலும் நல்ல ஆரோக்கியமாக சவுக்கிய நித்திரைச் செய்ததேயில்லை. இவ்விதமாக பீவி மரியம் துப்புரவாக இருக்கிற நாளையில் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா தன்னுடைய றஹ்மத்தாகிய பார்வையை பீவி மரியத்தின் பேரிலாக்கி இல்மா னென்கிற மலக்கைக் கூப்பிட்டு "நீர் சுவர்க்கத்தினுள் சென்று சுவர்க்கத்தில் அழகு பொருந்திய உடையை யணிந்து கொண்டு, கோடி சூரியப் பிரகாசமாகிய பசும் பொன்னாற் செய்திருக்கிற தட்டில் சுவர்க்கத்தின் மரங்களிலுள்ள பற்பல விதங்களோடும், வர்ணங்களோடும், ருசிகளோடும் கூடிய கனிகளைப்பறித்து நிறப்பி வைத்து, அதன்மேல் விதவிதமாகிய ஒழுங்கினையுடைய அலங்கிருதமுள்ள வேலை செய்யப்பட்ட சுந்தூஸெனனும் பட்டுடையினால் மூடி நீ நல்ல சவுந்திரியமுள்ள மனிதனின் வடிவெடுத்து உலகத்திலெங்கோமும் நோன்பும் வணக்கமாயிருக்கிற பீவி மரியமின் மாளிகைக்குட்சென்று அவளுடைய வலப்புறமாக இத்தட்டை வைத்து விட்டுவா" என்று சொல்லி உத்திர விட்டார்கள். அவ்வுத்திரவின்படிக்கே அம்மலக்கு ஒருவருக்குந் தெரியாமலும் சொல்லாமலுங் கொண்டு வந்து வைதது விட்டு போய்விட்டார். பீவி மரியம் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவுடைய வணக்கத்தை முடித்து விட்டு திரும்பி பார்க்கையில் தன் வலப்

புறமாக விசித்திரம் பொருந்திய போர்வையால் மூடப்பட்ட ஒரு மரகதத்தட்டில் அழகு பொருந்திய மாதளங்கனியும், அஞ்சீர் கனியும் முந்திரிகனியும் வைத்திருக்கக்கண்டு மனம் பிரமித்து மெத்த ஆச்சரியப்பட்டு இன்பத்தோடு அக்கனியை கையிலெடுத்து முகர்ந்து பார்க்கையில், அதனுடைய வாசனையை நோக்கி அதிகப் பூரிப்பானார்கள். நமக்கு ஸகரியா நபி தினகாலமிரண்டு ரொட்டி கொண்டு வந்து கொடுப்பாரே, அவரும் வரவில்லையே, அப்படியிருக்க, இப்பொழுது இக்கனி மாயமாக நம்மிடத்திற்கு வந்திருக்கிறதே இச்செய்தியை நபி அவருக்குச் சொல்லலாமென்று தங்கள் மனதில் நினைத்தார்கள்.

அச்சமயத்தில் ஸகரிய்யா நபி இரண்டு ரொட்டியைக் கொண்டு வந்து கதவை தட்டினார். அந்த சத்தத்தைக் கேட்டு பீவிமரியம் உடனே எழுந்து சீக்கிரமாகக் கதவை திறக்கவும், நபி உள்ளே சென்றார்கள். அப்போது பீவிமரியம் ஸகரிய்யா நபியின் முகத்தை நோக்கி யாநபியே! இங்கொரு அதிசயமான மரகதத் தட்டில் அழகான கனிகள் வந்திருக்கிறதென்று சொன்னார்கள். அது கேட்டு ஸகரிய்யா நபி பீவிமரியத்தின் முகத்தை நோக்கி, "அம்மா உன் மீது இன்று புதியதாக ஓர் மணவாடை அடிக்கின்றது. நீயோ கலியாணமில்லாத பெண். ஆகையால், நம்முடைய மார்க்கத்தில் கலியணமில்லாத பெண்கள் பேரில் மணவாடை பூசுவது ஹறாமாயிருக்க, உன்மேல் மணக்கின்றதே" என்று கேட்டார்கள். அதுகேட்டு பீவிமரியம் ஸகரிய்யா நபியின் முகத்தை நோக்கி, "ஓ தகப்பனே! அம்மணவாடையானது சுவர்க்கத்திலிருந்து கொண்டு வந்து வைத்திருக்கிற கனியை எடுத்து நான் முகர்ந்ததால் என்மேலெல்லாம் வீசுகின்றது. இது ஹறாமல்ல. எல்லா ஆலங்களையும்படைத்தாளுகிற வலுப்பமுள்ள நாயன் நமக்கு கொடுத்தநிஃமத்தை தின்கிறதுமெத்தஏற்றமாகவும் ஷாக்கூறாகவுமிருக்கும், அந்தநிஃமத்துகளைக்கொண்டு இன்று நாமிரண்டுபேரும் நோன்பைத் திறக்கலாம். அக்கனியின் வாடை யொருவர் மீதும் படலாகாது, கொடுக்கவுமாகாது" என்று சொன்னார்கள். அம்மொழியைக் கேட்டு ஸகரிய்யா நபி சந்தோஷமாயினர். பின்பு அவ்விருவரும் அக்கனியைக் கொண்டு நோன்பைத் திறந்து ஹக்கதஆலாவைப் புகழ்ந்து சந்தோஷமானார்கள். ஸகரிய்யா நபி "என் மகளாகிய மரியமே! நீ உலகிலுள்ள பெண்களுககெல்லாம் நாயகியாகிய பெண். அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா தன் கிருபையினால் தனக்கு உவப்பாகிய பேருக்கு ஆகிறத்திலும் துனியாவிலும் அப்படிப்பட்ட நிஃமத்துகளைக் கொடுக்கிறான்" என்று சொன்னார்கள்.

இவ்வண்ணமாக அன்று முதல் பீவி மரியத்திற்கு இல்மா னென்கிற மலக்கு இரண்டு மரகத தட்டில் சுவர்க்கத்தினுடைய பலவகை கனிகளை நிறப்பி பீவிமரியத்தின் வலது புறமாக ஒருவருக்கும் தெரியாமலும், சொல்லாமலும், வைத்து விட்டு போய் விடுவார். அக்கனிகளை எடுத்து பார்க்கையில் மாரிகாலத்திலாகும் கனி கோடை காலத்திலாகியது போலும், கோடை காலத்திலாகும் கனி மாரிகாலத்திலாகியது போலுமே யிருக்கும். இப்படி நடந்து வருகிற நாளையில், நிலவு நாளுக்குநாள் வளர்ந்து பூரண நிலாவாவது போல் பீவிமரியமிற்கு வயது பூரணமாக வளர்ந்து கொண்டே வந்து, வயதும் பனிரண்டாயிற்று. அப்போது பாலிகாய் ஹய்லும் வெளியானது. அதனால் பீவிமரியம் வணங்கும் வீட்டை விட்டு வெளியே வந்து விட்டார்கள். அந்தச் செய்தி ஸகரிய்யா நபிக்கேட்டு மிகுந்த சந்தோஷத்தினால் ஹக்த் தஆலாவின் பேரில் ஷுக்கூறுச்செய்து உடனே ஒரு சிறிய வீட்டை சுறுக்காகக் கட்டி முடித்து அந்த மனையிலுள்ளே பீவிமரியத்தை யெங்கும் வேளியே வராமலிருக்கும்படி ஏழுநாள் வரையிலும் வைத்தார்கள். அவ்வேழுநாளுங் கழித்து தலை முழுகி துப்புரவாகிக்கொள்ளும்படி பீவிமரியத்திற்குச் சொன்னார்கள். "நான் துடக்கென்று சொல்லுமான குஸுல் செய்து என்னுடலை துப்புரவாக்கிக் கொள்ள ஒழிந்த விடமாக ஒரு விடத்தைக் காட்டினால் நானவ்விடத்தில் உடல் கூசாமல் முழுகிக்கொள்வேன்" என்று பீவிமரியம் சொன்னார்கள்.

அச்செய்தியை மரியமுடைய தாயாருக்குத் தெரியப்படுத்தினார்கள். தாயார் கேட்டு மட்டிலடங்காத சந்தோஷக்கடலில் மூழ்கி தன் மகளாகிய பீவிமரிய மிடத்திற்கு வந்து "என் கண்ணின் மணியே! கல்பிஞெளிவே! தெளிவே! பைத்துல் முகத்திஸுடைய ஸல்ஹுனென்னும் ஹமாம்கானவில் இரண்டு வாசலுண்டு. அதில் ஒன்றாவது வாசற்படி பாபுன்னிஸாவும், இரண்டாவது வாசற்படி பாபுலறிஜாவாகும. பாபுன்னிஸா வென்னும் வாசற்படியின் வழியாக இந்த பைத்துல்முகத்திஸிலிருக்கிற பெண்களெல்லாம் அவ்விடம் வந்து தலை முழுகிப்போவார்கள். இன்னம் பாபுலரிஜாவென்னும் வாசற்படியின் வழியாக பயித்துல் முகத்திஸிலிருக்கிற ஆண்களெல்லாம் அவ்விடம் வந்து தலை முழுகிப் போவார்கள் நீயும் அவ்விடமே ஒழிந்த இடமாக வந்து தலை மூழ்கிக்கொள்" என்றார்கள். அவ்வாறே வழக்கமான விடத்தில் பீவி மரியத்தை அவர் தாயார் கொண்டுபோய் தலை முழுக்காட்டிடுவதற்காக ஒரு திரையையெடுத்து ஸல்ஹுனே ஹமாமென்னுமிடத்தில் மறவாகக்கட்டி மரியம் பீவியை தலைமுழுகிக் கொள்ளும்படி விடவும் அங்கு தலை முழுகிடத்தனித்திருந்தார்கள். அவ்வேளை

யில் குத்றத்துள்ள நாயன் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைக் கூப்பிட்டு நீர் நூறுனியென்னும் எழுபதினுயிரந்திரைகளைக் கொண்டுபோய் பீவி மரியம் தலைமுழுக விருக்குமிடத்திற்குக் கட்டும்படி யேவி னுன். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹு ஸுபு ஹானஹுவைத் தஆலாவினுடைய உத்திரவை ஒரு அணுவளவாகி லும் பிசகாமல் அப்படியே செய்து முடித்தார். பின்னும் அல் லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத் திற்கு "நீர் சுவர்க்கத்துக்கு அதிகாரம் பெற்ற றிலுவானென்னும் மலக்கிற்குச்சொல்லி, ஹூறுல் ஈன்கள் 70000 பெயரை பீவிமரிய முடைய பணிவிடை வேலைகள் செய்யப் போகச் சொல்லும். அவர்கள் போகும்போது சுவர்க்கத்திலுள்ள கிஸ்வது வென்னும் எண்ணெயும், பட்டுடைகளும் கையிலெடுத்துக் கொண்டு ஒரு விநாடி நேரமும் தாமதிக்காமல் அனுப்பும்படி தான் சொன்னதாக சொல்லும்படி உத்திரவிட்டார்" உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் றிலுவானுக்கு இச்செய்தியைத் தெரிவித்தார். அப்போது றிலு வான் உடனே அல்லாஹு ஸுபுஹானஹுவத்தஆலா உத்திரவின் படியே ஹூறுல் ஈன் பெண்களைக் கூப்பிட்டு நீங்களெல்லோரும் இன்று சிங்காரித்துக் கொண்டு (ஆபக்கவஸ்ஸறுடைய) ஜலமும் எடுத்துக்கொண்டு இன்னமும் பட்டுடையுங்கொண்டு போய் உடுத் திடுங்களென்று உத்திரவுகொடுத்தார். றிலுவானுடைய கட்டளை யின்படியே ஹூறுல் யீன்கள் சீக்கிறமாக தங்களை சிங்காரித்துக் கொண்டு நீரும் உடையும்எடுத்துக்கொண்டு மிகுந்த அழகுடனே விண்ணுலகத்தை விட்டு மண்ணுலகத்தில் பீவிமரிய மிடத்திற்கு வந்து அவர்களெல்லாம் பணிவிடை வேலைகள் செய்ய தலைமுழுகித் துடக்கை நீக்கித் துப்புரவாகினுர்கள். பின்பு ஹூறுல் ஈன்களை எல்லாம் அனுப்பி விட்டு பைத்துல் முகத்திஸின் புறமாக திரும்பி வர நாடினுர்கள். அந்நேரம் அல்லாஹு ஸுபுஹானஹுவத்த ஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைக் கூப்பிட்டு "இன்று பீவிமரியம் தன்னுடலை சுத்தி செய்து பரிசுத்தமாக விருக்கிறுர். ஆகையால் நீர் ஆதத்தை படைத்து மீதமான சுவர்க்கத்திலிருக்கிற மண்ணில் ஒரு பிடி யெடுத்துக் கொண்டுபோய் பீவிமறியமுடைய விலாவிலே ஓதி ஊதிவிடு" என்று உத்திரவிட்டான்.

அப்போது ஜிபுராயீல் அலைஹிஸ்ஸலாம் ஹக்கு ஆலாவின் சொற்படி ஆதத்தைப்படைத்து மீந்தமண்ணில் ஒரு பிடி மண்ணை யெடுத்துக் கொண்டு நல்ல வடிவுள்ள அழகான சூறத்தான அறபி களின் வடிவைப்போல் வேஷமெடுத்து பீவிமறிய மிருக்கிற விடத் திற்கு நேராக குளிர்ந்த அலங்கிர்த முகத்தோடு வந்தார். அப் போது பீவி மரியமவர் தன்முகத்திற்கு நேராக வருவதைக் கண்டு திடுக்கிட்டு நடுநடுங்கிப் பயந்துதன் தாயாரை தன்னருகிற்

கூப்பிட்டு "அம்மா இதோபார், யாரோ ஒருஅறபி நல்ல வடிவுள்ளவராக, எனக்கு நேராகப் பெண்ணுப் பிறந்த என்னிடம் யாதொரு அச்சமுமின்றி வருகிறாரே அவரை நீர் அறிவீரோ" என்று கேட்டார்கள். அதற்குத் தாயார் மகளின் முகத்தை நோக்கி, என் கண்ணின் மணியே! கல்பினொளியே! யென்னீரல்கொழுந்தே! அறிவின் கடலே! இந்த ஹமாம் கானுவில் இவ்வூரிலுள்ள ஆண்களும் பெண்களும் நித்தமும் வந்துத் தலைமுழுகிப் போக வருவார்கள். ஆகையால் இவர் பனிஇஸ்றாயீல் கூட்டத்திலுள்ளவர் போலிருக்கிறது. இவர் இங்கு முழுகுவதற்காக வருகிறார்" என்று சொல்லுகையில் அவ்வறபிக்கிட்டே நெருங்கி வந்தார். அப்போது பீவிமரியம் தாயாரைப் பார்த்து, ஓ என்தாயே! பின்னும் அந்த அறபி எனது அருகேயே நெருங்கி வருகிறாரே யென்று சொன்னார்கள். அதற்குத் தாயார்! என்மகளே, இவ்வூரில் தகீ என்பவன ஒருவன் இருக்கிறான்.

அவனோ, சகல பேருக்கு மாகாதவன், கன்னெஞ்சன், குடிகேடன், மூதேவி, அவனே பெரும்பாவி சினுச்செய்வதி லஞ்சாத மனமுள்ளவன், மக்கறுள்ளவன், உபாயமுள்ளவன். அவன் செய்யும்படியான அநியாயத்திற்கும் கொடுமைக்கும் இவ்வூரிலுள்ளோர்களெல்லாம் மெத்தவும் பயப்படுகிறார்களென்று அவன் சங்கதிகளெல்லாம் மகளுக்கு முற்றுஞ் சொன்னார்கள். அதுகேட்டு பீவிமரியம் இவன் தகீ என்பதாக எண்ணி நம்மையும் என்ன பாடுபடுத்துவானோவென்று பயப்பட்டு சந்திரனைப்போன்ற முகமும் வாடி, உடலெல்லாம் வேர்த்து, மனம்புழுங்கி பேதலிப்பாகி நடுநடுங்கி இருக்கையில் அந்த அறபி மெத்தவும் கிட்டே நெருங்கி வந்தான். பீவிமரியம் இவன்றான (தகீ) என்று மனதினுள் திடனுக யாதொரு சந்தேகமுமின்றியெண்ணி, "அடாபாவியான தகீயே யென்னருகி லென்ன காரியத்தைக் குறித்து வருகிறாய்? இதை முழுதுந் தூரமாக நின்று சொல்லு, நானுனக்கு உடப்பிறந்தாளாக விருப்பேன். நீ யெனக்கு உடற் பிறந்தவனுக விருப்பாய். ஆகையால் நீ யென்மேல் ஏதும் செய்வாயாகில் அல்லாஹு ஸுபஹானஹுவத் தஆலாவினுடைய உதவியைக் கொண்டும் உன் தலைமேல் கைபான இடிவந்து விழும் நீ அதனால் ஹலாக்காய் மாண்டுபோவாயென்று சொல்லி தன மனதினுள் என்னுண்டவனே என் கற்புக் கொருகெடுதியும் வராமல் நீயே காற்கவேணுமென்று எண்ணினார்."

அப்போது அந்த அறபி நான் தகீ யென்பவனல்ல. நான் உண்மையாகச் சகல நல்ல வணக்கஞ் செய்கிறவன, நாயனுக்குகந்தவன், மிகுந்த ஸாலிஹானவன். நான் ஹக்கதஆலாவினுத்திரவைக்கொண்டு ஆதநபியை பண்டைத்த மிஞ்சிய மண்ணில் ஒரு

பிடி மண்ணை யெடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த மண்ணை உம்முடைய விலாவிலே வைத்து ஓதி ஊதும்படியாக கட்டளை யிட்டான். அதனல், ஹக்த ஆலாவின் றஹ்மத்தின் கிருபையாகு மென எண்ணிக்கொள்ளு மென்று சொன்னார். அச்சொற்களை பீவி மரியம் கேட்டு சந்தோஷக் கடலில் முழ்கினார்கள். பின்பு ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாமை பீவி மரியம் பார்த்து அல்லாஹுத ஸுபுஹானஹுவத் தஆலாவுடைய உத்திரவு எப்படி உமக்குக் கட்டளையாயிருக்கிறதோ அப்படி நடத்து வென்று சொல்ல அதேபடி ஜிபுரயீல் அலைஹிஸ்ஸலாம் செய்து முடித்து விட்டு மறைந்து விட்டார். அப்பொழுது பீவி மரியம் கற்பமாய் விட்டார்கள். அன்றே ஈஸா அலைஹிஸ்ஸலாம் தரிபாடாயினுறென்றும் இன்னொரு கவுலில் ஜிபுரயீலுக்கு தன் மூச்சை ஊதும்படி நாயனுத்திரவானது. அவ்விதமே யூதினதினல் கற்பமாயின ரென்றும் இன்னொரு கவுலில் ஆத நபி உண்டானபொழுது முதல் தும்பினரே அத்தும்பலைபிடித்து வைக்கும்படி ஹக்தஆலா ஜீபுரீலுக்குச் சொல்லவும். அதை அவர் கையில் பிடித்து வைத்திருந்ததாயும் அத்தும்பலை பீவி மரியமுடைய விலாவிலே யூதினதாயும், இன்னொரு கவுலில் ஆத நபியை படைத்த மண்ணில் மிகுந்த மண்ணை தொப்புளின் வழியாக வைத்து ஊதினதாகவும் வந்திருக்கிறது.

பின்பு பீவி மரியம் தான் முன்னல் வணங்கிக் கொண்டிருந்த இபாதத்தினுடைய வீட்டினுள் வந்து சில நாள் வரைக்கும் ஹக்த ஆலாவினுடைய வணக்கத்தை வணங்கிக் கொண்டிருந்தார்கள். அப்படி வணங்கி வருகிற நாளையில் தான் கற்பமானதைக் குறித்து மிகுந்த ஆச்சரியப்பட்டு நாமொன்று மறியோமே எப்படி ஹம்லாயினேமென்று மிகுந்த விசாரப்பட்டுத் தனக்குள் தானே நினைத்து அல்லாஹுத் தஆலாவினுடைய கிருபை தங்கிய றஹ்மத்தைக் கொண்டு நம்மை கற்பவதியாக்கினன் என்று எண்ணினார்கள். இச்செய்கியை நம்முடைய உறவின் முறையாரு மற்ற ஊரிலுள்ள பேர்களெல்லாங் கேட்டால் எனனைக கட்டு திட்ட மில்லாத இகழ்ச்சியு மெக்களிப்பும் பலீஹத்து மாக்குவது மன்றி இன்னமும் உலகிலுள்ள ஆண் பெண்களெல்லாம் என்பேரில் பழுதும் படுதூறும் பேசி நகைத்து இவளிப்படியும் பெண்ணுகப் பிறந்து இவ்வேலைச் செய்வாளாவென்று நானு விதமான மானபங்கமொழிகள் பேசியும் ஏசியும் நகைபபார்கள் என்று நினைத்தார்கள். என்னைப் படைத்து ஆளும் றஹ்மானே நானென்னுடைய பத்தினிதனத்தின் மேல் ஒன்றும் அறியேனென்று சத்தியஞ் செய்து கொடுத்தாலும் உண்மை கொள்ளாமல் கையில் களவிருக்க நெய்யில் கையை யிடுகிறளே யென்று நம்பார்களே என இப்படி பலபலவிதமாகிய எண்ணுத எண்ணங்களையெல்லாம் யெண்ணி மிகவும் விசனப்பட்டழுது துக்

கத்தோடு, என்னுடைய றப்பே நானொருபாவமு மறியேனே ஒரு வரோடு மிதுவரையிலும் கூடியிருக்க வில்லையே, எனக்கு எப் போது முன்னுடைய உதவி யொத்தாசையின் துணையே யன்றி வேறொருவருடைய உதவி யொத்தாசையே யில்லையே என்று மிகுந்த விசனப்பட்டழுது என்னையும் எனது வெட்கத்தையும் காப்பாயாக என்று துவாக் கேட்டார். அப்பொழுது அல்லா ஹுத் தஆலா பீவி மரியமவர்கள் கேட்ட முனாஜாத்தை கபூல் செய்துக்கொண்டான்.

பிறகு பீவிமரியமுடைய கற்பத்திலிருந்து தன் காதிலே விழும்படி லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றஸூலுல் லாஹ் என்றொரு சத்தம் வந்து விழுந்தது. அந்த சப்தத்தை பீவிமரியம் கேட்டு கண்ணுங் கல்புங் குளிர்ந்து சந்தோஷம் பொங் கினது. பிறகு ஈஸா நபி தன் தாயாருக்கு அதிக சந்தோஷங்கள் பொங்குமான புதுமைகளும் அதிசயங்களும் நிறைந்த வார்த்தை களைச் சொல்லத் தொடங்கினார்கள். என் தாயே! நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். யாதொரு மொழிகளைக் குறித்தும் விசனமுஞ் சலிப்பும் படவேண்டாம். அதேனெனில் அல்லாஹு ஸுபுஹான ஹுத் தஆலா உனக்கு தன்கிருபையின் குதறத்தைக்கொண்டு உனக்கு கற்பமாயினது. உனக்கு என் அச்சமும் திகிலு மிருக்கின் றது. இவ்வூரிலுள்ள ஆண்களும் பெண்களும் மற்றோர்களு மொன் றாய்க் கூடி இப்படிப்பட்ட வணக்கமுந் துப்புரவு முள்ளவள் புரு ஷனில்லாமற் கற்பவதியாய் விட்டாளே யென்று சந்தேகங்கொண்டு விஞச் செய்து சூலாகினளென்று படுதூருச் சொல்லியேசி பேசு வார்களாகில் அவர்களுடைய வாயடங்கிப்பேச விடமில்லாமல் போகத்தக்கதாக நான் ஹக்த ஆலாவின் மகாகனம் பொருந்திய வல்லமையின் குதறத்தின் கிருபையைக்கொண்டு நான் கேட்போர் களுக்கும் பேசுவோர்களுக்கும், ஏசுவோர்களுக்கும் தகுமான ஜவா புச் சொல்லி சாக்ஷியுங்கொடுப்பேன். ஆகையால் நீர் ஒன்றுக்கும் அஞ்சாமலும், பேதலிக்காமலும் தைரியமாக சும்மாயிருங்களென்று சூலிலிருந்து ஈஸாநபி சொன்னார்கள். இதனை பீவிமரியம்கேட்டு அல் லாஹுத் தஆலாவின் பேரில் சுக்கூறுசெய்து "என்னுடையறப்பே! உன்னுடைய றஹ்மத்தென்னும் பார்வையைக்கொண்டு என் சூலி லிருக்கின்ற பிள்ளை என்னோடு பேசியவவகளெல்லாங் கேட்டு எனது ரோமக் கால்களெக்களித்தது. என் றஹ்மானே! உன்னு டைய வலுமை பொருந்திய குதறததினாலே என்னைக் கற்பவதி யாக்கி என் கற்பத்திலிருக்கும் பிள்ளை இப்படிப்பட்ட விநோத மான விஷயங்களெல்லாம் பேசும் காரணங்களை பொருந்தியப் பிள்ளையாக இருக்கிறதே" என்று தன் மனதில் நினைத்து, விசனங் களை யெல்லாம் நீக்கிமெத்த ஸபறும் ஷுக்கூறும் செய்துகொண்டு

இரவும் பகலும் தன் வணக்கத்திலேயே நிரப்பமாய் வணங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வூரார்களும் மற்றாரூர்களும் பெண்ணுகப் பிறந்த பெண்களிலே இவ்விதமாய் சிறுபிராயத்தில் ஹக்த ஆலாவினுடைய வணக்கத்தின்பேரில் பூணிப்பாக உலகின் பராக்கினைகளை நீக்கி அடுத்த மனமாக வணங்கப்பட்டவர்கள் ஆண்களிலும் பெண்களிலுமில்லையென்று அதிசயப்பட்டு பேசிக்கொள்வார்கள். இப்படி நடந்தேறி வருகிற நாளையில் பீவிமரியமுடைய ஸாலிஹ் தனத்தின்பேரிலும், வணக்கத்தின்பேரிலும் பயித்துல் முகத்திஸிலிருக்கிற ஆண் பெண்கள் அடங்கலும் மற்ற தேசத்தார்களும் நிரம்பவும் மெச்சிக் கொண்டாடுவார்களே யொழிய இந்த பீவி சூலாயிருக்கிற சங்கதி யாதொரு வருக்கும் தெரியாது. இப்படி மர்மமாக வருகிறபோது அல்லாஹுத் தஆலாவினுடைய லஃனத்தடைந்து கல்லெரியப்பட்ட ஷைத்தானுகிய இப்லீஸினுடைய மனந்தாளாமல் பீவிமரியத்தை படுதூரு செய்ய வேணு மென்றெண்ணினுன். அவன் அந்த தேசத்திலுள்ள பெரியோர் போலவும், நற்குணம், நன்னடப்புள்ளவர் போலவும், மெய்ச்சொல்பவர் போலவும், நல்லவடிவாகி அறபிகளின் மனிதரைப்போல வேஷமெடுத்து அறபிகளணியு மானடகள் அணிந்து காலிற்கழலும், கையில் தஸ்பீஹும் அஸாவுமாக இடைபிணித்து பைத்துல் முகத்திஸுப் பள்ளியினுள் வந்து அங்குள்ளவர்களுக்கெல்லாம் ஸலாம் செய்து ஸகரிய்யா நபியைப் பார்த்து, "ஓ அல்லாவினுடைய நபியே, இன்று நானுமக்கு அதிசயமான ஒரு விஷயத்தை தெரிவிக்க வந்தேன். அதை நீர் நன்ருகக் காது கொடுத்துக் கேளும்" என்று வாய்க் குளறிக்குளறி, பேச்சை நிதானித்து நிதானித்து, ஒளித்தொளித்து, விழுங்கி விழுங்கி, அதனை சொல்வதற்கு அச்சமாக யிருப்பதுபோல் பாசாங்கு "செய்து, சொல்ல நாவெடுக்கில் என்மனம் வெட்கிக்கின்றது" என்று இப்லீஸ் சொன்னுன். இன்னும் அவ்விஷயங்களை உம்முடன் சொன்னுல் அதுகளை நீர்கேட்டு எனக்காக மிச்சமான எண்ணமும் நாணமும் கொள்வீர். நீரும் நபியாகயிருந்து பெண்களின் மக்கரை யறியாமல் போனீரென்று பல பல போதனைகளை போதித்து, கடைசியில் மரியம் ஹராத்தில் பிள்ளையுண்டா யிருக்கிராளென்று உலகத்திலுள்ள ஆண் பெண்களெல்லாம் பேசிக் கொளகிருர்கள். அப்பிளளை உன்னை வெட்டும். ஆகையால் நீரேன் வைத்திருக்கிறீர். பெண்பிள்ளைகளெவ்வளவு வணக்கமுள்ளவர்களா யிருந்தாலும், ஷைத்தானுடைய மோசத்திற் சிக்கி கேடு கெட்டு போவார்களென்று கேட்டு மறிந்து மிருக்கிறீர். அப்பிள்ளை பிறக்குமேயானுல் இவ்வூரிலுள்ள பெரியோர் சிறியோர்களுக்கு என்ன கீர்த்திவரும். ஆகையால், சீக்கிரமாக இப்போதே வேறொரு பெண்பிள்ளையை மரியமிடத்திற்கனுப்பி கற்பினியா

யிருப்பது மில்லாததும் பார்த்துச்சோதித்து வரச்சொல்லும். நானுமவள்சூலானசெய்தியை பல விதமாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அதுவும் மெய்யோ பொய்யோ, அல்லா அறிவானென்று சொல்லிமுடித்தான்.

அப்போது ஸகரிய்யா நபி அவர் சொல்லிவந்த சவிஸ்தாரமெல்லாங் கேட்டு, இவன்எல்லோரையும் கெடுக்குமான குடிகேடனுகிய இப்லீஸென்றறியாமல் மிகுந்த விசனத்தோடும் கலக்கத்தோடும் உடனே யெழுந்து தன்மனேக்குட்சென்று தன் மனேவியை அருகிலழைத்து மெதுவாக, "பீவிமரியம் பிள்ளேயுண்டாயிருக்கிறதாக உலகமெங்கும் பேசிக்கொள்கிருர்கள். அது மெய்பொய்யென்று தெரிந்து கொள்ளவேணும் அல்லது அவர் பேரில் பகையாளர்கள் படுதூரானபேர் வைத்தார்களென்றுந் தெரிந்துகொள்ள வேண்டியதாயிருக்கிறது. ஆகையால் நீ தீவிரமாக பீவிமரிய மிருக்கிற விடத்திற்குப்போய் நல்ல விசாரித்து வாரும். அது நிஜமாகயிருந்தால் என்னிடம் மர்மமாகச் சொல்லும்" என்று சொன்னுர்கள். ஷம்மாரர் என்னும் பெண் பீவிமரியத்திற்கு மிகுந்த அன்பும் பிரியமு முள்ளத் தோழியாவாள். ஷம்மாரர் தன் சிறு பிராயந்தொடுத்து இதுவரை வணக்கத்தில் பல விதத்திலுந் தெளிந்து எந்நேரமும் பீவிமரியத்தை யடுத்து சந்தித்துச் சேர்ந்திருப்பவள் அப்பெண்ணிற்கு இச்செய்தியைச் சொல்லி நன்ருகப் பார்த்துச்சோதித்து வரும்படி சொல்வோமென்ருர்கள். இதனே கண்டு உடனே ஷம்மார் என்னுந் தோழியை யழைத்து இச்செய்திகளே யெல்லாஞ் சொல்லி, பார்த்து வரும்படி கட்டளேயிட்டார்கள். அச்செய்தியை ஷம்மார்கேட்டு பீவிமரியமிடத்திற்கு வந்து பார்க்கும்போது யாதொரு சந்தேகமுமின்றி உண்மையாக சூலாயிருக்கிறது தெரியலாயிற்று. அதுகண்டு ஷம்மார் என்னுந் தோழி பீவி மரியத்தின் முகத்தைப்பார்த்து "என்னுயிர்க்குயிர்போன்ற அறிவின் கடலாகிய தோழியே!! நீ மிகுந்த நாணமுள்ளவராயும் ஈமானுள்ளவராயும், துப்புரவுள்ளவராயும் ஹக்த் தஆலாவினுடைய வணக்கத்தில் மெத்த பூணிப்புள்ளவராயும் அச்சமுள்ளவராயும், அடுத்த மனமுள்ள வணக்கமுள்ளவராயு மிருந்நீரே; இவ்விதமே உன்னே யாவரும் சொல்வார்களே; நீ மிகுந்த அறிவுந்தெளிவுமுள்ள கற்பழியாத பத்தினியாக விருந்தாயே! அப்படியிருக்க இப்படிப்பட்ட பொல்லாத காரியம் எப்படி வந்தது; உம்முடைய துப்புரவான வீட்டுள் துப்புரவில்லாதவனெப்படி குடியானுன்? உம்முடைய துப்புரவான மலருள்ள தோட்டத்துள் வினுவென்னுங் கொடிய காற்று எப்படி வீசினது? பெட்டியிலிருக்கிற ஊசியில் கட்டியிருக்கிற நூலெப்படி வறினது?", என்று கேட்டாள்.

பின்னும் "ஓ மரியமே! நீ எப்படி கேடடைந்தாய்! எவ்விதமாக சூலானாய்! நீ மிகுந்த அறிவுந்தெளிவுமுள்ளவளாயிருந்து ஷைத்தானுடைய கலப்பி லெவ்விதமாக அகப்பட்டுக்கொண்டாய்? யாராவதுனக்கு வெறியாகிய வஸ்துக்களைக் கொண்டு வந்து கொடுக்க அதை நீ வாங்கிப் பருகினையா? அவ்வெறியின் மயக்கத்தினாலுனக்கு வினாவின்மேல் விருப்பமாயினதோ உங்கள் குலத்திலுள்ள பெரியவர்களுடைய பெயர்களையெல்லாம் நீ பிறந்து போக்கடித்தாயே; அவர்களுக்கெல்லா மீனமான பேச்சைத் தேடிவைத்தாயே! உன்னறிவை எங்கே போக்கடித்து விட்டாய்; நீ நிரம்பவும் இகழ்ச்சிக் கிடமாக்கினையே; உன்மேல் யாராகிலு மோகித்தவர்களுண்டோ? அல்லதுஉன்னை யாராகிலும்மோசஞ்செய்தார்களோ? அல்லது உன்மேல் வெறிகொண்டுவந்து விழுந்து கெடுத்தானோ? அல்லது பசப்பினானோ? வெருட்டினானோ?" என்றுகேட்டார். ஓ மரியமே! முன்னுள்ள பெரியோர்கள் பெண்பிறந்தவளை தனியாக ஓரிடத்தில் வைத்தல் ஆகாது, என்று கூறுவார்கள்.

அப்படி தனியாகவைத்தால் அனேகக்கெடுதிகள் நேரிடுமென்று சொல்லியிருக்கிறார்கள். அச்சொல்படி உன்மேல் இப்படிப்பட்ட தப்பிதம் வந்து எப்படி நேரிட்டது. நீ நடந்த காரியங்களையெல்லா மொளிக்காமலும் மறைக்காமலும் என்னிடம் சொல்லும். நானே உனக்கு உயிருக்குயிரான உண்மையானதோழி. நீ ஒளிக்காமற் சொல்வாயாகில் எவ்விதத்திலாவது உம்முடைய எண்ணங்களை வெண்ணெயில் மயிர் வாங்கினாப்போல் நீக்கி வைக்கிறேன். உன் மலர்ந்த முகத்தைப்பார்த்தால் பதினாலாம் பக்கத்து நிலவு பிரகாசிப்பதுபோல் இலங்குகிறது, இன்னும் பெரியோர்கள் பெண்ணாப் பிறந்தவள் தனித்திருந்தால் அவளுடன் ஷைத்தானும் ஒரு ஆணுமிருக்கிறார்களென்றுஞ் சொல்லக்கேட்டிருக்கிறேன். ஆகையால் பெண்ணாய்ப் பிறந்த நீ, வெட்கமென்னும் போர்வையைப் போர்த்திக்கொண்டு தாய், தகப்பன், புருஷன் முன்னிற் புறப்பட்டு, கெட்டவார்த்தைகளை நாவில் வராமலும் எடுக்காமலும், வீட்டைவிட்டு வெளியே புறப்படாமலும், கெட்ட சங்கதிகளைப்பேசாமலும் மிகுந்த சத்தமின்றி மெள்ள பேசவேண்டியது கடமை. ஆகையாலிப்படிப்பட்ட நடத்தைகளில்லாத பெண்ணாகப் பிறந்தவள், துனியாவில் கெட்டவளென்றும் ஆகிறத்தில் அதாபிலுமகப்பட்டுக்கொள்வாள்; அவள் பெண்ணாக பிறந்தும் ஒரு பயனு மில்லையென்று பெரியோர்கள் பேசியிருக்கிறார்கள். அல்லாஹுத்தஆலா ஸுபுஹானஹு வத்தஆலா எல்லா ஆலங்களையும் படைத்தாளுகிறவன்; மிகுந்த குதறத்துள்ளவன்; அவன்தான் நாடியபடி யெல்லாஞ்செய்து முடிக்கிறவன். இப்பெருமை பொருந்திய றஹ்மான் எல்லோரையும் வெட்கத்

துடன் கார்க்கவேணுமென்று சொல்லி நிரம்பவும் வருத்தமடைந்து கைசேதப்பட்டு இச்செய்தியை நாம் ஸகரிய்யா நபிக்குச் சொல்லவேணுமென்று அவ்விடம் விட்டெழுந்து சீக்கிரமாக ஸகரிய்யா நபி யிடத்திற்கு வந்து, “ஓ நபியே! நான் மரியமிடத்திற்குப் போய்ப்பார்த்தேன். அதை எவ்விதமாகச் சொல்வேன், குடி கேடனுகிய இப்லீஸ் லஅனத்துல்லா மரியம் பேரில் அநியாயம் நடப்பித்தது போலத் தோணுகிறது. நானும் வயிரைத் தடவி தட்டிப்பார்த்தேன். ஏழுமாதத்தின் கற்பத்தைப்போல காணுகிறது. ஆனுல், மரியம் நாணத்திலும், ஒழுக்கத்திலும், வணக்கத்திலுமெத்த ஏற்றமுள்ளவளாக விருந்தாள். அவளுடைய ஒழுக்கத்திலிடிவிழுக. இப்படிப்பட்ட இளம்பிராயத்தில் புத்தியுற்றப் பெண்ணுகப்பிறந்தவளை குடிகேடனுகிய இப்லீஸு அநியாயத்தை நடத்தி படுதூராக்கி வைத்தான்” என்று சொன்னுள்.

இச்செய்தியெல்லாம் ஸகரிய்யா நபிக்கேட்டு கட்டில்லாத சலிப்பாகி, அழுது, ஈரல்வெந்து கருகிப்போனுர்கள். நாம் இப்படிப்பட்ட வேலைகள் செய்து கொடுத்தும், இப்படிப்பட்ட வேலையை மரியம் செய்தாளே என்று கோபாக்கினி மூண்டு, உடனே பீவி மரியமுடைய தாய்தகப்பனையுங் கூப்பிட்டு மூவருமாக பீவிமரியமிருக்கிற விடத்திற்குப் போய் பீவிமரியத்தைப் பார்த்து, “இம்ருனுடைய மகளே! உன் தாய் தந்தையினுடைய குலத்தையும் பெருமையையும் கெடுத்தாயே, அவர்களடக்கமுமொடுக்கமு முள்ளவர்களாயிற்றே, உன்னுடைய பாட்டனுர் யஃகூபு அலைஹிஸ்ஸலாமும் அல்லாவுடைய நபியாயிற்றே. அவர்போல் நீயும் துப்புரவாயிருக்கக்கூடாதா? நீ இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமுடைய கிளையிலுள்ள பெண். அவர் பாட்டனுர் இஸ்ஹாக்கு நபி. அவரும் நபிமார்களில் மிகுந்த சிறப்பையுடையவர், ஈஸ் ஸின்பவர் எஹ்யா நபியின் உடன் பிறந்தாளுடைய மகனுகவும், இத்ரீஸ் நபியுடைய் கிளையினருகவுமுள்ள உன் தாயைப்பெற்ற பாட்டனுர். எனது மகளே! உன்னுடைய தலை முறைகளெல்லாம் நபிமார்களுடைய வங்கிஷமாக விருக்க, அப்படிப்பட்ட வமிஷத்திற்கெல்லா முன்னைக்கொண்டு இழிவாக்கிவிட்டாயே, நீ ஹக்த்தஆலாவினுடைய வணக்கத்தில் நிரம்ப பயமாகவும் பேணிப்பாகவுமிருந்தாயே, இவ்விதம் துப்புரவாகிய நீ எப்படி ஷைத்தானுடைய வலைபிலகப்பட்டு கற்பவதி யானுய்? பெரியோர்களுடைய பெயர்களையெல்லாம் கெடுத்துவிட்டாயே. உன்னுல் நம்முடைய கிளையாராகிய ஆண்பெண்களின் முகமெல்லாங் கருகி வாடிப்போயிற்றே, உன் தாய் தந்தையினுடைய தலைமுறைகளை எல்லா மறுத்து கொடுத்து விட்டாயே, நீ செய்த கெட்ட

ஷினாவினால் இப்படிப்பட்டக்கெடுதிகளெல்லாம் வந்து நேரிட்டது. இனி உம்முடைய வீடாகிறது தேளுமரவமும் நெருங்கி கொழுந்து விட்டெறியுமான நரகமாயிற்று. இந்த க்ஷணமே உன் தலையை யறுத்துப் போடவேணும். ஷினாச்செய்த பெண்பிள்ளைகளுக்குத் துனியாவில் கெடுதியானப் பேருமுண்டு. ஆகிறத்தில் ஆயிர கணக்கான கொடூர அதாபுகளுண்டு. நீ அல்லாஹுஸுபுஹானஹுவத் தஆலாவினால் வேண்டாதவள்; அவனுடைய சொல்லை யுந்தப்பி கெட்டவேலையுஞ் செய்தாய். எங்களது மனம் மிகவும் நொந்து விசாரமாகி இப்படிப்பட்ட பெண்ணாகிய உன்னை சுறுக்காக மவுத்தாக்கி விடு, இப்பெண்ணைக்கொண்டு எங்களுடைய பெயரெல்லாம் இழிவாயிற்றென்று நாயனிடம் கேட்கிறோம். ஓ மரியமே! உன்னால் இவ்வுலகத்தில் எங்களுடைய முகத்தைக் காண்பிக்க நாணமாய் போயிற்றே'' யென்று சொன்னார்கள். இவ் வார்த்தைகளெல்லாம் பீவிமரியம் கேட்டு கைக்கால்கள் நடுக்கமாகி, உடலெல்லாம் கிடுகிடுவென்று நடுங்கி, நெருப்பிலிட்ட மெழுகைப் போல உருகி, தத்தளித்துத், தடுமாறி தன்னை மறந்து விட்டார். அப் போது ஈஸா நபி சூலிலிருந்து தாயாகிய மரியமிற்குத் தோன்றிய மனவருத்தத்தையும் பரிதாபத்தையுங்கண்டு ஸகரிய்யா நபியோடு முதலில் ஹக்த்தஆலாவினுடைய கலிமாவை லாஇலாஹ இல்லல் லாஹு வென்று சொல்லி "ஓ, ஸகரிய்யா நபியே! என்னுடைய தாயார் மிகவுந் துப்புரவானவர். அவரொரு பாவமுஞ் செய்தவ ரல்ல. இன்னுமென்னுடைய தாய் ஹக்த் தஆலாவினுடைய முனி வென்னும் பயத்தையென்னேரமும் நினைத்து வணங்குகிறவர். இப் படிப்பட்ட என் தாய் ஒருபோதும் ஷினாவையுகந்தவரல்ல. அவர் களைப்போல ஹக்த் தஆலாவினுடைய வணக்கத்தை செய்பவர் உலகிலொருவருமில்லை'' என்று சொன்னார்.

"ஓ நபியே நீரே நன்றாகச் சொல்லும், ஆண்டவனுக்கு குதறத் தில்லையா? தகப்பனில்லாமல் பிள்ளையை யுண்டாக்க, முதல் முதல் இவ்வுலகத்தில் மனிதர் வடிவாக ஆதநபியை தாயுந்தகப்பனுமில்லா மல் படைக்க வில்லையா? பீவி ஹவ்வாவை ஆத நபியுடைய விலாவி லிருந்து படைக்கவில்லையா? அப்படி என்னையும் மரியத்தினுடைய கெற்பத்தில் தரிக்கவைத்தான்'' என்று சொன்னார்கள். பின்னும், "ஓ ஸகரிய்யா நபியே! மஹாகனம் பொருந்திய ஹக்த் தஆலா தன்னு டைய நிரப்பமான குதறத்தைக் கொண்டு நாடினால் ஒரு நொடியில் தூணைத் துரும்பாக்கவும், துரும்பைத் தூணாக்கவும், கடலைதிட ராகவும், திடரைக் கடலாகவு மாக்கி விடுமான வல்லமையுள்ளவன் தன் குதறத்தைக்கொண்டு தோன்றாத மனிதர்களை வெளியாக்கி அவர்களுக்காக தீன் துனியாவைப் படைத்து நல்லது, கெட்டது, நன்மை, தின்மை, ஹறாம், ஹலால் இவைகளை யுண்டாக்கினானே,

அந்த ஆண்டவன் இந்த மிஸ்கீனாகிய என்னையும் படைத்தான். நீர் ஹக்த் தஆலாவின் குதறத்துகளைத் தெரிந்திருந்தும் தெரியாதவர்களைப் போல நிரம்ப அதிசயமாக எண்ணுகிறீரே. என் தாயாரைப்போல தீனிலும், துனியாவிலும் மிகுந்த உண்மையான நல்ல நடப்பை யுடையவர், ஒருவரையுங் காணமாட்டீர். அவர்கள் பேரில் எள்ளளவுஞ் சந்தேகம் நினைக்க வேண்டாம். அவர்களே நிரம்பவும் பத்தினியான கற்பழியாமங்கை. அல்லாவினுடைய அபுறுரென்னும் காஸ் மனிதர்களி லுள்ளவர். உயர்ந்த மருங்கி லுள்ளவர். அவர்களுக்கு உலகத்தில் புருஷனே இல்லை, அவர்களுக்குப் புருஷனாகிறவர் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களே யொழிய வேறொருவரில்லை; அந்த நபியாகிறவர் துனியாவிற்கும், ஆகிறத்திற்கும் பாதுஷாவானவர். எல்லா சங்கைகளும், பெருமைகளும் நிறைந்த காரணங்களைப் பூண்டவர். அவராகிய காத்திமுல் அன்பியா ஸய்யதுல் முற்ஸலீன் றஹ்மத்துல்லில் ஆலமீனென்னும் நபிக்கும் என் தாயாருக்கும் சுவர்க்கத்தில் நாகரீக மாகவும். புதுமையாகவுந் திருக்கலியாணமாகும், உனக்கு என் தாய் ஹறூத்தில் பிள்ளை யுண்டாயிருக்கிற செய்தியை சொன்னானே, அவனாகிறவன் லஃனத்துப்பெற்று மனிதர்களை ஒன்றுக்கொன்று பொல்லாங்கும் சூதுவாதுஞ்செய்து கெடுக்குமான இப்லீஸாகவிருக்கும். ஓ நபியே! நீ ஒருவருக்கும் சலுகையாகச் சொல்லவும் பேசவும் வேண்டாம். சொல்லுவோர் பேச்சை கேட்க வேண்டாம். ஒருவர் பேச்சுக்கும்போகவேண்டாம்'' என்று சொன்னார்கள். கற்பத்துள்ளிருந்து சொன்னமொழிகளை யெல்லாம் ஸகரிய்யா நபிகேட்டு மெத்த ஆச்சரியப்பட்டு அல்லாவின் குதறத்தை நினைத்துப் புகழ்ந்து அவ்விடம்விட்டெழுந்து பைத்துல் முகத்திஸிற்குப்போய் அங்குக் கூடியிருக்கிற பெருங் கூட்டமாகிய மனிதர்களைப்பார்த்து "ஓ ஜனங்களே! உங்கள்காதுகளைக்கொடுத்துக் கேளுங்கள், நான் பீவிமரிய மிடத்திற்குப் போனேன். அங்கு விஷுவினுடைய சந்தேகக் குறிப்புகளொன்று மில்லை. ஹமலாயிருக்கிறது உண்மையே. அதை யோசித்துப்பார்த்தால் ஹக்த் தஆலாவினுடைய குதறத்தின் ஹிக்மத்தாக விருக்கிறது. அவனுடைய குதறத்தைக்கொண்டு புதுமையாக பிள்ளை கற்பத்துள்ளிருந்து அதிசயமான விஷயங்களை யெல்லாஞ் சொல்லிற்று. அது என்னவெனில், நாளை கியாமத்தில் கேள்வி கணக்குகளெல்லாம் கேட்டு நீதமானபின் சகலபேருஞ் சுவர்க்கலோகம் போனபின்பு அங்கு பீவிமரியத்திற்கும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லத்திற்கும் விருந்தளித்து மணமுடிப்பாரென்றும், மரியம் பிள்ளை யுண்டான விதமெப்படி யெனில், ஆத நபியை முன் தாய் தகப்பனில்லாமல் படைத்து அவருடைய விலாவில் நின்றும் பீவி ஹவ்வாவைப் படைத்த றப்பு என்னையும் தகப்பனில்லாமல்

படைத்தானென்று ஆயிர விதமாக தலாத்துள்ள பேச்சுகளைப் போதிக்கின்றது. இதுவுமன்றி அந்தப் பிள்ளை மூதேவியாகிய இப்லீஸ் லஅனத்துல்லா உங்களுக்கு பீவிமரியம் ஹாரூத்திலே பிள்ளையுண்டா யிருக்கிறார்களென்று கலக்கமாகும்படி வந்து சொன்னிவன் என்றும் சொல்லுகின்றது. கடைசி காலத்தினுடைய நபியாக முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் வரும் விசளங்களையும் தெளிவாக சொல்லுகின்றது. அப்பிள்ளை வயிற்றினுள்ளிருந்து இவ்விதமான விசளங்களைப் பேசுகின்றதைப் பார்த்தால் என் மனது சாட்சி சொல்லுகின்றது. இப்படிப்பட்ட ரகசியமான பேச்சுகளைச் சொல்லுகிற பிள்ளை நுபுவத்துடைய நபியாக இருக்கவேணும். அப்படி யில்லாத பேர்களுக்கு இப்படிப்பட்ட குதறத்தேது" என்று சொன்னார். அப்போது பைத்துல் முகத்திஸிலுள்ள பேர்களெல்லாம் ஸகரிய்யா நபி சொன்ன அதிசயமான விசளங்களைக் கேட்டு மரியமுடைய கூட்டத்தார்களை எண்ணிக் கணக்கிடப்போகாது. ஒவ்வொரு கூட்டத்திற்கு ஆயிரம் பேர் கத்தி கட்டின சேவகப்பாடிகளா யிருந்தார்கள். அப்படிபட்டக் கூட்டத்தார் அக்காலத்தில் மிகுதமுண்டு.

பைத்துல் முகத்திஸிலுள்ள சிறியோர் பெரியோரெல்லாமொன்றாகக் கூடி பீவிமரியம் அல்லாவினுடைய வணக்கத்தில் நிரம்பப் பூணிப்பாகவும், துப்புரவாகவு மிருந்து ஒன்று மறியாத மூடதனத்தின் பெண்களை போல இப்படிப்பட்ட கெட்டக் காரியத்தை செய்திருக்கிறாள். ஷைத்தானுடைய மோசத்தி லகப்பட்டு நாணமற்று இக்கெடுதலையைச் செய்து, தான் கெட்டதுமன்றி யெல்லோருக்கும் அய்புந் தலைக் கவிழுதலுமாகச் செய்திருக்கிறாள். இப்படி கெடுதியுள்ள பெண்ணாகப் பிறந்தவளை ஒழுக்கமுள்ளவள் போலவும் வெண்ணலாகாது. இப்பெண்ணினுடைய நடத்தையெல்லாம் வெளிபுறத்தில் நல்ல நடப்பு மொழுக்கமுமுள்ளவள் போலவும், நாணமுள்ளவள் போலவும் உள்புறத்தில் செயல்களெல்லாம் மக்றும், ஹீலாவுமாக விருக்கிறது. ஆகையால் இவ்விதமுள்ளவளை வெட்டிபோடவேண்டும் இல்லாவிடில் பூமியினுள்ளாக உடலைப் புதைத்து விட்டு கூர்மைபொருந்திய அம்பெறிந்து கொல்லவேணும் அல்லது உயிரோடு தூக்கிலிட்டு கொன்றுபோட வேணுமென்றும் சொன்னார்கள். சிலரிப்படி செய்வது சரியல்ல, ஏனெனில், ஸகரிய்யா நபி என்னுடைய மகள் வினைச்செய்தாளென்றுச் சொல்வாராகில் அப்படிச் செய்யலாமென்றார்கள். அதிலும் சிலபேர் பீவிமரியம் கெட்ட நடத்தையுள்ளவரல்ல, அவர்களுடைய வமிஷமெல்லாம் மேலான வமிஷமாயிற்றே அவரால் கெட்டவேலைகளாகாதென்றார்கள். இன்னும் சிலர் தன் மகளுடைய பேச்சை மெய்யென் றேற்றுக்கொண்டு நமக்கெல்லா

மிப்படிப்பட்ட பேச்சைச் சொல்லுவதைப் பார்ததால் அவருக்குக் கொஞ்சமும் நாணமில்லை போலிருக்கிற தென்பார்கள். சிலர் பீவி மரியம் கற்பவதியாயிருந்து நல்ல நடப்பினை யுள்ளவராகவே யிருக்கிறார்கள். அதையோசித்துப்பார்த்தால் ஹக்த் தஆலாவினு டைய குதறத்தில் ஆக்கலும் அழித்தலும் மெய்யே என்பதில் ஒரு அய்யமுமில்லை என்றார்கள்.

மற்றும் சில அறிவீனர்கள் இப்படி தகப்பனில்லாமல் துனி யாவில் அல்லாஹூத் தஆலா கற்பவதியாக்கினதில்லை; நாங்களிது வரைக்குங் கைபாக பிள்ளையுண்டாகிறதைக் கேட்டதுமில்லை என் றும் பற்பலவிதமாகப் பேசுவதை அக்கூட்டத்திலொரு பெண் கேட்டு, அக்கூட்டத்தை விட்டெழுந்து நின்று, "ஓ சபை யோரே! பீவிமரியமுடைய காரியம் உங்களுக்கு எள்ளளவுந் தெரியமாட்டாது. யாராவது உலகத்தில் தன்னுடைய நாணத்தை தானே வெளிப்படுத்துவார்களா? ஓருவனுடன் நானிப்படிசெய்தே னென்று சொல்லுவார்களா? அப்படி யிருப்பதால் ஸகரிய்யா நபி தன் மகளுடைய வெட்கத்தைத் தானே வெளிப்படுத்துவாரா? அப் படி யிருந்தாலுமதை மறைத்து நல்ல உவப்பான வார்த்தையைச் சொல்லுவாரே யொழிய கெடுதியாக சொல்லமாட்டார்" என்றாள்.

பின்னொருபெண், வேறிடத்தில் இப்படிப்பட்ட வினவி னுடைய காரியம் நடந்திருக்குமேயானால் உடனே வெட்டிப் போடும்படி ஸகரிய்யா நபி சொல்வாரென்றாள். பின்னொரு பெண் நிரம்ப கோபத்தோடு ஸாகரிய்யா நபி தான் நபியாகயிருந்தும் ஷரீஅத்துக்கு மாறுபாடாக பேசுகிறார். இப்படி மாறுபேசுகிறது நபி தனத்துக்கு சரியல்ல, பெரிய தனத்திற்கும் அழகல்ல. இது அவருடைய நபி தனத்திற்கு நஷ்டமென்று சொன்னாள். மற் றொரு பெண் மரியம் சூலாயிருப்பதை ஸகரிய்யா நபி தன் கண்ணாற்கண்டு அதற்குத் தகுந்த தண்டனைச் செய்யாமல் தாமி தஞ்செய்திருப்பது வென்ன புதுமை? நாமவரை நபி யென்று எப்படி சொல்லுகிறது? எப்படி நாமவருடைய சொல்லுகளை யொப்பி உண்மைக்கொண்டு ஈமான் கொள்ளுகிறது? அவரை யார் பார்த்தாலும் இழிவாக எண்ணுகிறார்கள். மரியமுடைய இனத் தாரெல்லாம் தலைகவிழ்ந்துபேச வாயில்லாமல் போனார்கள். அவர் களுடைய கூட்டத்தார் தங்களுக்குள் தாங்களே நினைத்து மிகுந்த வெட்கத்தோடு அவர்களுடைய அறிவு புத்திகளெல்லாந் தடு மாறி, வெளியே புறப்படாமலும், தலை காட்டாமலுமிருக்கிறார் களென்றாள் இப்படிப் பல விதமாக ஸகரிய்யா நபியுடையக் கூட்டத்தார்களெல்லாங் கேட்டு ஒன்றாய்க்கூடி ஸகரிய்யா நபியைப் பார்த்து, "ஓ நபியே! ஹறுத்திலே சூலாயிருக்கிற பிள்ளை நபி

யாகப் பிறந்தாலும் நாங்கள் எப்படி அவர் நபியென்று உண்மைக் கொள்ளுகிறது. இவ்வுலகமடங்கலும் ஷரீஅத்தினுடைய ஹுக்கும்களுக்கு தலைசாய்த்து உடன்பட்டு நிலையா யிருக்கிறதால் உம்முடைய நபி தனத்திற்கு கெடுதிவந்து நேரிடும். உலகத்தாரெல்லாரும் உம்முடைய மார்க்கத்தில் நடக்கமாட்டார்கள். நம்முடனொருவருங் கூடமாட்டார்கள். இவைகளினால் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா தன்னுடைய வல்லமை பொருந்திய குதறத்தைக்கொண்டு மரியத்தை கைபாக சூலாக்கி விட்டானென்று சொல்லுகிறீர். இது உலகத்தாருக்கு மெத்தவும் நிந்தனையாகத் தோணுகின்றது, இப்படிக் கெல்லாம் பார்க்கலாகாது. மரியமை வெட்டவும், குத்தவும், அடிக்கவும் தூக்கிலிடவும், புதைக்கவுமாகாது" என்றார்கள்.

அவர்களுடைய சூலிலிருக்கிற சிசுவைப் பார்த்தால் மெத்தப் பெரியவராக விருக்கிறார். இனிமேல் மரியத்தை வீட்டிற்குள் மறைவில் வைக்காமல் காட்டில்கொண்டுபோய் விட்டுவிடுவது உத்தமமென்று தாய் தந்தை முதலிய சகலபேரும் மனமொத்து கூடிபேசினார்கள். பீவிமரியத்தை அம்மறவை நீக்கி, அவர்கள்வீட்டைவிட்டு வெளிப்படுத்தி காட்டிற்குக் கொண்டுபோய் விடப்பார்க்கும் பொழுது பீவி மரியம் தாய் தந்தை யில்லாத மிஸ்கீனைப்போலத் தோணப்பட்டது. அதனாலே சகலருக்கும் பீவிமரியம் நடந்த நடத்தையும், குணத்தையும், நினைத்து விசாரம் பொங்கி குடலைப் பிடுங்கிப் போட்டதுபோலாயிற்று

அப்போது பீவிமரியம் தன் தாய் தகப்பனை பார்த்து, "என்னைப்பெற்ற தாய் தந்தையே! நானிதுவரையும் ஒரு பாவமுஞ் செய்யவில்லையே! என்னை அநியாயமாக வெளிப்படுத்தாமல் வீட்டிலிருக்கும்படிவிடுங்கள். நீங்கள் என்னை பத்துமாதம் வரை கற்பத்தில் சுமந்து பெற்று இப்பொழுது வீணாக என்னை காட்டிலேன் விடுகிறீர்கள். இதன்றி உலகத்தில் பிள்ளையின்மேல் தகப்பனைவிட தாயாருக்கு மிகுந்த பிரியமுண்டென்று சொல்லுவார்களே; அப்படி யிருக்க, என் தாயே! இந்த மிஸ்கீன் பேரில் பிரியமில்லையோ? நான் உண்மையாக ஹறாம் செய்யவில்லை அல்லாஹு ஸுபுஹானஹவத் தஆலா எல்லா ஆலங்களையும் படைத்து அதற்குள்ளவைகளெல்லா முண்டாக்கி யாளுகிறவன். அவன் அந்தரங்கமும் பகிரங்கமு மறைவில்லாமலறிகிறான். நீங்கள் என்பேரிலிருந்த பிரியங்களெல்லாவற்றையும் நீக்கி, என்னை தன்னந் தனியாகக் காட்டில் விட்டுவிட எண்ணுகிறீர்களே; உங்களுக்கு கொஞ்சமாகிலு மனமிறக்க மில்லாமலற்று போயிற்றோ? நீங்கள் எனக்கு ஆயிர ஆயிர விதமான நிஃமத்துகளைக் கொடுத்து

N48

வளர்த்தீர்கள். உங்களுக்கு இப்பொழுது என்பேரில் கல் மனதாய் போயிற்றோ. நானொருபாதகமும் செய்யாதிருக்க ஏனென்னுணத்தைப்போக்குகிறீர்கள். என்னுடைய தகப்பனே! பெருமையுடைய என் பிதாவாகிய ஸகரிய்யா நபியே! நீருமென் தமக்கையும் என்னை வெறுப்பாகக் காட்டிற் கொண்டுபோய் விட நாடுகிறீர்களே! நான் எவ்விதமாக அக்கானகத்தில் தனியாக விருப்பேன்? என்பேரில் வினையினுடைய காரியம் நடந்திருக்குமேயானால் பிள்ளையும் வயிற்றினுள்ளிருந்து உங்களோடு பேசுமா? இந்த திருஷ்டாந்தரங்களினால் என்மொழியை துரிதப்படாமல் கேளுங்கள். இப்படி துரிதப்பட்டு பின்னால் கைசேதசப்பட்டோர்கள் மிகுதமுண்டு. ஆகையால் என் தாய் தந்தைமாரே! நன்றாக ஆலோசித்துப் பாருங்கள். சொல்வார் பேச்சுகளைக் கேட்பதிலும், வீரியங்கொள்வதிலும், பெரிய பெரிய கேடுகளுண்டு. நான் உலகப் பெண்களைப்போல அறிந்து மறியாமலும் பாவஞ்செய்தவளேயல்ல. என் பேரிலுகப்பும் கிருபையுஞ் செய்து அறிவினாலாராய்ந்து பாருங்கள். உங்களுக்கு நான் வினைச்செய்தவளென்று சந்தேகந் தோன்றுமேயாகில் விஷத்தைக் கொடுத்துக் கொன்று போடுங்கள். இல்லாவிடிலொரு பாழ்கிணற்றில் தள்ளிவிடுங்கள். என் பரிசுத்த முங்களெல்லாருக்குந் தெரிந்தும் எங்கும் பிரசங்கமாகவுமிருக்கிறதே; என் வயிற்றினுள்ளிருக்கிற பிள்ளை நடந்த செய்தி எல்லாஞ் சொல்லிற்றே; இந்த திருஷ்டாந்தர மொன்றே போதாதா? நானும் சிறு வயதுள்ளவள். இதுவரைக்குந் தனியாகப் புறப்பட்டு ஓரிடத்திற்கு போனவளுமல்ல. ஒருவருடனும் கூடினவளுமல்லவே. அப்படியிருக்க இன்று என் தலைமீது வானமுமிடிந்து விழுந்திட்டதே" என்று மிகுந்த தாட்சிணையோடு சொல்லி தன் கண்ணிலிருந்து மாலை மாலையாக முத்துதிர்வது போல அழுதார்கள். அன்று எல்லாருமவர் சொல்லிய துக்கமாகிய சொற்களைக் கேட்டு, அழுது கைசேதப்பட்டு தீயிலிட்ட வங்கம் போலுருகி பெருமூச்சு விட்டு சித்திரம் போலாயினார்கள்.

பின்னர் சகலரும் பீவிமரியத்தைப் பார்த்து நாங்களுன்னை எப்படி வைத்திருப்போம். உலகத்தாரெல்லாம் நீ வினைச் செய்தாய் என்று சொல்லுகிறார்கள். ஆகையால் நம்முடைய ஷறஹிற்கு நாமே மாறு செய்யலாகாதென்று சொல்லி, உடனே பீவி மரியத்தை வீட்டை விட்டு வெளியாக்கி யழைத்துக்கொண்டு போய் கொடிய கானகத்தில் விட்டு விட்டார்கள்.

அப்போது ஸகரிய்யா நபி தன்னிரண்டு கைகளையும் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவின் புறமாக உயர்த்தி "என்னை உண்டுபண்ணி யாளுகிற நாயனே! சகலவற்றையும்

No. ______
111152

படைத்தவனே! என் மகள் மரியம் மிகுந்த துப்புரவும், வணக்கமு முள்ளவர்; பொருமையு முள்ளவர்; அவர் உலகத்தினுடைய பொல்லாங்காகிய இடுக்கத்தைக்கொண்டு எங்களுக்கு மனது இடைஞ்சலாய் விட்டது, என்னையனே! இன்று இக்காட்டில் தனியாக உன்காவலில் விட்டு விட்டேன்; எல்லாரகசியங்களை அறிபவனுக்கு யாதொரு மறைவில்லை; நீ மிகுந்த (றஹ்மான்) றஹீம் ஆகையால் உன்னுடைய மஹாகனம் பொருந்திய கிருபையைக்கொண்டு மரியத்திற்கு கைபாகப் பிள்ளையைக் கொடுத்தாய். அது ஷரீஅத்திற்கு மாறுக விருக்கிற படியால் காட்டிற் கொண்டு வந்து உன்னிடத்தில் ஒப்புவித்தேன். இங்கும் எங்கும் உன்னுடைய குதறத்தினுதரவே யன்றி வேறொருவருடைய ஆதர வில்லை'' என்று துவாக்கேட்டார்கள். பின்பு ஸகரிய்யா நபி பீவிமரியத்தை இருண்டவனத்திற் கொண்டுபோய் விட்டு விட்டு திரும்பி வீடுவந்து விட்டார்கள்.

அப்போது பீவிமரியத்திற்கு விசனம் பொங்கி கியாமத்தினுடைய நாளைப்போல விருந்தது. அந்நேரத்தில் சூறைக்காற்று நிரம்ப கடினமாக வந்தது. அக்காற்றினுல் மரங்களெல்லா முறிந்துத்துண்டு துண்டாய் விழுந்து போயிற்று. கற்களெல்லாம் பஞ்சு பரப்பதுபோல பரந்து போயிற்று, மனிதர்களும் கணக்கில்லாமல் இறந்து போனுர்கள். இப்படி கொடூரம்பொருந்திய பெருங்காற்றடித்தும்கூட மழையுங் கனமாப் பொழிந்தது. அம்மழைத் துளிகள் கற்குண்டுகளை எரிவது போல் விசையாக விழுந்தது. அம்மழைத் துளிகள் மனிதர்கள்மேல் விழுந்தால் மூர்ச்சையாய்க் கீழேவிழுவார்கள். அம்மேகத்திலிருந்து இடியிடித்ததால் அவ்விடியின் சத்தத்தால் மனிதர்களுடைய ஈரல்களெல்லாந் துண்டு துண்டாய் கலங்கி நீராய்விடும்போலிருந்தது. இப்படிப்பட்டக் காற்றும் மழையுமானது எத்தனையோ கப்பல்களை கவிழ்த்தியது எத்தனையோ பறவைகளும், ஆடுமாடுகளு மிறந்துபோயின. அநேக மாடங்களு மிடிந்து போயின. அக்காற்ருனது, நூஹு நபியுடைய காலத்தில் அடித்த தூபானென்னும் பெருவெள்ளமும் காற்றும் எப்படி இருந்ததோ அதுபோல விருந்தது. எங்கும் கூகூவென்னுஞ் சத்தமாகவே யிருந்தது. அந்நேரத்தில் கொடூர விருளாக மூடிக்கொண்டது. அந்த இருளில் பீவிமரியம் கீழே விழுந்து நித்திரை யற்று கைகாலெல்லாம் நடுக்க முண்டாகி அறிவுந்தடுமாறி, பின்பு தெளிந்து கண்ணைத்திறந்து பார்க்குமளவில் வானம் பூமி யென்றுந் தெரியாமல் போயிற்று. அன்று பீவிமரியமுடைய தலையிலும் உடலிலும், முழங்கையிலும், உதட்டிலும், காயம்பட்டு உதிரங் கொப்பளித்தன. அது கண்டு பீவிமரியம் தன்னுணர்வுகொண்டு எழுந்திருக்க முயற்சித்தார்கள். அலையுங்காற்று

மடித்து எழவொட்டாமல் கீழே வீழ்த்தின. விழும் பொழுதிலொன்றுந் தெரியாது. பிடித்து நிற்க ஒரு ஆதரவு மில்லை. இப்படிப்பட்ட இடுக்கணான நேரத்தில் பீவிமரியத்திற்குக் குளிர்ச்சியினால் பற்கள் கிட்டி எழவல்லமையற்று உடல் நடுக்கலாய் பேதலிப்பாக ரொம்பவும் பயந்து ஹக்த் தஆலாவிடத்திற் கெஞ்சி, "என்னைப் படைத்தாளும் நாயனே! இவ்விக்கட்டாகிய நேரத்தில் உன்னுதரவே யன்றி வேறொருவருடைய ஆதரவில்லை. உன்னுடைய பெருமை தங்கிய றஹ்மத்தைக்கொண்டு என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிற ஆபத்தை தூராக்கி நான் மீளும்படி செய்" என்று துவாக் கேட்டார்கள்.

அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா தன் குதறத்து பொருந்திய றஹ்மத்தைக்கொண்டும் பீவிமரியம் கேட்ட துவாவை கபூல்செய்து கொண்டான். ஒரு மின்னல் மின்னினது. அம்மின்னலின் வெளிச்சத்தினால் அங்கொரு மரமொன்று தெரியலானது. அது கண்டு பீவிமரியம் உடனே அம்மரத்தடியிற் சென்று அல்லாஹுஸுபுஹானஹுவத் தஆலாவே போதுமானவனென்று புகழ்ந்து அதை விட்டு நீங்காமல் அவ்விடமே தரிபாடாக விருந்தார். அம்மரம் வெகு காலமாகக் காய்ந்துலர்ந்து பட்டுப்போயிருந்தது. அம்மரத்தடியில் வெகுகாலமாக ஒரு நாகப் பாம்பு குடியாகவேயிருந்தது. அங்கு பீவிமரிய மிருக்கக்கண்டு அப்பாம்பு அருகே வந்து, ஓ பீவிமரியமே! உம்முடையபேரில் இப்படிப்பட்ட முஸீபத்தாயிற்று; நானிம்மரத்தடியில் 300-வருஷ காலமாக விருக்கிறேன். என்னிடத்திற்கு ஒருவரும் வருவதற்கு வல்லமையில்லை. இப்படிபட்ட விடத்திலே நீர் உம்முடைய மனவருத்தத்தினாலே வந்தீர். நானுன்மேல் குருபானியாய் விடுவேன். என்னை விட்டு நீங்காமல் என்னிடமே யிருமென்று நாகம் ஸலாம் சொல்லிப்போய்விட்டது. பிறகு பீவிமரியம் அம்மரத்தடியில் யிருந்து, களைபாறி ஆண்டவன் புறமாக ஷுக்கூறு செய்தார். பின்பு அல்லாஹுத் தஆலாவினுடைய றஹ்மத்தைக் கொண்டு வெகுநாளாகப் பட்டுப்போயிருந்த மரம் குபீலென்று துளிர்விட்டு அடுக்கடுக்காக இலைகள் நெருங்கி அடர்த்தியாக விருந்தபடியால் அம்மரத்தடியில் மழைத்துளிகளும் காற்றும் வீசவில்லை. அந்த பேரீத்தமரத்தில் பூத்துக் குலைகுலைகளாகக் காய்த்து மிகுந்த மதுரம்பொருந்திய பழங்களும் பழுத்து விட்டது. அந்நேரம் காற்றும் மழையும் நீங்கி சவுக்கியமுண்டாயிற்று. அப்பொழுது பீவிமரியம் தான்பட்ட வருத்தங்கள், தன்விதி, வளர்ப்பு, தான்பட்ட முஸீபத்து, காற்று மழையில் அடிபட்டது, தான் இனத்தாரைவிட்டு கானகத்தில் பிரிந்துழலுதல் பயித்துல் முகத்திஸில் நபிமார்களின் சப்தத்தை தாம்கேட்டல், முதலியவை

களை நினைத்து நினைத்துச் சலித்துக் கருகி யுருகிக் கண்ணீரைத் தாரைத் தாரையாக யுகிர்த்தார்கள். இக்கொடிய காட்டில் பலபல விதமாகிய பறவைகளின் சத்தத்தைக்கேட்கிறேனே, இக்கானகத்தில் மரங்கள், மலைகள், ஊர்வினம், பரவையினம், நாற்காலிதுகளெனக்கு துணையாயினதே, எனக்குக் காடே வீடாயிற்றே, என்தாய் தந்தை முதலிய சகல இனபந்துக்களுடைய மனதெல்லாங் கல்லாயிற்றே, கொஞ்சமாகிலு மென்பேரிலிரக்கமில்லாமல் இப்படிப்பட்ட காட்டில் கொண்டுவந்து விட்டுபோனதின் துணிபு என்னவோ! என்றும் தன்னுடைய அதிர்ஷ்டம் ஒருவருக்குமில்லை என்றும் நினைத்தார்கள். பாம்பின்வாயிலகப்பட்ட தேரைப்போல பல பலவற்றை நினைத்த பீவி மரியமுடைய துக்கவெள்ளம் கரை புறண்டது.

நானிந்த கானகத்தில் யாரைக் கூப்பிடுவேன்; யாருடன் பேசுவேன்; ஒருதுணையுமில்லையே, நானென்னென்றுரைப்பேன்; என்னை இக்காட்டிலுள்ள ஜீவன்கள் வந்து புசித்துப்போட வில்லையே, என்று கதறினர். பின்பு, என்னைப் படைத்து ஆளுகிற நாயனே! நானுகிய அடியாள் மிகுந்தப்பாவஞ் செய்தவள் என (றப்பே) இவ்வெளிய அடியாளை பாராவிடினும் என் வயிற்றிலிருக்கிற பிள்ளையின் சங்கையைக்கொண்டு பொருத்துக் கிருபைச்செய். நீ ரகசியம் பாரசியமெல்லாம் யாதொரு மறைவின்றி யறிகிறவன்; எனக்கு உன்னுடைய உதவியொத்தாசையே யன்றி மற்ற யாருடைய உதவியொத்தாசையுமில்லை. உன்னுடைய மஹாகிருபையுள்ள குதறத்தை நாடிக்கொண்டிருக்கிறேன். ஆகையால் துனியாவினுடைய பலாமுஸீபத்துகளை விட்டும் என்னை நீக்கி விடுவாயென்றுக் கெஞ்சி துவாக் கேட்டிட நாயனுடைய கிருபையைக்கொண்டு, ஈஸா நபி சூலிலிருந்து, "ஓ அறிவுந் தெளிவுமுள்ள என் தாயாரே! நீ ஒரு நாளும் இப்படிப்பட்ட சொற்களை வாய்திறந்து சலிப்பாகச் சொல்லிய தில்லையே, இன்றும்முடைய மனதின் வியாகூலத்தினுல் இவ்வசனங்களை வசனித்தீர். ஆயினும் அல்லாஹு ஸுபுஹானஹுவத்தஆலா எவ்வித குதறத்துள்ளவனெனில் எறும்பு முதல் எண்ணுபிர ஜீவ ஜந்துக்களுக்கு மிரணங் கொடுத்து கிருபைச்செய்து பாதுகாத்து வளர்க்கிறவன். நீ தனியாக இவ்வனத்திலிருக்கிறதைக் கொண்டு எள்ளளவும் பயப்படவேண்டாம். சகல படைப்புகளின் பேரிலும் அவனுடைய காவலாகிய குதறத்தின் பார்வையுண்டு. இக்காட்டிலுனக்குத் துணையில்லையென்று பயப்பட வேண்டாம். உமக்குத் துணையாக உம்முடனே யென்னேரமும் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். நீர் எதைக் கேட்கிறீரோ அதற்குடனே நான் பிரதி சொல்லுகிறேன். உம்முடைய விசனத்தின்

சலிப்பைக் கொண்டு நானென்னேரமும் மிருந்த சலிப்பாகவே யிருக்கிறேன். உண்மையாக என்ன கேட்கவேணுமோ அதுகளை என்னைக்கேளும். அதற்கு மறுஉத்தரவு தருவேன். நீயும் நானும் ஒரேயகத்திலிருந்து பேசிக்கொண்டிருக்கும்படி அல்லாஹுத் தஆலா இப்பெருமையுஞ் சங்கையுங் கொடுத்து உம்முடைய வயிற்றி லென்னை நபியாக உண்டாக்கி நபிப் பட்டத்தையுங் கொடுத்து என்னுடைய காரணங்களை உலக மெங்குந் தெரியும்படியாயுண்டாக்கி யிருக்கிறான். ஆகையால் என்தாயே! நீ என்னைக் கொண்டு என்னேரமுஞ் சந்தோஷமாக விரும். நீ ஒன்றுக்குஞ் சந்தேகமும் ஆலோசனையுஞ் செய்ய வேண்டாம். உம்முடைய பரிசுத்தமாகிய துப்புரவைக்கொண்டு உமக்கொரு குறைவும் வராது. நீரிவ்வனத்தி லெவ்வளவு சங்கடம் பட்டீர்களோ அதற்காக அல்லாஹு ஸுபுஹான ஹுவத் தஆலா மெத்த ராஹத்தான சவுக்கியத்தைக் கொடுப் பான்" என்று பற்பல இன்பமான மொழிகளெல்லாஞ் சொல் லிற்று.

அம்மொழிகளையெல்லாம் பீவிமரியங்கேட்டு மயிர்க்கால்க ளெல்லாம் பூரித்து தன் மனதினுள்ளிருந்த நோக்காடெல்லாம் நீங்கி ஆயிரவிதமான சந்தோஷங்கள் பொங்கி சலிப்புயாவற்றுங் காற்றில் பருத்தி பறப்பதுபோல் பறந்துபோய் விட்டது. பின்னும் இப்படி ஏதாவது வருத்தங்கள் வந்தால் தன்வயிற்றிலுள்ள பிள்ளை யோடு சொல்வார். இப்படி நடந்தேறி வருகிற நாளையில் அல் லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவின் கட்டளைப்படிக்கு பீவி மரிய மிடத்திற்கு ஹூறுல் ஈன்பெண்கள் வந்து என்னேரமும் வித விதமான நல்ல பொருள்களையும், சந்தோஷத்தை கொடுக்குமான பயித்துகளையும் பாடி நல்ல ருசியும் வாசனையு முள்ளக் கனிகளையும் கொண்டுவந்து கொடுத்து தலைமுழுங்காட்டிப் போவார்கள். அதனால் விடுகிற மூச்செல்லாம் சந்தோஷத்தின் மூச்சாகவே யிருந் தது. இவ்விதமாக நாளுக்கு நாள் நடந்தேறிவருகிற நாளில் வளர் பிறை வளர்வதுபோல நாளுக்கு நாள் சூலவளர்ந்துக் கொண்டே வந்தது. மாதமும் நிறைவானது, அப்போது ஈஸா நபியும் தாயு டைய சூலை விட்டு உலகத்தில் தோற்றுமான வேளையும் நெருங் கிற்று.

அந்நேரம் அல்லாஹு ஸுபுஹானஹு வத்தஆலாவினுத்திர வின்படி ஹூறுல் ஈன்கள் சுவர்க்கலோகத்திலுள்ள அழகு பொருந் திய திரைகளைக்கொண்டு வந்துக் கட்ட ஆரம்பித்தார்கள். அத்தி ரைகளுக்குமேலே விசித்திரம் பொருந்திய அழகான வேலைகள் செய்திருந்தது. அதனுடைய சிறப்பையும் அழகையும் இவ்வண

வென்று சொல்ல முடியாது. பின்னும் ஹூறுல் ஈன்கள் கலந்த ரென்னும் பட்டுடையும் சுந்தூஸென்னும் பட்டுடையும் முறசா வென்னும் பட்டுடையும் கொண்டு வந்தார்கள். பின்னும் சுவர்க்க லோகத்தினுடைய விரிப்புகளை யெடுத்துக் கொண்டு வந்து விரித்தார்கள். அவ்விரிப்பினுடைய பிரகாசமானது நிலவும் அதன் முன் வெட்கித்து கருகிப்போகக்கூடியதாயிருந்தது. அதனுடன் பொன் தங்கத்தினாற் செய்த முத்து, கெம்பு கோமேதகம், புட்பராகம் பலமணிகள் பதித்தகட்டிலொன்றும் கொண்டு வந்துபோட்டார்கள். அதினுடைய பிரகாசம் சந்திரனும், சூரியனும் முளைப்பதுபோல யிருந்தது. பின்னுமொரு பச்சை மரகதத்தினாற் செய்யப்பட்ட தவிசு ஒன்று போட்டார்கள். அதின்மேலெத்தனையோ தலையணியும்போட்டு அதையுங்கொண்டுவந்து வைத்தார்கள். பின்னும் மாணிக்கத்தினாற் செய்திருக்கப்பட்ட தொட்டிலொன்று அதற்கு கயிறுகளெல்லாம் முத்தினாற் கோற்கப்பட்டு ஜாலர்கள் முறஸ்ஸாவெனு மிரத்தின முத்துகளினாற் தொங்கல் விட்டு நகமுகமுங் கிந்தில்கள் கட்டி சிங்காரித்து அலங்கிர்தமுள்ள தொட்டிலைக்கொண்டு வந்து அம்மரத்தில் கட்டினார்கள். அதனுடைய பிரகாசமானது சூரியனும், சந்திரனும், வெட்கிப்போகுமானதாயிருந்தது இன்னும் பலபலவிதமாகிய அம்பர், கஸ்தூரி, அத்தர், முதலிய மணவகைகளும் கொண்டுவந்தார்கள்.

அக்காட்டில் அன்றிரவுச் செய்த சிறப்பையும், அலங்காரத்தையும் இவ்வளவென்று சொல்லவும் எழுதவும் முடியாது. அன்றிரவு லைலத்துல் கதரினுடைய இரவை போலிருந்ததென்றும் ஒப்பிடலாகாது. அன்றிரவு மிருந்த ஹூறுல் ஈன்கள் பூமியினிடமாக அக்காட்டி லிறங்கினார்கள். இன்னமும் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமும் முகர்றபான மலக்குகளும் விதவிதமாகிய சிங்காரிப்போடு காவலாக யிறங்கினார்கள். அப்போது பீவிமரியமிற்கு மாதமுஞ் சரியாய் வயிற்றில் பிரஸவ வலிஉண்டானது. மலக்குகளும், ஹூறுல் ஈன்களுமாகத் கட்டிலடங்காத சந்தோஷமடைந்து ஹூறுல் ஈன்கள் பணிவிடைக்காரராகவும், மலக்குகள் காவலாட்களாகவுமிருந்தார்கள். அப்படி யிருக்கையில் கெர்ப்பம் வெளிபடுமான வேளையும் நெருங்கி, வலியுர்தோன்றினபடியால் அன்று ஹக்கதஆலாவின் உத்திரவுபடி ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் முத்துமணிகளினாற் சிங்காரித்த இறகினால் தடவினார். உடனே பீவிமரியமிற்கு வலிமிகுதமாய் ஜிப்ரீலினுடைய இறகின்மேற் சாய்ந்தது. அப்பொழுது ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் மூன்று தரம் தன்னிறகினால் தடவிவிட அல்லாஹூ ஸுபுஹானஹூ வத்த ஆலாவின் தூதாரிய ஈஸா நபி பதினாலாம் பக்கத்து நிலவு மாசியை விட்டு வெளியாவது போல தாயினுடைய றஹமை விட்டும் பிறந்தார். இதன்றி

இன்னுமொரு கவுலில் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் "ஓ அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவினுடைய நபியே! நீர் கெர்ப்பத்தை விட்டு வெளியே வாரும். உம்முடைய அழகுநிறைந்த முகத்தைக் காட்டும். உம்மைப்பார்க்க வேணுமென்று அநேக மலக்குகள் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி தாங்கள் வெளியே வந்து உள்ளேயிருக்கிற ஹூறுல் ஈன்களை கூப்பிட்டு, "நீங்களிப்பிள்ளை பிறக்க உலகத்தார்களெப்படி பிள்ளைகளுக்குச் செய்வார்களோ, அது போலவே நீங்களுஞ் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார் என்பதாக வந்திருக்கிறது. ஈஸா நபி பிறந்தவுடனே ஹூறுல் ஈன்கள் ஹெளதுல்கௌதருடைய நறுமணம் பொருந்திய ஜலத்தைக் கொண்டு வந்து இருவரையும் முழுகாட்டி பீவிமரியத்தை தவிவலின் மேலும் ஈஸா நபியை தொட்டிலிலும் போட்டார்கள்.

பின்பு மலக்குகளும், ஹூறுல் ஈன்களும் கைகட்டி நின்று மிகுந்த அதபுடனே ஸலாம் சொல்லி சுவர்க்கத்தினுடைய ஆடையைக்கொண்டு வந்து இருவருக்கும் உடுத்து, சுவர்க்கத்தின் முத்து மணிகளை தட்டில் வைத்து இருவரையுஞ் சுத்தி, சுவர்க்கலோகத்திலுள்ள நாகரீகமான பற்பல விதமான கனிகளையும் கொண்டு வந்து கொடுத்து சோபனங் கொண்டாடினார்கள். ஜிப்ரீல் முதலிய மற்ற மலக்குகளும் ஹூறுல் ஈன்களும் கூடி, "அஸ்ஸலாமு அலைக்கும் எங்களுடைய பாதுஷாவே! அல்லாஹு ஸுபுஹான ஹுவத் தஆலா உமக்கு தந்த சங்கையையும் பெருமையையும் மட்டிட்டுச் சொல்ல ஒருவராலு முடியாது" என்று சொன்னார்கள். ஈஸா நபி அவர்கள் சொன்ன ஸலாத்திற்கு ஜவாபு சொல்லி ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாத்தை நோக்கி, "எனனுடைய தாயாருக்கு அல்லாஹு ஸுபுஹானஹு வத்தஆலா தனனுடைய றஹ்மத்தைக் கொண்டு என்னை அவர் வயிற்றில் தறிபாடாக்கி எனக்கு நபி பட்டத்தைக் கொடுத்து நானுங்களைப் பார்க்கும்படியாக வெளியாக்கினார்" என்று சொன்னார்கள். இவ்விதமாக நடந்து வயதேறிவரும் நாளில் மற்ற தாதராகிய இப்லீஸ் லஃனத்துல்லாவிற்கு எரிச்சலும், புகைச்சலுமதிகமுண்டாகிபொறுக்க முடியாமல் மனவெறுப்போடு ஊரினுள்வந்து "ஓ ஜனங்களே! பீவிமரியம் காட்டிலொரு ஆண் பிள்ளையைபெற்றார்கள். அழகு அழகான வடிவுள்ள ஆண்களும் பெண்களுமாகக் கூடியிருக்கிறார்கள். அங்குள்ள ஆண்பிளளைகளெல்லாரும் பீவிமரியத்தின் மேல் வெறி பிடித்தவர்கள் போல மயங்கி சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு அவ்விடத்தில் நடக்கும் வேலைகளொன்றும் நன்றாகதோன்றவில்லை. இதனால் மரியம் பேரில் சந்தேகமாயிருக்கிறது" என்று எல்லாருக்குங் கலக்கமுண்டாகும்படி கோள்சொன்னான். ஊரடங்கலும் அவன் வந்து சொல்லியவார்த்தையைக்கேட்டு ஒருவருக்கொருவர் தங்க

ளுக்குள் தாங்களே யோசனைகள் செய்து தாங்களெல்லாரு மொன்றாக சீக்கிரமாகக் கூடிபோய் அவ்விடத்தைவிட்டு மரியத்தை புரட்டிப்போடுவது நல்லதென்றும் தாங்களெல்லாருஞ் சீக்கிரமாய் போய் உயிரைப்போக்கிட வேணுமென்றும், ஒருமைபடபேசி௯ஹரை விட்டெல்லோருமெழுந்து பெருங்கூட்டமாகக் கூடி ஆளொன் றிற்கு இரண்டு கல்களெடுத்து மடியிற்கட்டிக்கொண்டு சிறியோர் பெரியோருமாக பீவிமரிய மிருக்கிற காட்டினிடமாகப் போனார் கள். அக்காடு அலங்கிர்தமாக இருக்கிற அதிசயத்தைக் கண்டு அவர்களுடைய அறிவுகளெல்லாந் தட்டிக்கெட்டுத் தடுமாறி சுவற்றி லெழுதிய சித்திரம் போலசையாமல் நின்றுபெருமூச்சு விட்டார்கள். பின்பு அப்பிள்ளையைக் கண்ணுறக்கண்டு 'இப் பிள்ளை சந்திரன் சூரியனுடைய ஒளிவைப்போல யிருக்கிறதே' என்று அதிசயப்பட்டு அவ்வழகையும், வடிவையும், முகத்தையும் நோக்கி மெய்மறந்து வெட்டுண்ட மரங்கள்போல நின்று விட் டார்கள்.

அக்கூட்டத்தார்கள் பிள்ளையை, பதினாலாம் பக்கத்து நிலவு மாசியுள் மறைந்து வெளிப்பட்டாற்போலும், இருட்டில் விளக்கு தோன்றினபோலும், மேகத்தில் மின்னல் வெளிப்பட்டாற் போலும், கண்ணொளிவுகள் மங்கத்தக்கதாகப் பார்த்து, பிரமித்தார்கள். பின்னர் பீவி மரியமிடத்திற்கு வந்து, "ஓ அம்மா! உமக்கு இப்படிப்பட்ட சூலைப்படி உண்டாயினது. அந்த விதங்களையெல்லாம் ஆதியோடந்தமாக எங்களுக்கு நன்றாகத்தெரி யும்படி சொல்லென்று கேட்டார்கள். அதற்கு பீவிமரியம் தன் வாயிற்றன் விரலைவைத்து கடித்து அவர்களின் முகத்தைப்பார்த்து, "நான் சூலாயின விதங்களை எல்லாம் என் சுந்தரனாகிய பிள்ளையைக் கேளுங்கள். அப்பிள்ளை ஆதியோடந்தமாக உங்களுக்கு தெரிய சொல்லும்" என்று சொன்னார்கள். அச்சொல்லை ஸகரிய்யா நபி கேட்டு இரண்டுபேரை தன்னருகாக அழைத்து நீங்களிரண்டு பேரும் ஈஸா நபியினிடத்திற்குப்போய்க் கேளுங்களென்று சொல்லியனுப்ப, அவர்கள் இரண்டுபேரும் ஈஸா நபியின் கிட்டே போய்க் கேட்டார்கள். அவர்கள் அதபோடு ஈஸா நபிக்கு ஸலாம் சொல்லாமல் கேட்டதால் அவர்களுக்கொன்றும்பதில் சொல்ல வில்லை. பிறகு ஸகரிய்யா நபி வந்து ஸலாஞ்சொல்லி, "ஓ ஈஸா நபியே! நீ எப்படி தகப்பனில்லாமல் சூலில் தறிபட்டாய் என்பதை நன்றாகத் தெரியும்படி சொல்" என்று கேட்டார்கள். ஈஸா நபி ஸகரிய்யா நபியுடைய சத்தத்தைக்கேட்டு உடனே தொட்டிலைவிட்டு கீழேயிரங்கி ஸலாத்திற்கு பிரதி சொல்லி (லா இலாஹ இல்லல்லாஹு) என்று கலிமாவை யோதி "நான் அல்லாவிற்குகந்த மிகுந்த உவப்புள்ள அடியான், அவனுடைய

றஸூலாக விருப்பேன் அவனெப்படிக் கொற்ற றஹமத்து பொருந்திய றஹ்மானே யானால் அவனைப்போ லொன்றுமில்லை, ஒன்றைப்போலவனுமல்ல. அஹதானவன், உண்மையானவன், இணையுமற்றவன், பெண்டீரும் பிள்ளையுமற்றவன், அவனையொருவரும் பெறவில்லை, அவனொருவரையும் பெற்றவனல்ல. இப்படி பரிசுத்தம் பொருந்திய றப்பினுடைய வணக்கத்தை சந்தேகமின்றி வணங்கிடுங்கள். என்பேச்சை மெய்யென்றெண்ணிக் கேளாமல் வெறிகொண்டோர்கள் போலத்திறிந்தலைகிறீர்கள். நான் வெறி கொண்டலைவோர்களுடன் எவ்விதம் பேசுகிறது, எதை சொல்லுகிறது'' என்று அவர்களுக்கெல்லாம் நாணம் பிறக்கும்படியாகவும் எல்லாருங் கேட்கும்படியாகவும் சொன்னார்கள்.

அவர் சொல்லிய வசனத்தை பெரியோர், சிறியோரெல்லாங் கேட்டு ஒருவருக்கொருவர் தங்களுக்குள் தாங்களே அதிசயப்பட்டார்கள். அப்போது ஈஸா நபி அவர்களைப்பார்த்து, "அல்லாஹுத் தஆலாவினுடைய அடியார்களே! என்னுடைய வசனத்தை நன்றாக வெளிரங்கமாக உங்களுக்கெல்லாந் தெரியும்படியாகச் சொல்லுகிறேன். அதை உங்களுடைய காதுகளைக்கொடுத்து நன்றாகக்கேளுங்கள். என்னுடைய தாயார்பேரில்நீங்களெல்லாம் இல்லாததும்பொல்லாததுமாகப் படுதூறுகள் பேசி கொல்லவேணுமென்று ஏனெண்ணுகிறீர்கள். நான் சூலாயின விதங்களை கேட்டீர்களே அதை நான் உங்களுக்கு நன்றாகச் சொல்லுகிறேன். அதை நீங்களெல்லாருங் கேட்டு யோசித்துப் பாருங்கள். பூலோகத்தில் அல்லாஹு ஸுபுஹானஹு வத்தஆலா முந்தி மனிதர் படைப்பாக ஆத நபியை தாய் தகப்பனில்லாமற் படைத்த பின்பு பீவி ஹவ்வாவை அவருடைய விலாவில் நின்றும் படைத்தான். அப்படிப்பட்ட குதறத்துள்ள (றஹ்மான்) என்னையுந் தகப்பனில்லாமல் என் தாயினுடைய வயிற்றி லுண்டாக்கினான். அவன் மிகுந்த குதறத்துப், புதுமையும், நிறைந்த ஹிக்குமத்தும் பெருமையு முள்ளவன். இன்னுமவனுடைய குதறத்தைக்கொண்டு தானநாடியபடி எல்லாஞ் செய்து முடிக்கக் குதறத்துள்ளவன். இன்னமும் ஏழுதட்டுவானமுமொன்றோடொன்று தாங்காம லடுக்கடுக்காக யாதொரு தூண்களுமில்லாமல் நிற்கச் செய்தவன். இன்னும் பூமியை தண்ணீரின பேரில் சுருண்டு போகாமலும் கரைந்து போகாமலு மிருக்கச் செய்து ஒரு விரிப்பாக விரித்திருக்கிறான். சூரியனுக்கு அதிக பிரகாசத்தைக் கொடுத்து இருள்களை நிலை நில்லாம லோட்டி உலகமெங்கும் வெளிச்சமாகும்படியாகவும், சகலபேருஞ் ஜீவனஞ் செய்து ஜீவித்திருக்கும்படி யாகவுஞ் செய்தவன். அப்பொழுதைப் பார்த்தால் உள்ளங்கை அகலம்போல் தூண்டாத விளக்காக வமைத்தவன் இன்னமவனுடைய குதறத்துகளை இவ்விதமென்று கணக்

கிட்டுச் சொல்ல ஒருவராலும் முடியாது. அப்படி யிருக்க நீங்கள் என் தாய்மேல் இப்படிப்பட்ட அநியாயம் பண்ணுகிறீர்கள்.

இன்னமும் வினைச்செய்தவளென்று நீங்களெல்லோருஞ் சந்தேகங் கொண்டீர்களே அது மெய்யாகவே யிருக்குமாயின் தாயாருடைய கெட்ட நடப்பைக்குறித்து பிள்ளை எங்கேயாகிலுஞ் சாட்சிச்சொல்லுமா? உங்களுக்கு குதறத்தாகிய விசளங்களையெல்லாம் போதிக்குமா வென்று கொஞ்சமும் நீங்கள் யோசிக்காமல் மெய்கொள்ளாமற் போனீர்கள், இப்படிப்பட்ட அறிவுகள் உங்களுக்கில்லாததால் வயிற்றினுள் சிசுவானபிள்ளை இப்படிப்பட்ட விசளங்களைச் சொல்லுமாவென்று எண்ணமற் போனீர்கள். உங்களுக்கு அறிவு பெரிதாயுந் தெளிவாயு மிருந்தால் என் சொல்லை மெய் கொள்ளுவீர்கள். என் தாயைப்போல உலகத்தில் துப்புரவும் பரிசுத்தமு முடையவர்களொருவருமில்லை. அர்ஷிலிருக்கிற முகற்றபான மலக்குகளடங்கலும் என்னுடைய தாயாரே சுவர்க்கத்தின் பீவி என்று, சொல்லுகிறார்கள். உலகத்தில் என் தாயாருக்கு ஒரு புருஷமாருமில்லை. அதேனெனில் சகல படைப்புகளு மழிந்த பின்புவெழுந்து கியாமத்தினுடைய கேள்விகணக்கெல்லாமுடிவாகி சகலபேரும் சுவர்க்கமடைந்த பின் என் தாயாருக்கும் ஸைய்யிதுல் முர்ஸலீன் காத்திமுல் அன்பியா என்னும் நபிக்கும் மணமுடிவாகும்.

அவர் முந்தி நாயனுடைய ஒளிவிலுண்டாகிய கடைசி நபியானவர். அவருக்கு 100-பெயருண்டு. அவரை உலகத்தில் முஹம்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமென்று சொல்லுவார்கள். துனியாவிலும் ஆகிறத்திலும் அவருடைய பெருமையையும், சங்கையையும் மிகுதமாகப் பேசுவார்கள். அந்த நபிக்கும் என் தாயாருக்கும் கலியாணமாகும். அந்த புருஷனேயன்றி உலகிலொரு புருஷனுமில்லை. எனக்கும் என் தாயாருக்கும் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா ஒருவனுடைய உதவியேயன்றி வேறொருவருடைய உதவி யொத்தாசைகளில்லை. உங்கள் பேரில் என்னை நபியாக உண்டாக்கி, எனக்கு நபிபட்டத்தையுங் கொடுத்திருக்கிறான். தீனை நீங்களெல்லாரும் கபூல் செய்யுங்கள். என்சொல்லை மெய்யென்றெண்ணி ஒப்புக்கொள்வீர்களாகில் உங்களுக்கு அல்லாஹுத் தஆலா சுவர்க்கத்தை கொடுப்பான். என் நபி தனத்தின்மேல் சந்தேகங் கொள்ளவேண்டாம், கொள்வீர்களாகில் நெருப்புபொருந்திய நரகம் புகுவீர்கள். இப்பொழுது நீங்களெல்லாரும், (லா இலாஹ இல்லல்லாஹு ஈஸா றூஹுல்லாஹி) என்று கலிமாச்சொல்லுங்கள். அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலா தன் கிருபையைக்கொண்டு என்பேரில் இஞ்சீ

லென்னும் வேதத்தையு மிறக்குவான். அக்கித்தாபின் பேரில் எல்லாரு முண்மைக்கொண்டு ஓதி, அதிலுள்ளபடி அமல்களுஞ் செய்வார்களாகில், அவர்கள் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவினுடைய தீதாரையும் பெற்று சுவர்க்கத்திலாய் ஹூறுல் ஈன்களுமவர்களுக்குப் பணிவிடை வேலைகள் செய்யும்படியாய் நற்பதவிகள் பெற்று நல்ல ருசிகரம் பொருந்திய மதுர்மான பலவிதக் கனிகளும், பறைவைகளும் கிடைப்பதன்றி ஹௌளுல் கௌதறுடைய நீருங்கிடைக்கும். இதுகளை விட்டு முகந்திருப்பி என் தாய் பீவி மரியத்தின்பேரில் எவரும் சந்தேகங்கொள்ளில் உண்மையாக அவர்கள் தீன்துனியாவிலுங் கெட்டவர்களாய் காபிருமாகிப்போவார்கள்.

இன்னமும் அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவுடைய ஹிக்மத்துகளையும், குதறத்துகளையும் நன்ருக அறிந்திருந்தும் அறிவுகள் தடுமாறி இன்று நீங்களெல்லோருங் கூடிக்கொண்டு என் தாயாரை கல்லாலடித்துக் கொல்லவேணு மென்கிற எண்ணத்தோடு ஆளுக்கிரண்டு கற்களையெடுத்து மடியிற்கட்டிக்கொண்டு வந்தீர்களே! உங்களாலாகுமா? அறிவு தடுமாறி புத்திகெட்டோர்களே! ஹக்த் தஆலாவினுடைய வலுப்பமான குதறத்தைப் பாருங்கள். அவன் நாடுவானுகிலொரு நொடியில் உங்களிடத்தில் மறைத்துவைத்திருக்கிற கற்களெல்லாம் மனிதர்வடிவாயாக்கிவிடுவான்'' என்று ஈஸா நபிசொன்ன மாத்திரத்தில் உடனே ஹக்த் தஆலா தன் குதறத்தினுல் அவர் மடியிலொளித்துவைத்திருந்த கற்களெல்லாம் அழகான ஸூரத்துடைய பிள்ளைகளாய் விட்டது. அதுகண்டு எல்லோருமெத்த அதிசயப்பட்டு இவர் நபிதானென்று உண்மை கொண்டார்கள்.

பிள்ளைகளாயினதே அப்பிள்ளைகள் "ஓ மனிதர்களே! அறிவில்லாத புத்திகேடானவர்கள் போலாய்விட்டீர்கள். உண்மையாக பீவிமரியம் துப்புரவும் பரிசுத்தமுள்ளவர்கள். அவர்பேரிலெள்ளளவுஞ் சந்தேகமில்லை. அப்படி அவர்பேரில் சந்தேகங்கொள்வீராகில் ஈமானை யிழந்து, பாதகத்தைச் சுமந்து கேடுகெட்டவர்களாய் நெருப்புக்கிரையாய் விடுவீர்கள். உண்மையாக ஈஸா நபி அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவினுடைய நபிநாயகமாயிருக்கிறுர். இனிமேலிவருக்கு ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் வஹிக்கொண்டு வந்து கொடுப்பார். இவர்சொல்லுகிற பேச்சுகனடங்கலையு மொப்பிமெய்க் கொள்ளுங்கள்'' என்று சொல்லின. அப்பொழுது ஈஸா நபி அவர்களைப்பார்த்து "தகப்பனில்லாமல் நீங்கள் மடியில் கட்டிக்கொண்டு வந்த கற்களெல்லாம் பிள்ளைகளாய் விட்டதே இந்த திருஷ்டாந்தரத்தை கண்ணுற் கண்டு உண்மைகொள்ளாமற் போவீர்களாகில் உங்களுடைய அறிவும், புத்

தியும் மிகுந்த கெட்டதாக விருக்கும். அல்லாஹுத் தஆலாவினுடைய குதறத்தைப்பார்த்தீர்கள். அவனொரு கொடியிற்குள்ளாக உருவில்லாத கற்களை உருவாக்கி மனிதர்களுடைய வடிவைப் போலாக்கி விட்டான். ஆனையால் என்தாயார் நன்னடப்பு மிகுந்த துப்புரவுள்ளவர்கள்'' என்று சொல்லி முடித்தார். இப் பிள்ளை சொல்லிய வசனங்களை இஸ்லாமானவர்களுங் காபிரானவர்களுங்கேட்டு அவர்களுடைய அறிவும் புத்தியுந் தடுமாறி வெட்கித் தலைகவிழ்ந்தவர்களாகினார்கள். அப்போது அறிவுள்ளவர்கள் அவரே உண்மையான நபியென்று நம்பினார்கள். மற்றவர்கள் இவ்வதிசயத்தை கண்டு அதிசயப்பட்டார்கள். அப்பொழுது ஸகரிய்யா நபி இக்காரணங்களை கண்ணுறக் கண்டு அதிக சந்தோஷமாய் உடலெல்லாம் பூரித்து, மயிர்க்கால் களெல்லாஞ் சிலுசிலிர்த்து புன்னகைக்கொண்டு பீவிமரியத்தின் கிட்டேபோய் "நான் சொன்னவை யெல்லாம் மனம்பொறுத்து கொள். ஓ பரிசுத்தமுள்ள பீவியே! உமக்கு அல்லாஹுத் தஆலா கொடுத்த பிள்ளை முபாரக்கான சிபத்துடைய பிள்ளை, உம்மை பார்த்தால் உண்மையான நன்னடப்பும், நற்குணமும் நல்லொழுக்கமு முள்ளவராகக் காணுகிறது'' என்று சொன்னார்கள். ஸகரிய்யா நபி பீவிமரியத்தையும், பிள்ளையையுந் தூக்கிக்கொண்டு முன்னிருந்த பைத்துல் முகத்திஸினிடமாகக் கொண்டு வந்து வைத்தார். பிறகு இம்றானும் அவர் பெண்ஜாதியும் மற்றபேர்களும் ஸகரிய்யா நபியின் பேரில் கட்டில்லாத சந்தோஷமானார்கள். பின்பு பீவிமரியத்தை யில்லாததும் பொல்லாததுமாகப் படுதூறு சொல்லி பேசி நகைத்தோர்களெல்லாம், வெட்கித்துத் தலைக் கவிழ்ந்துபோனார்கள்.

பின்பு யூதர்களாகிய நஸ்ருணிகளும் எஹூதிகளும் இவ்வதிசயங்கள் யாவற்றையும் பார்த்து தங்கள் மனதினுள் வந்தபடி எல்லாம் விதவிதமாக நினைத்து தங்கள் மடியில் கட்டி இருந்த கற்களெல்லாம் பிள்ளைகளாக மாரியது மாயவஞ்சனையின் சூனியமே யல்லாமல் உண்மையாகக் காணவில்லை என்று புறம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் சிலர் ஈஸா நபியைப்பார்த்தால் மெத்த நன்றியுள்ளவர் போலவும், நற்குண முள்ளவர்போலவும் நமக்கெல்லாம் மிகுந்த புதுமையாகக் காணுகின்றது. பீவி மரியம் அல்லாஹுத் தஆலாவினுடைய வணக்கத்தில் அடுத்த மனமுள்ளவராயும், பூணிப்புள்ளவராயும் இரவும் பகலும் வணக்கஞ் செய்து வந்தார். அதனால் அவரிருக்கு மிடத்திற்கு ஒரு மனிதரும்போக வல்லமையில்லையே; அப்படி யிருக்க, எவ்விதமாக தகப்பனில்லாமல் உலகத்தில் பிள்ளையுண்டாகுமென்று அதிசயமாகப் பேசினார்கள். இப்படி பலவிதமாக பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் இப்லீஸ்

லீனத்துல்லா தமக்கு இது நல்லசமயமென்று அக்கூட்டத்தில் வந்துசேர்ந்தான். இப்லீஸ் நல்ல அறிவுகள் ஆராய்ந்து சொல்லும் பெரிய மனிதனைப்போல உட்கார்ந்திருப்பதை சபையார்கள் நோக்கி, எல்லோரும் அவன் புறமாகத் திரும்பி, "ஓ ஷைகே! நீர் மெத்தவும் பெரியவராக விருக்கிறீர், ஆகையால் மரியமுடைய சங்கதிகளெல்லாம் உன்னுடைய மனதிற்கு எப்படி தோற்றுகின்றது. அம்மரியமுடைய காரியத்தில் எங்களுக்கொரு ஆலோசனையும் பிரியவில்லை. எங்களுடைய அறிவுகளெல்லாம் தட்டுக்கெட்டுத் தடுமாறிப் போகிறது: கைபான விசளங்களை நாங்களெப்படி சொல்லப்போகிறோம். ஆகையால் நீரே ஆலோசனை பிரித்துச் சொல்லவேணும்" என்று கேட்டார்கள்.

அதைக்கேட்டு இப்லீஸ் லஷீனத்துல்லா அவர்களெல்லோரையுங் கலக்கிப்போட இதுதான் நல்ல சமயமென் றெண்ணி "ஓ ஜனங்களே! நீங்கள் நன்றாய்க் காது கொடுத்துக் கேளுங்கள். நானொரு சங்கதி சொல்லுகிறேன். உங்களுடைய பேச்சுகளென் கண்மேலுந் தலைமேலு முண்டு. இப்போது என் மனதிலொரு ஆலோசனை வருகிறது; அதென்னவெனில், நீங்களெல்லாரும் நன்றாய் யோசித்துப்பாருங்கள். பீவிமரிய மிருந்த விடம் அதிக உயர்த்தியுள்ள மாடம். அம்மாடத்தின் மேல் பறவைகளும் பறக்கிறதில்லை. அப்படிப்பட்ட இடத்தில் மனிதர்கள் போக வல்லமைகளிருக்கிறதா? ஆகையாலென் மனதிலொரு செய்தி சந்தேகமாக விருக்கிறது. அது என்னவெனில் இப்படிப்பட்ட உயர்ந்த மாளிகையிலுள் ஆண்டவன் வருகிறதே யல்லாமல் பின் ஒருவரும் வரமாட்டார்கள். அவனென்னேரமும் மரிய மிடத்திற்கு வந்து தன்னுடைய மடியிற் கிடத்தி படுக்கவைத்து பேசிக்கொண்டிருக்கிறான். அவளுடன் ஆண்டவனென்னேரமு மிருந்தபடியால் இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து மகிழ்வுகள்செய்து தூங்கி எழுந்திருந்தார்கள். ஆகையால் மரியம் உண்மையாக ஆண்டவனுடைய பெண்ஜாதியே யல்லாமல் வேறொருவருடைய பெண்ஜாதி யல்ல; அவ்விடம் போக யாருக்கு வல்லமையுண்டு? ஈஸா நபியானவர் ஆண்டவனுடைய பிள்ளையே யல்லாமல் மற்றவர்களுடைய பிள்ளை யல்ல; அவரப்படி மனிதர்களுடைய பிள்ளையானால் இறந்துபோன மனிதர்களை யெழுப்ப வல்லமையுண்டா? உண்மையாக அவர் ஆண்டவனுடைய பிள்ளையானபடியினாலே அவருக்கு இப்படிப்பட்ட வல்லமைகளிருக்கிறது. கற்களும் பிள்ளையாகுமா? பேசுமா?" வென்று சொன்னார். இப்படியவன் சொன்னவார்த்தையை எல்லோருங்கேட்டு, 'ஆ, ஆ, இப்படியல்லவா ஜவாபுச் சொல்லவேணும் என்று மெச்சிக்கொண்டு சந்தோஷமாய் "ஓ

ஷைக்கே! நீர் இப்போது ஆலோசித்துச் சொன்ன வார்த்தைகளெல்லாம் நன்றாக எங்களுடைய மனதிற்கு சம்மதியானது. இப்படி ஆராய்ந்து உண்மையான பேச்சுகளை எங்களுக்கு யார் சொல்லப் போகிறார்கள்" என்று புகழ்ந்து சொன்னார்கள். பின்பு காபிர்களெல்லா மொன்றாய்க் கூடிக்கொண்டு, 'ஈஸா நபியே அல்லாவினுடைய பிள்ளை' என்றுசொல்லத் தலைப்பட்டார்கள். பின்பு நஸ்றானிகள், அம்மூவரும் அல்லாவென்று சொன்னார்கள். அதில் சிலபேர் அவர் அல்லாஹுத் தஆலாவே யன்றி நபியல்லவென்று சொன்னார்கள். இச்செய்திகளை ஈஸா நபிகேட்டு தன்னுடைய தாயார் மரியத்தை நோக்கி, "நாமிவ்விடத்திலிருக்கிறதிலொருகாரியமுமில்லை. நமக்குப் பகைவர் மிகுதமாக இருக்கிறார்கள். அவர்களெல்லாரும் என்னை அல்லாவுடைய மகனென்றும், உன்னை அவனுடைய பெண்ஜாதி என்றுஞ் சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகிற மூடர்களுடைய சங்கதிகளைக் கேட்கிறது நமக்கு சூபாராக இருக்கிறது. நஸ்றானிகளும், எஹூதிகளும், யூதர்களுமாகிய இவர்களெல்லாம் அறிவில்லாத மூடர்களாக விருக்கிறார்கள். நாமெங்காகிலும் போய்விடவேணும்" என்ற ஈஸாநபி சொன்னார்கள். அதனை தாயார் கேட்டு "என்னுயிரே! கண்ணின்னொளிவே! தெளிவே! ஈரற்கொழுந்தே! நான் உன்பேரில் குருபானாய் விடுவேன். மகனே! நீர் சொல்லுகிற மொழியினாலே என்மனங் குபீலென்று பற்றி புகைகின்றதே" என்று சொல்லி, உடனே அவ்விடத்தை விட்டு நீங்கி மகனை யெடுத்துத் தூக்கிக் கொண்டு, வெறுங்காலாக கால்களெல்லாம் கொப்பளிக்கத் தக்கதாக முள்ளுங் கல்லுகளும்பட அதிக வருத்தத்தோடு இரவும் பகலுமாக நடந்து போகையில் வழியி லொரு மலையைக் கண்டார்கள்.

அம்மலைமேல் விதவிதமான விஷமுள்ள பாம்புகளும், தேள்களும், பூரான்களுமாகிய விஷஜந்துக்களும், கணக்கிட முடியாமலிருந்தன. இதுவுமன்றி உயிரை வதைசெய்யுமான புலி, கரடி, முதலிய மிருகங்களும் அவ்விடம் இருந்ததினால் அம்மலையினருகிலொருவரும் போகிறதில்லை. அம்மலையின் பெயர் சொன்னாலும் மனிதர்கள் பயப்படுவார்கள். அம்மலையினுபாரத்தையும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. அம்மலையை பார்த்து ஈஸாநபி தாயுடன், "என் தாயே! நாமிருவரும் அம்மலையின் பேரிலிருப்போமாகில் நம்மிடத்திற்கு ஒருவரும் வரமாட்டார்கள்" என்று சொல்ல, தாயார் கேட்டு சம்மதித்து இருவரும் அல்லாவின் புறமாக நாடி மனவிசனத்தில் அம்மலைமேலேறி தங்கிவிட்டார்கள். அன்று தொடுத்து இரவும் பகலுமாக புலி கரடி முதலாகிய மிருகங்களும் பாம்பு, தேள் முதலிய விஷஜந்துக்களும் அல்லாஹுத்

தஆலா வினுடைய பயத்தை மனதில் வைத்து அவர்களுக்கு பணி விடை வேலைகள் செய்துவந்தன. "ஓ பீவியே! எங்கள் பேரில் மிகுந்த கிருபை வைத்துப் பாருங்கள். நீரோ மிகுந்த நன்மையும், நன்னடப்பும் வணக்கமு முள்ளவர். உங்களை நாங்களெல்லாரும், உயிரோடு காணும்படியாகவும், பணிவிடை வேலைகள் செய்யும்படி யாகவும், அல்லாஹூ ஸுபுஹானஹூ வத்தஆலா எங்கள் பேரில் கிருபைசெய்து தங்களை இவ்விடமனுப்பியபடியால் நாங்கள் உங்களைக்கண்டும், உங்கள் மகனைக்கண்டும், சந்தோஷமடைந்து சுவர்க்கவாதி யாயினோம்" என்று மலையும் அதிலுள்ளவை அடங்கலும் சொல்லின. அதுகள் சொல்லியவைகளை பீவிமரியம் கேட்டு அளவில்லாத சந்தோஷமாக இருந்தார்கள்.

ஸகரிய்யாநபியும் தாய், தகப்பன், மற்றபேர்களுமாக ஈஸாநபியையும், பீவிமரியத்தையுங் காணாதவர்களாய் தேடிப்பார்த்து அவர்களகப்படாததினாலே விசனமென்னுங் கடலில் மூழ்கினார்கள். ஈஸா நபியும், பீவிமரியமும் அம்மலைபின்மேல் இரவும் பகலுமாக ஹக்த் தஆலாவினுடைய வணக்கத்தைச் செய்து சுக்கூரும்சபுறுஞ் செய்துக்கொண்டிருந்தார்கள். அங்கிருந்த ஒருமாத்தடியில் ஈஸா நபிச்சென்று இலைகளை பறித்துக்கொண்டுவந்து மூதிர்ந்த இலையைத்தானும் கொழுந்திலையை தாயாருக்கும் கொடுத்து அவ்விலைகளைத் தின்றுபசியாறி யிருந்தார்கள். அவர்கள் ஒருநாளும் தாங்கள் இவ்விதமாக பலாய் முஸீபத்திலாகி மரத்தின் இலைகளை பறித்து புசிப்பதைபற்றி மனதில் எவ்விதசலிப்பும் விசனமும் கொள்ளவில்லை, அதுவுமன்றி அவர்கள் உலகத்திலுள்ள மற்ற எந்த வஸ்துவின் பேரிலும் நாடவுமில்லை.

பீவிமரியமிற்கு ஒருநாள் ஜுரங்கண்டு அதினால் மெத்தவும் வருத்தமேற்பட்டது. அவ்வருத்தத்திலும் பீவிமரியம்அல்லாஹூத் தஆலாவினுடைய வணக்கத்தை விடாமற் செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது ஈஸா (அலை) இலைபறிக்கபோனார்கள். அவ்வேளையில் மலக்கல் மவுத்து நல்ல அழகினையுடைய அறபிகளின் சூரத்தைப்போல வேஷமெடுத்து பீவிமரியத்தினருகில் வந்து "ஈஸா நபியினுடைய தாயாரே! அஸ்ஸலாமு அலைக்கும். நீர் ஹக்த் தஆலாவினுடைய வணக்கத்தில் துப்புரவும் பூணிப்பு முள்ளவர்" என்று சொன்னார். அதுகேட்டு பீவிமரியம் ஸலாத்திற்கு பிரதியுஞ் சொல்லி, வந்து நிற்கிறவருடைய முகத்தைப் பார்த்தவுடனே, தண்ணீரில் விளையாடிக் கொண்டிருக்கும் மீனை மெல்லியதாகிய சுடுமணலில் போடில் அம்மீனெப்படி துடிக்குமோ அது போல உடலெல்லாம் நடுக்கமெடுத்து, பதைப்பும் துடிப்புமுண்டாகி, அறிவு முணர்ச்சியுந் தடுமாறி, பேதலித்து மூர்ச்சையாய்

பின்பு தெளிந்து, "உம்முடைய பெயரென்ன? எங்குள்ளவர்? எந்தவூர்? என்னிடத்திற்கு ஏன் வந்தீர்? நீர்வந்தகாரணங்களை நன்றாகத் தெரியும்படிச் சொல்லும். இவ்விடத்தில் நானுமென் பிள்ளையுமாக விருக்கிறோமேயன்றி மற்றொரு மனிதர்களும் வருவதும், போவதுமில்லையே. இங்குமனிதர்கள் வந்து சஞ்சாரஞ் செய்வதுமில்லையே. இப்படிப்பட்ட விடத்திற்கு நீரென்ன காரியத்தைக்குறித்து வந்தீர்?" என்றுகேட்டார்கள். அது கேட்டு மலக்கல் மவுத்து சற்றுநேரம்வரைஒன்றுஞ் சொல்லாமல் தாமிதஞ் செய்து "ஓ மரியமே! உலகத்திலுள்ள சகல உயிர் பிராணிகளும் என்னைக் கண்டவுடனேபயப்படும். நான் எளியோர்களையும் பாதுஷாக்களையும், மிடிமையானோர்களையும், பகீல்களையும், சகீயானோர்களையும், நல்லோர்களையும் கெட்டோர்களையும், தாய் துடிக்கப் பிள்ளையையும், பிள்ளை துடிக்கத் தாயையும், பெண்ஜாதியழ புருஷனையும், புருஷனழபெண்ஜாதியையும், இன்பத்தை விட்டும், நோயை விட்டும், சவுக்கியத்தை விட்டும், சந்தோஷமுள்ளவர்களை சலிப்பாகவும் பிள்ளைகளென்றும், பெரியோர்களென்றும் சிறியோர்களென்றும் எள்ளளவும் இறக்கமின்றி அல்லாஹு ஸுபுஹானஹுவத் தஆலாவினுடைய உத்திரவானவுடன் ஒரு நொடிப்பொழுதுந்தாமிதஞ் செய்யாமல் அவர்களுடைய றூஹையும் உடலையும் வெவ்வேறாகப் பிரித்து விடுவேன், என் பெயர்மலக்கல் மவுத்து" என்றார்.

இன்னும் "என்னுடைய இருப்பிடம் நாலாவது வானமாக யிருக்கும். நானிருக்குமிடத்தில் மரமொன்றிருக்கின்றது. அம்மரத்தினுடைய அகலமும் நிகளமும் இவ்வளவென்று சொல்ல முடியாது. அம்மரத்திள்ள ஒவ்வொரு இலையில் இவ்வுலகத்தி லுண்டாயிருக்கிற மனிதர் முதலாகிய உயிர் பிராணிகளின் பெயர்களெல்லாம் எழுதப்பட்டிருக்கின்றது. உலகில் யாருக்கு மூச்சும் இரணமும் அற்றுப்போகுமோ அவர்கள் பெயருள்ள இலைப்பழுத்து என்மடிமேல்விழும். அது கண்டு நான் ஹக்குதஆலாவின் கட்டளையின்படி ஒருவினாடி நேரமுந் தாமிதஞ் செய்யாமல் அந்த இலையைப்பார்த்து அதில் யார்பேர் இருக்கிறதோ அவர்களுயிரை வாங்குவேன். இன்று உம்முடைய பெயருள்ள இலை என் மடியில் பழுத்து விழுந்தது. ஆகையால் இன்று உன் உயிரைக் கைப்பற்றிட வந்தேன்" என்று சொன்னார். அப்போது பீவிமரியம் அவர் சொல்லியச் செய்தியைக் கேட்டு சலிப்பாகி மலக்கல் மவுத்தைப்பார்த்து, என் பிள்ளையாகிய ஈஸா இலை பரித்துக்கொண்டு வரப்போயிருக்கிறார். அவரென்னிடம் வருகிறவரையும் தாமிதஞ் செய்வீராகில் நீர் எனக்குச் செய்த உபகாரமாக விருக்கும். என்பிள்ளை ஈஸா என்

னிடத்திற்கு வந்து என்னைக் கண்டவுடனே என்னுயிரைக் கைப் பற்றிக்கொளும். அதற்குமுன் என்னுயிரை கைப்பற்றிக்கொள் வீராகில் நான் அவருடைய முகத்தை பாராதபடியினால் கபறிலு மெத்த சலிப்பாக விருப்பேன். அவரும் என் முகத்தைக்காணு மற் போவாராகில் அவருடைய வயதெல்லாஞ் சலிப்பாகவே யிருப்பார்" என்று சொன்னார்கள். அதுகேட்டு மலக்கல் மவுத்து "நீர் அல்லாஹு தஆலாவினுடைய அமானத்திலிருக்கிறபீவி. எனக்கு ஹக்த்தஆலாவினுடைய உத்திரவு ஒருவினாடியும் தாமிதப் படுத்த வேண்டாமென்று சொல்லி யிருக்கிறபடியினாலே என் பேரில் என்ன குற்ற மிருக்கிறது. நான் அப்படி செய்யாமல் ஒரு வினாடி நேரமும் முன்பின் படுத்துகிறதில்லை. அப்படிச் செய்வே னாகில் அவனுடைய முனிவிலகப்பட்டுக் கொள்வேன்" என்று சொன்னார். பீவிமரியம் மிகுந்த துக்கத்தோடழுது அறிவுந்தடு மாறி வெளியேவந்து பிள்ளையைத்தேட, அவரெங்குங் காணமல் போக, அதிக சலிப்பாகி துக்கக்கடலில் மூழ்கி, "என் கண்மணி யானமகனே! என்னீரற் கொழுந்தே! கல்பின்தெளிவே! ஒளிவே! என்னைவிட்டு எங்கேபோனாய்? எல்லாநாளும் என்னை காத்திருந்து இப்படிப்பட்ட வேளையிலுன்னைக் காணேமே! மலக் கல் மவுத்துவந்து என்னை அழைக்கிறாரே! நானெப்படியவர் கையைக்கொண்டுத் தப்பித்துக்கொளவேன்; உன்னை தனியாக விட்டு எப்படிப் பிரிவேன்" என்று நாலுதிசைகளும் நோக்கி, "மகனே!" என்றுக் கூப்பிட்டுப் பார்த்தும் பிள்ளையைக் காணமல் மிகவும் மனம்நொந்து தானிருக்கு மிடத்திற்கு வந்தார்கள். அப் போது ஜுரமும் அதிகவேகமாயினது.

ஜுரத்தின் வருத்தத்தைப் பொறுத்துக்கொண்டு, பூமி யின்மேல் "என்னுடைய மகன் ஈஸாவே! உயிரே! பாதுஷாவே! ஹக்த்தஆலாவினுடைய நபியே! என்னுடைய ஸலாம் உமக்குண் டாகவேண்டியது. உன்னுடைய சந்திப்பை நான் காணமல்விட்டுப் பிரிந்து போகிறேன். உன்னுடைய அறிவை துக்கத்தில் போட வேண்டாம்" நானில்லாதபடியினாலுமக்கு மிகுந்த வருத்தமும், துன்பமும் இருக்கும் உம்முடைய சரித்திரத்தை மிகுந்த வருத் தம் எடுத்து விழுந்தாட்டவேண்டாம், நானுன் தீதாரைப் பார்க்க அதிர்ஷ்ட மில்லாமல் போயிற்று. ஹக்த் தஆலாவுடைய அமலுக்கு மாறுச் செய்ய ஒன்று மில்லை. நான் தாருல் பனாவைவிட்டு தாருல் பகாவிற்குப் போகிறேன். என்னுடைய அதிஷ்ர்ட மிப்படி யிருந்தது. உன்னுடைய அதிர்ஷ்டமு மென்னைப் பார்க்கமுடியா மலிருக்கிறது. விதிக்கு முன் மனிதருடைய மதியொன்றும், செய் யப் போகிறதில்லை. உம்முடைய தீதாரை யியாமத்தி னாளையிலே காண்பேனே யன்றி இன்று காண்பதற்கிடமில்லை. ஆனதால்

ஹக்கதஆலாவினுடைய கட்டளைக்கு சபுறும் ஷுகூறுஞ் செய்து சந்தோஷமாயிரும். நானும்மை விட்டுப் பிரிந்து போவதைக் கொண்டு சொஞ்சமுந் துக்கமுந் துயரமும் படவேண்டாம். இன்று உன்னை நான் ஹக்கதஆலாவின் புறமாக ஒப்பித்துவிட்டேன்'' என்று எழுதிவைத்தார்கள். பிறகு வெகு துக்கத்துடன் தான் வணங்கும் இடத்திலிரண்டு றக்கஅத்துத் தொழுது, "என் றப்பே! நான் மிகுந்த பாவியானவள், என்மகன் ஈஸாவிற்கு உனனுடைய உதவி யொத்தாசையே யன்றி மற்றொருவருடைய உதவியும் ஒத்தாசையுமில்லை. நான் உன்புறமாக ஒப்பித்து விட்டேன். உன் மகா கனம்பொருந்திய கிருபையைக் கொண்டு யாதொரு இடுக்கணும் வராமல்படி காத்தருள்வாயாக'' என்று, தன்கைகளை யெடுத்து முனாஜாத்துக்கேட்டு, பின்பு தன் மனதை திடசித்தஞ் செய்து கொண்டார்கள். கலிமாவினுடைய மாணிக்கம் வேரூணச் செய்திருக்கும்போது, பீவிமரியமுடைய துப்புரவான றூஹை மலக்கல் மவுத்து கைப்பற்றி அல்லாஹுத் தஆலாவினுடைய சந்நிதானத்திற்கு கொண்டுபோய் விட்டார். அன்று பீவிமரியம் அழிவுள்ள துனியாவினுடைய பலாமுஸீபத்துகளை விட்டு நீங்கி தாருன் நயீமென்கிற சுவர்க்கம் போய்ச் சேர்ந்தார்கள்.

அன்று ஈஸா நபி என்றுங் கொண்டுவராத கொழுந்து இலைகளைப் பறித்துக்கொண்டு, தாயாரிருக்கு மிடத்திற்கு வந்து பார்க்கையில், தாயார் நித்திரை செய்வதுபோல, யிருக்கக்கண்டு, "இன்று நம்முடைய தாயாரேனோ உல்லாச நித்திரைச் செய்கிறார்கள்'' என்று மனதிலெண்ணி தூரமாக நின்று தன் தாயாரை பார்த்து, "என்னுடைய தாயே! நான் ஸலாமத்தாக இலைபறித்துக் கொண்டு வந்திருக்கிறேன், நீ தூங்கிக்கொண்டிருக்கிறாயே! கண்ணை முழித்துப்பாரும்'' என்று கூப்பிட்டுச் சொல்ல அதற்குத் தாயார் மறு உத்தரங் கொடுக்கவில்லை. பின்னுமதேபடி "என் தாயாரே, தலை எடுத்துப்பாரும் எழுந்திரும்'' என்று கூப்பிட்டுச் சொல்ல அதற்கும் ஜவாபு ஒன்றுமில்லை. இப்படி கூப்பிட எழாமலும், ஜவாபுச் சொல்லாமலும், பேசாமலு மிருப்பதைக் கண்டு ஈஸா நபியுடைய அறிவெல்லாந் தட்டுகெட்டுத் தடுமாறிப் போய் தன் தாயாரிடத்தில் நெருங்கிப்போய் பார்க்கையில் "தான் வணங்கு மிடத்தில் நித்திரை செய்கிறார்'' என்று நினைத்து "என் தாயே! என்னை மறந்து விட்டு நித்திரை கொண்டீர். தொழுகையினுடைய வேளையுமாயிற்றே! சீக்கிரம் எழுந்திரும்'' என்று கூப்பிட்டார். பின்பு தான் கொண்டு வந்த இலைகளை யோரிடத்தில் வைத்துவிட்டு தாயாரெழுந்தால், இருவருமொன்றாய்கூடி பசியாறலாமென்று நினைத்து பின்னுந் தாயாரிடம் வந்து "தொழும் வேளையாயிற்றே! என் தாயாரே! எழும்பி ஹக்கதஆலாவினுடைய திக்குறு பிக்குறு

களை செய்யும்'' என்று எழுப்பிட எழவுமில்லை. பின்பு "என்தாயே, நானின்று வெகு தூரம்போய் நல்லக் கொழுந்தான இலைகளைக் கொண்டு வந்திருக்கிறேன். பசியுடைய வேளையுமாயிற்று'' என்று கூறினார்.

எத்தனையோ தரமாக பற்பல விதமுஞ்சொல்லிக்கூப்பிட்டார். அதற்கும் ஒரு ஜவாபும் வரவில்லை. "என்தாயே உமக்கு சரீரஞ் சுவாத்தியமாகவில்லையோ? அதனால் ஹக்கதஆலாவினுடைய வணக்கத்தை விட்டு விட்டு எண்ணமற்றவர்களாய் நித்திரைச் செய்கிறீர்களா?'' என்று சொல்லி, பின்னும் அல்லாஹுத் தஆலாவை நாடி "என்னையனே! என் தாயாருடைய நஸலை உன் றஹ்மத்தான கிருபையைக்கொண்டு அவர்களுக்கு சரீர சுவாத்தியத்தைக்கொடு. எங்களுக்கு உன்னுடைய ஆதரவேயன்றி வேறொருவருடைய ஆதரவு மில்லை'' என்று முனாஜாத்து கேட்டு பஜர்வேளையுமாய்விட்டது. பறவைகள் அல்லாஹுத் தஆலாவினுடைய திக்ரை செய்கின்றது. நீரிந்தவேளையில் நித்திரைச்செய்கிறது நலமல்லவே; எழுந்திரும்; சும்மா ஒரு நாளும் நீரிப்படி நித்திரை செய்ததில்லையே; இன்று இத்தனை நேரமாக நித்திரை செய்கிறவிதம் எனக்குத் தெரியவில்லை; சுபுஹுடைய நேரமுமாய் விட்டது, நீங்கள் அல்லாஹுத் தஆலாவினுடைய வணக்கத்தில் மிகுந்த பூணிப்பாக வணங்கி வருவீரே, ஆகையால் சீக்கிரமாக எழுந்திருங்கள் இதுவரை தாங்கள் பசியாரவு மில்லையே'' என்று பலபல விதமாக எழுந்திருக்கும்படி ஈஸா நபி சொல்ல பீவிமரியம் ஒரு ஜவாபுஞ் சொல்லவில்லை. பின்னும் "என் தாயே! கிழக்கு வெளுத்துபொழுதுஉதிக்கும்வேளையாய்விட்டதே!'' என்று சொல்லிக்கொண்டிருக்கும் சமயத்தில் இருள்களெல்லாம் நீங்கி சூரியனுதித்தது. அந்நேரம் ஈஸா நபி தாயாரிடத்தி னருகிற்சென்று முகத்தின்மேல் போட்டிருந்த ஆடையை நீக்கி நன்றாக உற்றுப் பார்க்கையில் தாயாருடைய றூஹானது சரீரத்தை விட்டுப் பிரிந்துபோயிருக்கக் கண்டு, தம்முடைய சட்டையை கழற்றி மண்மேல் போட்டுவிட்டு மிகுந்த அழுகையோடு தன் தாயினுடைய கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு, "என் தாயே! என்னைப் பிரிந்து போனீரே! நானுஞ் சிறுபிள்ளை. என்னை தனியாக விட்டு விட்டு என்றும் மழியாத பட்டணத்திற்குக் குடியாகப் போய்விட்டீரோ; நான், உமக்குப் பசியார இலைபறித்துக் கொண்டுவரப் போயிருந்தேன்; அதற்குள் உம்முடைய விதி வந்து விட்டதா? நான் தங்களிடம் ஹாஜராக இருந்து உங்களோடுபேசி உமக்குப் பணிவிடை பூறாயுஞ் செய்யவில்லையே; நான் தாயில்லாத பிள்ளையாய் எத்தீமாகிப் போனேனே; இனியாரை நான் அம்மாவென்று கூப்பிடுவேன்; நீயிருந்தபடியால் உன்னுடைசிக்காடு மலைகளெல்லாம் வீடுபோலிருந்ததே; உம்முடனே பேசுவதற்கு அல்

லாஹறு ஸுபுஹானஹு வத்தஆலா எனக்குதவி செய்யவில்லை, உங்களுக்குப்பின் இக்காடானது சிறைச்சாலையாக யிருக்கிறதே; என்னுடைய உயிரென்ன மாயிருக்கிறது" என்று பலபல விதமாக சொல்லி தாயாருடைய முபாறக்காகிய பாதங்களிரண்டையு மெடுத்து கண்ணில் வைத்து முகந்து முத்தியிட்டு "இபாதத்தி னுடைய பறக்கத்தைக்கொண்டு மிகுந்த பலனும், வல்லமையுஞ், சந்தோஷமும் பெற்றேன்! நாயனே. என் தாயாருடைய ஓடுக் கத்தில் பேச்சுவார்த்தைகளை பேசவைக்காமல் நூஹை கழற்றி சுவர்கத்திலாக்கிவிட்டால், என்னுடலும் ஈரலுங்கருகி துடித்து பதைக்கிறதே" என்று முத்துபோல் கண்ணீரை விட்டு மழை பெய்வதுபோல அழுதார்.

ஈஸா நபி தன் தாயாரை நினைத்து அழுவதைப்பார்த்து வானம் பூமி, அரஸ் குருஸ் சுவர்க்கம், நரகம், லவ்ஹு, கலம், மலக்குகள், ஜின்கள், ஊர்வையினும், பறவை இனம். நாற்காலிகள் மரங்கள், மலைகளெல்லாம், "பீவிமரியமுடைய மகனாகிய ஈஸா நபியே! நீர் இன்று ஏன் மிகுந்த அழுகை யழுகிறீர்கள். இதனால் உலகத்தி லொரு பிரயோஜனமுமில்லை. நீர் இவ்வேளை சபுறும் சுக் கூறுஞ் செய்து பொருமையோடிருப்பதில் கோடானகோடி பல னுண்டும்; நாங்களெல்லாம் உமக்குத்துணையாக விருக்கிறோம்; நீரிவ் வுலகத்தி லுள்ளவைகளுக் கெல்லாம் நஸீஹத்தும், நேர்வழியுங் காட்டப்பட்டவர்; நாங்களுமக்கு அறிவு சொல்வதற்குத் தகுமான வைகளல்ல; உம்முடைய தாயார்மாத்திரம் உலகத்தில் புதிதாக மவுத்தாகவில்லை, இப்படி எத்தனையோ கோடான கோடிபேர்கள் மகிழ்ச்சியாகவுந் துக்கமாகவுமிருந்து மவுத்தாகவில்லையா? ஆத நபியைதொடுத்து இதுவரைக்குமெத்தனையோ நபிமார்கள் பிறந்து மவர்களு மவுத்தா யிருக்கிறார்கள். எத்தனையோ விதமான படைப்புகள் மறைந்து போயிருக்கின்றது. இந்த துனியாவாகிறது ஒருவருக்குஞ் சதமல்ல நிலையுமல்ல. நஷ்டத்தை கொடுக்குமான விடம். ஆகையால் தாங்களெல்லா விசனங்களையும் நீங்கி உங்க ளுடைய தாயாரை நல்லடக்கம் செய்வதற்காக கபனைத்தேடும்" என்று மரம் மலை முதலியன சொல்லின. அவைகள் சொன்னதை ஈஸா நபிகேட்டு திடசித்தஞ்செய்து பின்பு மன வியாகூலங்களை இப் பேச்சினால் நீக்கி பூமியைப்பார்க்கையில தன் தாயார் சக்றாத் துடைய ஹாலிலெழுதி வைத்திருப்பதைக் கண்டு கட்டில்லாத விசனமானார். அப்போது சபறென்னும் தண்ணீரைக் கொண்டு துக்க மென்னும் நெருப்பை அணைத்து தாயாரெழுதி யிருக் கும், நஸீஹத்தையெல்லாம் நன்றாகப் படித்துப்பார்த்து ஒவ் வொரு எழுத்துகளின் பேரில் தன் முகத்தைவைத்து ஒவ் வொரு எழுத்தாக முத்தமிட்டார்கள். பின்பு தாயாரை நல்லடக்

கஞ் செய்யவேணுமென்று, கபன் தேடுவதற்கு எண்ணமிட்டு அம்மலையோரத்திற் கடுத்தாபோல சில காபிர்கள் கூட்டமாக யிருக்கக்கண்டு ஈஸா நபி அம்மலையை விட்டுக் கீழே யிறங்கி அவர்களிடத்திற்கு வந்து, "ஓ கூட்டத்தார்களே! இன்று என்னுடைய தாயார் இறந்து போனார்கள். அவர்களுக்குக் கபனிட துணியில்லாததால் கபன் கொடுத்து நல்லடக்கஞ் செய்யவில்லை. நீங்கள் கபன் கொடுத்து எல்லாரும் உதவிசெய்து அடக்கம் செய்யில் உங்களுக்கு அல்லாஹுத் தஆலா ஆயிர நன்மையும், வரிசையும், சிறப்பையுங் கொடுப்பான்" என்று சொன்னார்கள். அது கேட்டவர்கள், "நீ யார்? உன்னுடைய பெயரென்ன? நீ எங்கே யிருக்கிறது" என்று கேட்டார்கள். அதற்கு ஈஸா நபி "நானிந்த மலைமேலிருக்கிறேன். என் பெயர் ஈஸா. என் தாயார் பெயர் மரியம். எனக்கொருவருடைய ஆதரவு இல்லை. நான் பீவி மரியமுடைய பிள்ளை" என்று ஆதியோடந்தமாகச் சொன்னார்.

அதுகேட்டு அக்கூட்டத்தார்களெல்லாம் "இம்மலையின் மேல் கணக்கில்லாத பாம்புகளும், தேள்களும், விஷப்பூச்சிகளும் நிறைந்த இருண்ட வனமாயிற்றே? அவ்விடத்திற்கு ஒருவர்போக பயமான தலமாயிற்றே? 300 வருஷகாலமாகக் கெட்டயிடமென்று பயந்து, அங்கு ஒருவரும் போக்குவருத்தில்லையே, அப்படியிருக்க நீ ஒருவராய் குடியிருக்கலாகாது. அவ்விடத்திலா குடியிருக்கிறீர்கள்" உன்று சொல்லி, தங்களுக்குள் தாங்களே, ஒருவருக்கொருவர், "இப்படிப்பட்ட விஷ ஜந்துக்கள் குடியிருக்கிற அம்மலைக்கு நாம் எப்படிப்போகிறது" என்று பயந்து, "கபன் முதலியவைகளை கொடுத்து அனுப்பிடுவோம்." என்றுபேசிக்கொண்டு, "ஓ ஈஸாவே நாங்கள் அவ்விடத்திற்கு வரமாட்டோம். வேண்டுமானவைகளை கொடுக்கிறோம்" என்று சொன்னார்கள். பின்பு அவர்கள் "இம்மனிதன் விஷஜந்துக்கள் நெருங்கியிருக்கிற மலைமேலிருக்கிறதைப் பார்த்தால், இவர் அல்லாவா யிருக்கவேணும்" என்று பேசிக்கொண்டு ஈஸா நபியைப்பார்த்து, "இவர் நம்மை மோசஞ்செய்து கெடுக்க வந்தாபோலுங்காணுகிறது. இன்னுமிவர் நம்முடைய மார்க்கத்தை அழித்துப் போட்டவர்போலுந் தோணப்படுகிறது. ஆகையால் இவரை விடாமல் சுருக்காய் வெட்டிப்போடவேணும்" என்று பேசிக்கொண்டிருந்தார்கள். இதனை ஈஸா நபி கேட்டு உடனே அவ்விடம் விட்டு நீங்கி ஓடோடி சென்று அம்மலையின் மேலேறி நின்று மிகுந்த சலிப்பாகயிருந்தார்.

அவ்வேளையில் அவ்வழியாக இரண்டு இஸ்லாமான முஸாபிர்கள் போவதைக்கண்டு அவர்களைக் கூப்பிட, அவர்கள் வந்து ஈஸாநபிக்கு ஸலாஞ் சொல்லி, "ஏன் மிகுந்த சலிப்பாக யிருக்

இரீர்?" என்று கேட்டார்கள். அதற்கு ஈஸாநபி பிரதிச் சொல்லி, "என்னுடைய தாயார் பீவிமரியம் மிகுந்த நன்றியும் வணக்கமுள்ளவர். என்னை விட்டு விட்டு இன்று இம்மலையின் பேரில் மவுத்தாய் போனார்கள். நான் எதிமாகவும் மிஸ்கினாகவும் இருக்கிறேன். உங்களுக்கு அல்லாஹுத் ஆலா மிகுந்த றஹ்மத்தைச் செய்வனாகவும், இந்நேரம் இவ்விடத்திலுங்களை யன்றி வேறொரு இஸ்லாமானவர்களு மில்லை. நீங்களென்னுடையத் தாயாருக்குக் கபன் கொடுத்து நல்லடக்கஞ் செய்வீர்களாகில் உங்களுக்கு சுவர்க்கத்தில் நற்பதவியோடு தீதாரும் பெருவீர்கள்" என்று சொன்னார்கள். அந்த இஸ்லாமாகிய முஸாபீர்களிருவரும் இவ்விசளங்களை எல்லாம் கேட்டு, "நீர் சலித்து எண்ணமிட வேண்டாம். நாங்களுங்களுடைய அடிமைகளாக இருப்போம். நாங்கள் பீவி மரியமுடைய நல்லடக்கம் பணிவிடைகளின் வேலைகளில் ஹாஜராக யிருக்கிறோம். கபர் எங்கே வெட்டுகிறது. அவ்விடத்தைக் காட்டுங்கள்" என்று கேட்டார்கள். பிறகு மூன்று பேருமொன்றாகக் கூடி கிழேபிரங்கி இடந்தேடி ஈஸா நபி யோரிடத்தைக் காண்பித்தார்கள். அவ்விடத்திலிருந்து முஸாபிர்களுங் கபர்வெட்டி முடித்தார்கள். அதற்குள்ளாக பீவி மரியத்தை அல்லாஹு ஸுபுஹானஹு வத்தஆலாவினுடைய உத்திரவின்படி சுவர்க்க லோகத்தின் ஹூறுல் ஈன்கள் ஹௌளுல் கௌதருடைய தண்ணீரைக் கொண்டுவந்து முழுகாட்டி சுவர்க்க லோகத்தின் பட்டுடைகளால் கபன் செய்து, கண்ணீற்கு சுருமா இட்டு, சுவர்க்கத்தின் மண வாடைகள் பூசி செய்யுமான வேலைகளெல்லாஞ் செய்து, மேலான வெள்ளியின்னொளிவை போல போர்வையும் போற்றி மையத்தை எடுத்து வெளியே வைத்திருந்தார்கள். அப்போது அவ்விரண்டு முஸாபிரும் ஈஸா நபியுமாக மையத்தை எடுத்து நல்லடக்கஞ் செய்ய வேணுமென்று அம்மலையின் மேல் போய் பார்க்கும் போது எல்லா வேலைகளையும் முடித்திருக்கக் கண்டு மையத்தை எடுத்துக் கொண்டுபோய், கபறினருகே வைத்து தன் தாயாருடைய தீதாரை காண நாடி கபனைத் திறந்து பார்த்து, "என்னைப் பெற்று வளர்த்த தாயே! இன்று இங்கே என்னை தனியாக விட்டு விட்டு அல்லாஹுத்த ஆலாவின் புறமாகப் பிரிந்து போகிறீரே! உம்முடைய தீதாரை நான் எப்போது காண்பேன். இன்று நான் தனியாக யிருக்கிறேனே" என்று சொல்லி அழுதார்கள். இதனை வானலோகத்திலிருக்கிற மலக்குகளெல்லாம் கண்டழுதார்கள். பின்பு தாயரை நல்லடக்கம் செய்து விட்டு ஈஸா நபியும் முஸாபிருமாக அம்மலையின் மேல் சென்று அங்கு அம்முஸாபிர்களுக்கு நல் மாறுபஞ் சொல்லி அவர்களை யனுப்பி விட்டு அதிக விசனத்தோடிருந்தார்

அந்த முஸாபிரிருவரும் ஜிப்ரீல் மீக்காயில் அலைஹிஸ்ஸலாமாவார்கள். அப்போது ஈஸா நபிக்கு வயது பத்தாயிற்று. ஈஸா நபி தமது தாயாரை நினைத்து மிகுந்த சலிப்பாக ஹக்த் தஆலாவினிடத்தில் "நாயனே! என் தாயார் மவுத்தாகும்போது நான் கிட்டேயில்லை. மவுத்தை குறித்து கேட்க வேணும். உன்னுடைய உத்திரவானால் அவர்கள் கூட நான் பேசுகிறேன்" என்று கேட்டார்கள். உடனே நாயனுத்திரவானது. அன்று தன் தாயாருடைய கபறருகிலாகி மிகுந்த அழுகையோடு தாயாருக்கு ஸலாம் சொன்னார்கள். உடனே கபறுள்ளிருந்து பிரதி ஜவாபு சொல்லி "என் கண்மணியான மகனே! என்ன?" என்று கேட்டார்கள். அப்போது ஈஸா நபி "என் தாயே! உன்னிடத்திற்கு மலக்கல் மவுத்துவந்தாரே அதுவும் கபறில் சுவால் ஜவாபாயினதும், உன்னருகிலில்லாமல் விட்டுப்பிரிந்ததுஞ் சொல்" என்று மிகுந்த விசனமாகக் கேட்டார். அதற்கு பீவி மரியம், "நான் நித்திரையிலிருக்கும்போதொருவர் வந்து என்னை எழுப்பி உன்னை அல்லாஹுத்தஆலா அழைத்து வரச் சொன்னான்" என்று கூப்பிட்டழைத்துக் கொண்டு போனார். நான் சுவர்க்கத்தில் மட்டில்லாத சந்தோஷமாயிருக்கிறேன். அல்லாஹுத் தஆலா என் பேரில் மிகுந்த கிருபைச் செய்திருக்கிறான். என் கண்மணியான மகனே! அவனுடைய நல்மாராயமுனக்கு உண்டாக வேண்டியது. கியாமத்து நாள் வருமளவு முன்னை விட்டுப் பிரிந்து போயினேன்" என்று சொல்ல, பீவிமரியத்திற்கு இனிமேலொன்றும் பேசவேண்டாமென்று ஹக்த் தஆலாவினுடைய உத்தரவானது. அதுகேட்டு வாயை மூடிக் கொண்டார்கள். பிறகு ஈஸா நபி தாயாருக்கு ஸலாம் சொல்லி விட்டு முஸாபிராகப் புறப்பட்டு ஊர், மலை, வனம், வனாந்திரமெல்லாம் திரிந்து, இலைகளைப் பறித்துத் தின்று கொண்டு, மேலிட்டிருக்கு மங்கியோடு கம்பளத்தை போர்த்திக் கொண்டிருந்தனர். இப்படி நடந்து வருகிற நாளையில் பின்னிட்டு நடக்கப் போவதை ஈஸா அலைஹிஸ்ஸலாத்தினுடைய கிஸ்ஸாவில் எழுதுவோமாக. இன்ஷா அல்லா, ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.

பீவி மரியமுடைய கிஸ்ஸா

முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

ஈஸா நபியுடைய கிஸ்ஸா.

ஈஸா நபியுடைய சங்கை பொருந்திய பிறப்பு வளர்ப்பு சிறு பால்யத்தனம், வமிஷ பரம்பரை, அவர்கள் தாயார் பீவிமரியம் வபாத்து முதலியவைகளை விரிவாக பீவிமரியமுடைய கிஸ்ஸாவில் எழுதியுள்ளோம். இதனடியில் அவர்களுடைய முஃஜிஸாத்தைப் பற்றி கூறிவருவோம்.

ஈஸா நபியுடைய அற்புத செயல்களாகிய முஃஜிஸாத்துகள் அல்லாஹுத் தஆலா ரூஹுல் குத்தூஸைக்கொண்டு பலனாக்கி வைத்தான். தன்னுடைய திரு குர்ஆனில் அவன் "பரிசுத்த மான றாஹைக்கொண்டு ஈஸாவை பலனாக்கினோம்" என்று அருளி யுள்ளான். பரிசுத்தமான றாஹாகிறது ஜிப்ரீல் (அலை) என்றும் அவர் ஈஸாவுடன் சதா இருந்துக்கொண்டிருக்கிறாரென்றும் சிலர் கூறியுள்ளார்கள்.

"அல்லாஹுத் தஆலா ஈஸாவில் ரூஹுல் குத்தூஸை ஊதி யிருக்கிறான் என்றும் அந்த ரூஹைக்கொண்டு ஈஸாவை சங்கை யாக்கிவைப்பதற்காகவும் தனதாக்கிவைப்பதற்காவும் 'நாம் ஈஸா விலே நம்முடைய, ரூஹில் நின்றும் ரூஹுல் குத்தூஸை ஊதினோம் என்று திருவுளமாயிருக்கிறான். ரூஹுல் குத்தூஸ் என்பதற்கு பரிசுத்தமான ரூஹ் என்பது கருத்து. ரூஹுல் குத்தூஸாகிறது புருஷருடைய முதுகந்தண்டையும் நஜீஸான அருகாம்பிள்ளைக் குடலையும் பொதிந்து கொள்ளவில்லையானதால் அதற்கு பரிசுத்த மான ரூஹ் என்று சொல்லப்பட்டது இந்த ரூஹாகிறது அல்லா வில் நின்றும் அவனுடைய ஏவலாயிருந்தது" என்று ரபீகிப்னு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்.

"ரூஹுல் குத்தூஸ் ஆகிறது ஜிப்ரீல் (அலை) அவர்களைக் கொண்டு ஈஸாவைப் பலனாக்கிவைத்தது என்றும் ஜிப்ரீல் ஈஸாவிற்கு அல்லாவில் நின்றும் வஹி கொண்டிறங்குபவராகவும் அவரை வானத்தளவில் உயர்த்தப்படுமளவும் அவர் ஈஸாவுடனே இருந்தார்" என்று சத்திரஹ்மத்துல்லா சொல்லியிருக்கிறார்கள். இன்னும் ரூஹுல் குத்தூஸாகிறது அல்லாஹுத் தஆலாவுடைய வலுப்பமாகிய இஸ்மான இஸ்முல் அஃலமென்றும் இதனைக் கொண்டு மவுத்தானவர்களை ஹயாத்தாக்கிவைத்தார் என்றும் ஸஹீதிப்னு ஸுபைர் சொல்லியிருக்கிறார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் தௌராத், இன்ஜில் இந்த இரண்டு வேதங்களையும் மூலாதாரமாக ஓதினவராகவும் எழுதுகிறவராகவுமிருந்தார்கள். அல்லாஹுத் தஆலா உலகத்தில் பக்ஷிசாரங்களில் வௌவால் ஒன்றையும் படைக்கவில்லை. ஈஸா வௌவாலை பக்ஷிசாரங்களில் சிரேஸ்டமான படைப்பாக படைத்தார். அதற்கு மார்பும் பல்லும் உண்டாயிருக்கிறது. அதுபிள்ளையும் பெறுகிறது; ஹைஜுமாகிறது; பறக்கவுமசெய்கிறது. இதனால்தான் பக்ஷிசாரங்களில் இதனை சிரேட்டமான படைப்புஎன்று சொல்லப்பட்டது. இதற்கு மண்ணினால் சூரத்து உண்டாக்கினார். அல்லாஹுத் தஆலாபிறகு ஹயாத்தைக்கொடுத்தான்.

“இதனை மனிதர் பார்த்துக்கொண்டிருக்குமளவும் ஹயாத்துடன் பறந்துகொண்டிருக்கும். மனிதருடைய கண்ணைவிட்டு மறைந்துபோனால் மையத்தாகி விழுந்துவிடுமென்றும், இதுவே அல்லாவுடைய படைப்புக்கும் மனிதருடைய படைப்புக்குமிடையே உள்ள வேறுபாடான அல்லாஹ்வின் ஹிக்மத்தாக இருக்கும்” என்று வஹபு றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் பிறவிக்குருடை நீக்கி பார்வையுண்டாக்குதல், வெண்குஷ்டத்தை நீக்கி சுவாத்தியமுண்டாக்குதல் முதலிய முஃஜிஸாத்துகளை செய்தவர்களாக இருந்தார்கள். மேல் கூறிய இரண்டு நஸ்லுக்கும் மருந்தில்லாததினால் ஈஸாவிற்கு முஃஜிஸாத்து ஏற்பட்டது. அக்காலத்தில் இலாஜ் செய்கிறது காலிபானபடியால் அவருக்கு முஃஜிஸாத்தை இலாஜுடைய தினுசிலே நின்றும் அல்லாஹுத் தஆலா காண்பித்தான். அவர்கள் அல்லாவுடைய ஹுக்கும்கொண்டு மவுத்தானவர்களை ஹயாத்தாக்கிவைத்தார்கள். காஜீர் என்கிறவர் மவுத்தானார். அவருடற் பிறந்தாள் ஈஸாவிற்கு மவுத்தைக் கூறி, அவர்களை அழைத்து வரும்படி ஆள் சொல்லி அனுப்பிவைத்தாள். ஈஸா அலைஹிஸ்ஸலாம் அதனைக் கேட்டு அவரது ஸஹாபிகளுடன் காஜீருடைய ஊருக்கு மவுத்தான மூன்றாவது நாள் வந்து சேர்ந்து மவுத்தானவருடைய கபுரை அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. ஈஸா நபி துவாசெய்ததும் காஜீர் கபுரில் நின்றும் ஹயாத்தாகி எழுந்திருந்து சிறிது நாள் பிள்ளையும் பெற்று ஜீவித்தார்.

ஈஸா நபியும் கவாரியூன்களும் காட்டிலே நடக்கையில் ஒரு பட்டணத்தருகே போனார்கள். அப்போது ஈஸா நபி “இப்பட்டணத்தில் ஒரு புதையல் உண்டு; அதனை யார்போய் கொண்டு வருகிறீர்கள்?” என்று கேட்டார்கள். அதற்கு கவாரியூன்கள் “இந்த பட்டணத்திற்குள் ஏழையானவன் சென்றால் அவனைக்கொன்று

விடுவார்கள்'' என்று சொன்னார்கள். அதற்கு ஈஸா நபி ''நீங்கள் எல்லோரும் நான் போய் அந்த புதையலை கொண்டுவருமளவும் இவ் விடத்திலேயே இருங்கள்'' என்று சொல்லி ஊரினுள் போனார்கள், அங்கு ஒரு வீட்டு வாசலில் நின்று கொண்டு ''வீட்டையுடையவர் களே! உங்களுக்கு ஸலாம் உண்டாவதாக! நான் ஏழையானவன் சிறிது வஜீபனம் கொடுங்கள்'' என்று கேட்டார். அவ்வீட்டிலுள்ள கிழவி ''நீ வீட்டை விட்டு போகிறாயா? அல்லது உன்னை ராஜ னிடத்தில் கூட்டிக்கொண்டுபோய் வஜீபனம் கேட்கிறான் என்று சொல்லவா?'' என்றாள். பிறகு கிழவியுடைய மகனும் வந்தான். அவனிடம்ஈஸா ''அப்துல்லாவே! எனக்கு விருந்துகொடு'' என்று கேட்டார், அதற்கவன் கிழவி சொன்னதுபோல சொன்னான். ஈஸா நபி ''நீ எனக்கு விருந்து கொடுத்தால் உனக்கு இந்த ஊர் ராஜ னுடைய பகளை கலியான முடித்து தருகிறேன்'' என்று சொன் னார். அதற்கு அந்த வாலிபன் ''நீ பைத்தியக்காரனா அல்லது மரிய முடைய மகனா?'' என்றான். அப்போது ''நான் மரியமுடைய மகன் ஈஸாதான்'' என்றார். பிறகு அவன் ஈஸாவிற்கு விருந்துகொடுத்தான்.

ஈஸாநபி இரவு அவனிடம் தங்கி ஸுப்ஹானபோது ''நீ ராஜ னிடம் போய் உன்மகளை எனக்கு கலியாணம் செய்துகொடு என்று கேள். உன்னை அவன் அடித்துவெளியேதுரத்திவிடுவான்'' என்றார் அவ்வாலிபன் ராஜனிடம்போய் கேட்டு அடித்துத்துரத்தப் பட்டு ஈஸாவிடம் வந்து நடந்த செய்தியைத் தெரிவித்தான். ஈஸா நபி அடுத்த நாளும் போய் கேட்கும்படி சொன்னார். மறுநாளும் அவ்வாலிபன் போய்கேட்டு அன்றும் அடித்துத்துரத்தப்பட்டான். ஆனால் அன்று, முதல் நாள் அடித்த அடிக்கு கொஞ்சமாக அடித் தார்கள். இதனையும் ஈஸாவிடம்வந்து அறிவித்தான். பிறகும் ஈஸா நபி ''மறுநாளும் போய் கேள்; ராஜன் தனது மகளை கலியாணம் செய்து கொடுப்பான். மஹர் மிகவும் அதிகமாக கேட்பான். நீ அந்த மஹருக்கு கபூல் செய்யப்பயப்படாதே'' என்றார். அவன் அதுபோல் மூன்றாவது நாளும் ராஜனிடம் போய் கேட்டான். ராஜன் பொன்னாலும் வெள்ளியாலும் கட்டப்பட்ட வீடொன்று மஹராக கொடுக்கவேண்டு மென்றான், அவ்விதமே கொடுப்பதாக அவ்வாலிபன் கபூல் செய்து அவ்விதமான வீட்டை ஒப்புக் கொள் வதற்காக தன்னுடன் ஆள் அனுப்பும்படிகேட்டேன். ராஜன் சிலரை அனுப்பிவைத்தான். அவர்களைக்கூட்டிக்கொண்டு அவ்வாலி பன் ஈஸாநபியிடத்தில் வந்து ராஜன் கேட்ட மஹரை சொன்னான், ஈஸா அவ்விதமே பொன்னாலும் வெள்ளியாலும் ஜபர்ஜதியாலும் கட்டப்பட்ட மாளிகையை உண்டாக்கி அவனுக்குக் கொடுத்தார். ராஜன் அம்மாளிகையை பார்த்து மெத்தவும் புதுமையாகி தமது மகளை அவனுக்கு நிக்காஹ் செய்து கொடுத்தான். அவ்வாலிபன்

ஈஸா நபியிடம் "அல்லாவுடைய ரூஹே இவ்விதமான சக்திகளை நீங்கள் பெற்றிருக்க, நீங்கள் ஏன் இந்த மிஸ்கீனுடைய ஹாலில் இருக்கிறீர்கள்" என்று புதுமையுடன கேட்டான. அதற்கு ஈஸா நபி "நான் பனுவாக போகிற துன்யாவில் நின்றும் பனுவான ஆகிரத்தைத் தெரிந்து கொண்டேன்" என்றார் அப்போது அந்த வாலிபன் "நானும் பனுவாக போகிறனதவிட்டும் உங்களிடம் சேர்ந்திருப்பேன்" என்று சொல்லி ஈஸா நபியைத்தொடர்ந்து வந்தான். அவரைக் கூட்டிக் கொண்டு கவாரியூன்களிடத்தில் வந்து இவர்தான் இந்த ஊரிலுள்ள நான் கூறிய புதையல் என்றார். அந்த கிழவியுடையமகன் ஈஸா நபியுடைய அஸ்ஹாபிமார்களுடன் சேர்ந்து மவுத்தாகுமளவும் ஈஸாநபியுடனிருந்தான்

ஒரு நாள் ஈஸா அலைஹிஸ்ஸலாம் சென்று கொண்டிருக்கையில் அவருக்கு அருகே ஒரு மையத்தைக்கொண்டு போனார்கள். அந்தமையத்திற்கு ஈஸா நபி துவா செய்ததும் கட்டில் மேலிருந்து மையத்து உயிர்பெற்றெழுந்து, பிடவையைவுடுத்துக்கொண்டு இறங்கி கட்டிலை சுமந்து கொண்டு குடும்பத்தை யடைந்தான். அவன் சிறிது நாள் ஹயாத்தாயிருந்து பிள்ளையும் பெற்றான், ஈஸாநபி, நூஹ் நபியுடைய காலத்தில் வந்த பெரும் வெள்ளத்தின் செய்தியை யறியவேண்டி நூஹ் நபியுடைய மகனார் ஷாம் என்கிறவரை ஹயாத்தாக்கி கப்பலில் நடந்த செய்தியை எல்லாம் கேட்டறிந்து கொண்டு மறுபடியும் அவரை உடனே மவுத்தாகச் செய்தார்கள். ஈஸா (அலை) அவர்களை யஹூதிகள் "உஸைர் (அலை) அவர்களை நீர் ஹயாத்தாக்கி அவர் உமக்குஈமான் கொண்டாரானால் நாங்களும் உமக்கு ஈமான் கொள்கிறோம். இல்லாவிடில் உம்மைச் சுட்டெரித்து போடுவோம்" என்றார்கள். ஈஸா துஆ செய்ததினால் அல்லாஹுத் தஆலா உஸைரை ஹயாத்தாக்கி வைத்தான். உஸைரிடம்யஹூதிகள் "ஈஸாவுடையஹக்கில் நீங்கள்என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு உஸைர் "ஈஸாவாகிறவர் அல்லாவுடைய அப்தும் றஸூலுமாயிருப்பார் என்று உறுதியாய் நான் சாக்ஷிசொல்கிறேன்" என்றார். அவர்கள் உஸைரை தங்களிடத்திலிருக்க துஆசெய்யுமாறு ஈஸா நபியை வேண்டிக் கொண்டார்கள். அப்போதுஈஸா "அவரைகபுரளவில் விட்டு விடுங்கள்" என்று விட்டு விட்டார்கள். அவர் அங்கே இறந்து போனார். யஹூதிகளில் சிறிது பேர் தாங்கள் கொடுத்த வாக்குகளுக்கு மாறுசெய்தார்கள்.

ஈஸா நபி ஒரு நாள் ஒரு ஸிகாயத்திலே ஒரு மனிதருடனே புறப்பட்டுப்போகையில் ஆறு குறுக்கிட்டது. அந்த ஆற்றில் தண்ணீர் மிகுதமாயிருந்தபடியால் அவர்களால் கடக்க முடியவில்லை.

ஈஸா நபி பிஸ்மில்லாஹி என்று எகீன் கொண்டவர்களாக தண்ணீரின் மேல் நடந்தார்கள். அவருடனே போனவரும் தண்ணீரின் பேரில் நடந்தார். மற்றொருவர் தாம் நடப்பதைப்பற்றி பெருமை கொண்டதால் உடனே அவர் தண்ணீரில் மூழ்கினார். பின்பு ஈஸா நபியிடத்தில் ஒத்தாசை தேடினார். ஈஸா நபி அவரை தண்ணீர் நின்றும் பிறப்படவைத்ததும் அவர் தௌபா செய்து கொண்டார்.

ஈஸா அலைஹிஸ்ஸலாம் பூமியில் சிகாயத்போகிறபோது ஒரு யஹூதி அவரைப்பின் தொடர்ந்து நடந்தான். அவனிடம் இரண்டு ரொட்டி இருந்தன. ஆனால், ஈஸாவிடம் ஒரு ரொட்டி மட்டிலும் இருந்தது. அப்போது ஈஸா "உன்னுடைய ஒஜீபனத்தில் என்னையும் கூட்டாக்கிக்கொள்" என்று யஹூதியிடம் சொல்ல யஹூதியும் ஒப்புக்கொண்டார். பிறகு யஹூதி ஈஸாவிடம் ஒரு ரொட்டி இருப்பதை யறிந்து தான் ஒப்புக்கொண்டதைப்பற்றி விசாரமாகி ஈஸா நபி தொழுது கொண்டிருந்தபோது தனது ரொட்டியில் ஒரு ரொட்டியைத்தின்றுவிட்டான். தொழுது முடித்தபிறகு ஈஸா "உன்னிடத்திலிருக்கும் இரண்டு ரொட்டியையும் கொண்டுவா" என்று கேட்டார். அதற்கு யஹூதி ஒரு ரொட்டிதான் கொண்டுவந்ததாக சொன்னார். மற்றொரு ரொட்டி எங்கே என்று ஈஸா வினவியதற்கு யஹூதி தன்னிடம் ஒரு ரொட்டிதான் இருந்தது என்று அறிவித்தார்.

பிறகு இருவரும் நடந்து கொண்டிருக்கும்போது ஈஸா ஒரு கண்ணில்லாதவனைக்கண்டு அவனுக்கு துஆசெய்து பார்வையை மீளவைத்தார். உடனே ஈஸா "குருடனை பார்க்கிறவனாக செய்வித்த ஆண்டவனின் பேரில் ஆணையாக உன்னிடம் எத்தனை ரொட்டி இருந்தன" என்றார். அதற்கும் யஹூதி "அல்லாவின்மீது ஆணையாக ஒருரொட்டியே யொழிய இரண்டல்ல" என்றான். இன்னும் நடந்து செல்லுகையில் ஈஸா ஒரு சப்பாணியைச் சந்தித்து அவனுக்கு துஆசெய்து அவனை நடக்கவைத்தார். உடனே ஈஸா "சப்பாணியை நடக்கிறவனாக உனக்குக் காண்பித்த நாயனின் பேரில் ஆணையாகஉன்னிடம் எத்தனை ரொட்டி இருந்தன" என்றார். இதற்கும் யஹூதி முன்போல் அல்லாவின் பேரில் ஆணைசெய்தார். சிறிது தூரம் சென்றபின் இருவரும் ஒரு ஆற்றை முன்னோக்கினார்கள். அப்போது ஈஸா, அவரை அஸாவை பிடித்துக்கொண்டு தன் காலடிமேல் காலைவைத்து நடக்கச்செய்து கடந்தார்கள். வழியில் ஒரு மானைக்கண்டு ஈஸா நபி அதை யழைத்து அதுவந்ததும் அதனை அறுத்து அதிலிருந்து சிறிதுமாமிசத்தை எடுத்துச் சுட்டுப் புசித்தார்கள். பிறகு எஞ்சிய இறைச்சியை அஸாக்கொண்டடித்ததும், மான் எழும்பி ஓடிற்று. அவர்கள் ஒரு

ஊரை யடைந்ததும் அந்த யஹூதி ஈஸாவுடைய அஸாவை
எடுத்துக்கொண்டு தான் தபீபு நஸலெல்லாம் சுவாத்திய மாக்குவ
தாக சொல்லிச்சென்றான். அச்சமயம் அந்த ஊர் ராஜன் நஸ
லாய் பிடிக்கப்பட்டிருந்ததால் அவனை ராஜனிடத்தில் அழைத்
துச் சென்றார்கள். அவன் ராஜனை சுவாத்தியம் செய்வதாக
சொல்லி தன் கையிலிருந்த அஸாவைக்கொண்டு அடித்
தான். அஸா ராஜனின் உடலில் பட்டவுடன் அவன் மவுத்தாகி
விட்டான். உடனே ராஜாங்கத்தார் யஹூதியைப் பிடித்து
தூக்கிலிடச் சொன்னார்கள். இதுவிஷயம் ஈஸா அலைஹிஸ்ஸலா
மறிந்து ராஜாங்கத்தாரிடம், சென்று தான் ராஜனை ஹயாத்
தாக்கிவைப்பதாகவும், தன்னுடன் வந்த யஹூதியை விட்டுவிடும்
படியாகவும் கேட்டுக்கொண்டார். அவர்கள் ஒப்புக்கொண்டதின்
பேரில் ஈஸா நபி ராஜன்பால் துஆசெய்து ஹயாத்தை பெறும்
படி செய்தார்கள். இதைக்கண்டு யஹூதி ஈஸாவிடம் தான் எக்
காலமும் அவர்களை விட்டுப் பிரிகிறதில்லை என்று வாக்குறுதி
செய்தான். ஈஸா அலைஹிஸ்ஸலாம் ஒவ்வொரு முஹ்ஜிஜாத்து
காண்பிக்கும்போதும் முன்போலவே ஆண்டவன் மீது ஆணையாக
யஹூதிகொண்டு வந்த ரொட்டியைப்பற்றி அவனிடம் வினவிக்
கொண்டு வந்தார். அதற்கு ஒவ்வொரு விடுத்தமும் ஒரே
ரொட்டிகொண்டு வந்ததாக யஹூதி பதிலளித்துக்கொண்டு வந்
தான். அவர்கள் ஒரு சிற்றூரை அடுத்து வருகையில் ஓரிடத்தில்
மூன்று பொன்கல்லைக்கண்டார்கள். யஹூதி ஈஸாவிடம் இது
பொன்கல்லல்லவா என்று வினவினான். அதற்கு ஈஸா அது
பொன்கல்லென்றும் அதில் தமக்கொன்றும் யஹூதிக் கொன்
றும் மற்றொருகல் மூன்றாவது ரொட்டியைத் தின்றவருக்குமென்று
சொன்னார். உடனே யஹூதி ஈஸா தொழுதுகொண்டிருக்கும்
போது தான் மூன்றாவது ரொட்டியை தின்றதாக ஒப்புக்கொண்ட
தின் பேரில் அவனையே மூன்று கல்லையும் எடுத்துக்கொள்ளும்படி
சொன்னார். அவனால் ஒருகல்லையும் தூக்க முடியாமல் போயிற்று.
இதனை ஈஸா கண்டு எடுக்கவேண்டாமென்றும் அதை எடுப்
பவர்கள் ஹலாக்காவார்கள் என்றும் சொன்னார்கள். உடனே
யஹூதி ஈஸாவுடன் வந்து விட்டான், அவ்வழியில் மூவர்
செல்லுகையில் இந்த பொற்கற்களைப் பார்த்து இருவர் ஒருவரிடம்
"நீ ஊரிலபோய் நமக்காக வஜீபனமும் குடிப்பும் வாங்கிக்கொண்டு
இந்தக்கல்களை சுமப்பதற்காக ஒரு ஹைவானை அழைத்துவா; நாங்
கள் இக்கற்களை காவலாக பார்த்துக்கொண்டிருக்கிறோம்" என்று
சொல்லி அனுப்பிவைத்தார்கள். அவன் சென்றதும் இவ்விரு
வரும் அவன் வஜீபனம் கொண்டுவந்ததும் அடித்து கொன்று
விட்டு தாங்களே கற்களை எடுத்துக்கொள்ளலாமென்று பேசிக்
கொண்டார்கள். வஜீபனம் வாங்கச் சென்றவன் தானே மூன்று

கல்களையும் அடையவேண்டுமென்று அவாக்கொண்டு வஜீபனத்தில் நஞ்சை கலந்து கொண்டுவந்து கொடுத்ததும், அவர்கள் இருவரும் யோசித்தபடியே அவனைக் கொன்றுவிட்டார்கள். பிறகு அவன் கொண்டுவந்த நஞ்சுகலந்த வஜீபனத்தை இருவரும் புசித்து மவுத்தானார்கள். இதனை ஈஸா கண்டு துன்யா இப்படிக்கொற்றததான் என்று எஹூதிக்கு சொல்லி அல்லாஹுத் தஆலாவினுடைய அருட்கொண்டு அம்மூவரையும் ஹயாத்தாக்கிவைத்தார்கள். அவர்கள் அந்த கல்லில் நின்றும் ஒன்றையும் பெறுமல் போய் விட்டாகள். உடனே யஹூதியினுடைய நப்ஸு அந்த பொன் னின் மீது ஆசையாகி தனக்குக்கொடுக்கும்படி ஈஸாவிடம் கேட் டான், அவன் ஆகிதொடுத்து அந்தமாக ஈஸா நபியுடைய முஃஜிஸாத்துகளைக் கண்டும் அவருக்கு ஈமான் கொள்ளாமல் அந்த பொன்னை தனக்கு கொடுக்கும்படி கேட்டபடியால் ஈஸா, "நீ அதை எடுத்துக்கொள். துன்யாவிலும் ஆகிரத்திலும் அந்த பொன் பூராவாயிருக்கும்" என்றார். அந்த யஹூதி அதை சுமப்பதற்காக அதனருகே சென்றான். அவனையும் அந்த பொன்னையும் பூமி சொரியவாங்கிக்கொண்டது. ஈஸா நபி சென்று விட்டார். இந்த யஹூதியின் முஃஜிஸாத்தை வஹ்பு ரலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிறார்கள்.

அல்லாஹுத் தஆலா திருகுர் ஆனில் வானத்தில் நின்றும் ஓடுக்கு இறங்கினது என்று திருவுளமானான். ஹவாரியூன்கள் மரியமுடைய ரப்பாகிய ஈஸா சக்தி பெறுவானு? என்றார்கள். அதற்கு ஈஸா "நீங்கள் ஈமான்கொண்டவர்களாயிருந்தால் அல்லாவுக்கு பயந்து கொள்ளுங்கள்" என்றார். அப்போது ஹவாரியூன்கள் நாங்கள் ஓடுக்கில் நின்றும் தின்கிறதை நாடுகிறோம். எங்களுக்கு இல்மு அதிகமாகிறதையும், எங்களுடைய கல்பில் எகீன் அதிகமாகிறதைக் கொண்டும் நாங்கள் அதனமேல் சாக்ஷிகளாயிருக்கிறதை நாடுகிறோமென்றார்கள். ஈஸா ஆண்டவனிடம் "ஆண்டவனே! எங்களை வளர்க்கிறவனே! எங்களுக்கு ஓடுக்கை இறக்கித் தந்தருள். அந்த ஓடுக்கு இறங்கும் நாளை எங்களுக்கு முன்னிருக்கிறவர்களும், பின்னிருக்கிறவர்களும் ஈதாகவே கொண்டாடி சிறப்பாக்கிவைப்போம். அந்த ஓடுக்கானது உனது குதரத்தின் மீதும் எனது நுவுவ்வத்தின்மீதும் திருஷ்டாந்திரமாயிருக்கச் செய்வாயாக" என்று துஆசெய்தார். அல்லாஹுத் தஆலா ஈஸா உடைய துஆவை கபூல்செய்து ஓடுக்கு இறங்கினதற்கு பின் எவரும் மாறு செய்வாராகில் அவருக்கு உலகத்தாரில் எவருக்கும் செய்யாதகொடிய அதாபைச் செய்வேன் என்று சொல்லி மலக்குகள் மூலம் வானத்திநின்றும் ஓடுக்கைகொண்டு வந்து இறக்கினான். ஹவாரியூன்கள் அவர்கள் தின்னக்கூடிய வஜீபனம் சிலவாகி

போகாமல் என்னாளும் இருக்கக் கூடிய வஜீபனம் வேண்டுமென்று கேட்டார்கள். ஈஸா நபி அதில் மீதிவைக்காமல் தின்று விட வேண்டும். அப்படி நீங்கள் மீதி வைத்தால் அதாபு செய்யப் படுமென்று சொல்லி விட்டு, துஆ செய்தார்கள்.

அவர்களுடைய துஆ கபூல் செய்யப்பட்டு ஏழு ரொட்டியும் மீனும் இறங்கிற்று. அவர்கள் வயிறு நிறையுமளவும் தின்றார்கள். ஒருநாள் மறு நாளைக்காக மீதி வைத்து களவுசெய்து கொண் டார்கள். இதனை ஈஸா அறிந்து இனிமேல் வஜீபனம் இறக்கப் படமாட்டாதென்றார். களவு செய்தவர்கள் எல்லாரும் குரங்கு களாகவும் கின்ஸீர்களாகவும் மாற்றப்பட்டனர்.

ஈஸா நபி பனீ இஸ்ராயீல்களிடம் நீங்கள் முப்பது நோன்பு வைத்து பிறகு அல்லாவிடத்தில் உங்களுக்கு வேண்டியதைக் கேட் டால் கொடுப்பான் என்றார். அவர்கள் முப்பது நாள் நோன்பு வைத்து பிறகு "ஈஸாவே நாங்கள் முப்பது நாளாக பசித் திருந்தோம். நாங்கள் ஒருவனுக்குப் படித்துக் கொடுத்திருந் தாலும் எங்களுக்கு வஜீபனம் கொடுப்பான். ஆகையால் அல்லா ஹூத் தஆலாவினின்றும் எங்களுக்கு ஒடுக்கிறங்க துவாச் செய் யுங்கள்" என்றார்கள். பிறகு ஈஸா நபி சூபுடுத்திக்கொண்டு சாம்பலை விரித்துக்கொண்டு அல்லாவிடத்தில் துஆ செய்தார்கள். உடனே மலக்குகள் ஏழுரொட்டியும் ஏழு மீனும் சுமந்து கொண்டு பனீ இஸ்ராயீல்களிடம் வைத்தார்கள். அதனை முந்தின பேர்களும் பிந்தின பேர்களும் தின்றார்கள். இன்னும் அநேகர் வானத்தி லிருந்து இறங்கின ஒடுக்கில் பல பல விதமான வஸ்துகளும் பழ வர்க்கங்களும் இருந்ததாக சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் "ஒடுக்கு இறங்குகிறதை யாவரும் கேட்டபோது, ஈஸா அலை ஹிஸ்ஸலாம் சூபை உடுத்தி அல்லாஹும்ம அஞ்ஜில் அலைனா என்ற ஆயத்தைகொண்டு அழுது, ஆண்டவனிடம் அந்த ஒடுக்கில் இருக்கிறதை பலாயாகவும் வேதனையாகவுமாக்காமல் நிஃமத் தாக்க துஆ செய்து இறங்கிய ஒடுக்கை ஹவாரியூன்களில் அழகானவர் போய் திறந்து அல்லாஹூத் தஆலாவுடைய இஸ்மையும் திக்ரையும் செய்து புசிக்கும்படி சொன்னார். அப் போது ஹவாரியூன்களின் தலைவரான ஷம்ஊனஸ்ஸபா என்பவர் ஈஸாவை அதைத்திறப்பதற்கு தகுந்தவரென்று அவரை திறக் கும்படி சொன்னார்.

ஈஸா நபி ஒலூச் செய்து இரண்டு ரக்கஅத்து தொழுது கொண்டு ஒடுக்கிலிருக்கிற சுபுராவை பிஸ்மில்லாஹி கைருன் ராஸிகீன் என்று அவிழ்த்தார். அந்த ஒடுக்கில் செவிளும்

முள்ளுமில்லாத கொழுப்பு நிறைந்த சுட்ட மீன் ஒன்று இருந்தது. அதன் தலை புரத்தில் உப்பும் வால் புரத்தில் ஷிர்க்காயும் அதனைச் சூழ பல கரியும் கீரையும் அதற்கு மேல் ஐந்து ரொட்டிகளும் வைக்கப் பட்டிருந்தன. ஐந்து ரொட்டியின் பேரிலும் முறையே, ஸைய்த்தூன் நெய், தேன், எண்ணெய், பன்னீர், கபாபு, இருந்தன. அப்போது ஷம்வூன் "யாரூஹுல்லா! இந்த வஜீபனம் துனியாவினுடையதா? அல்லது ஆகிரத்துடையதா?" என்று வினவினர். ஈஸா நபி "இது துன்யாவிலுடையதுமல்ல ஆகிறத்துடையதுமல்ல. ஆனல் இதை அல்லாஹுத் தஆலா புதுமையாக அவனுடைய குதரத்தைக் கொண்டு உண்டாக்கினன். நீங்கள் கேட்டபடி தின்று அவனுக்கு ஷுக்கூர் செய்தீர்களானல் உங்களுக்குதவிசெய்து உங்களை யேன்மையாக்குவான்" என்றர். அப்போது ஹவாரியூன்கள் இன்னுமொரு முஃஜிஸாத்துக் காட்டும்படி கேட்டுக் கொண்டார்கள்.

ஈஸா நபி மீனை அல்லாவுடைய அருள்கொண்டு ஹயாத்தாகும்படி சொன்னதின் பேரில் சுடப்பட்ட செவிள், முள் இல்லாத மீன், எல்லா அவயங்களுமுண்டாகி உயிர் பெற்றது. இதனைக்கண்டு அவர்கள் பயந்ததுமஈஸா "அவர்களை நீங்கள் கேட்டதை கொடுத்தால் ஏன் சந்தேகம் கொள்கிறீர்கள் என்று சொல்லி மறுபடியும் மீனை நாயனின் அருள்படி முன் போலாகிவிடச் செய்தார். அவர்கள் ஈஸாவிடம்அவ்வஜீபனத்தை முதலாவதாக புசித்தால் பிறகு தாங்கள் புசிப்பதாக சொன்னர்கள் ஈஸா நபி தாங்கள் அதை சாப்பிடுவதை விட்டும் நாயனிடம் காவல் தேடுவதாயும் அதைக் கேட்டவர்கள் புசிப்பார்கள் என்று சொன்னர். பிறகும் அவர்கள் புசிக்க பயந்ததால் ஈஸா நபி நஸலாளிகள், வெண்குஷ்டம், பெரும் வியாதி முதலிய பல வியாதியஸ்தர்களை அழைத்து அல்லாஹுத் தஆலாவால் கொடுத்த இந்த இரணத்தை நீங்கள் புசித்து சுகமடைவீர்களாக என்று சொனனர்கள். அதனை பலாயையுடைய ஆண் பெண் யாவர்களும 1300 பேர் வயிறு நிறைய தின்று தங்களுடைய நஸல் பலாய்கள் எல்லாம் நீங்கி சுவாத்தியமடைந்தார்கள். அந்த மீன் அவ்வளவு பேர் புசித்திருந்தும் குறையாமலிருக்கக் கண்டார்கள். ஈஸா நாடியபடி எல்லோருடைய முன்னிலையும் அந்த மீன் பறந்து போய் மறைந்தது அவர்களில் வியாதியுடைவர்கள் சொஸ்தமாகவும், வறுமையுடையவர்கள் அதை புசித்தவர் சீமானுகவுமானர்கள். ஹவாரி யூன்கள் தாங்கள் புசிக்காததைப்பற்றி கைசேதப் பட்டார்கள். மறுபடியும் ஒடுக்கு இறக்கினல் அதனை புசிக்க எல்லோரும் கூடுவார்களென்று ஈஸா நபி இத்தனை பேர் என்று எண்ணிக் கொண்டார்.

அல்லாஹுத் தஆலா நாற்பது ஸுபுஹிலே ஓடுக்கிறக்கி வைத்தான், அவன் ஒடுக்கை ஒருநாள் விட்டு மறுநாள் இறங்கச் செய்து அதனை பகீர்களுக்குக் கொடுக்கும்படியும் சீமான்களுக்கு வேண்டாமென்றும் ஈஸா நபிக்கு வஹி அறிவித்தான். உடனே பகீர் அல்லாதாரெல்லாம் ஆண்டவனிடம் முறையிட்டார்கள். நாயன் இவர்களுடைய முறைபாட்டை அனுசரித்து ஒடுக்கிறங்கினதற்கு பிறகு எவரும் காபிராயிருந்தால் அவருக்கு எவருக்கும் செய்யாத கொடூரமான அதாபு செய்யப்படுமென்று ஈஸாவுக்கு வஹி இறக்கினான். நாயனின் கட்டளைப்படி ஒடுக்கைத்தின்று மாறு செய்த 333 பேர் தங்களுடைய வீட்டில் பெண்ஜாதிமாருடன் இறவில் நித்திரை செய்து ஸுபுஹில் விழிக்கிறபோது கின்ஸுர்களாக மாறி தெருவில் ஓடி நஜீஸுகளை தின்று கொண்டு திரிந்தார்கள். மற்றவர்கள் அவைகளை கண்டு பயந்து ஈஸாவிடம் வந்து அறிவித்தார்கள். அந்த கின்ஸுர்களை ஈஸா பார்த்தபோது அவர் அவர்களின் பெயரை கொண்டு கூப்பிட்டதும் அழுது கொண்டு பேசுகிறதுக்கு சக்தியில்லாமையால் தலையைக் கொண்டு இஷாரா செய்தனர். இவ்விதம் மூன்று நாள் கின்ஸுர் வடிவிலிருந்து பிறகு மவுத்தானார்கள்.

ஒரு ஊரில் ஒரு புருஷனும் பெண்ஜாதியும் வாழ்ந்து வந்தனர். அவர்கள் இருவரும் நிரம்ப நேசபான்மையோடிருந்தனர். பெண்ஜாதி இறந்து போனாள். அச்சமயத்தில் அவ்வூருக்கு ஈஸா அலைஹிஸ்ஸலாம் வந்திருந்தார்கள். அவளுடைய புருஷன் ஈஸா வந்திருப்பதை கேள்வியுற்று அவரை தன் பெண்ஜாதியை உயிர்ப்பிக்கும்படி வேண்டினான். ஈஸா அலைஹிஸ்ஸலாம் துஆ செய்து ஹயாத்தாக்கினார்கள். புருஷன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு வரும்போது தனக்கு நித்திரை வந்தபடியால் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அவள் மடியின் மேல் தலையை வைத்து நித்திரை செய்தான். அச்சமயம் ஒரு ராஜன் மகன் அவ்வழியாக வந்து அவளைப் பார்த்தான். அவள் மிக்க ஸுரத்தானவளாயும் பார்ப்பவர் மனதைக் கவரச் செய்யத்தக்க அழகு வாய்ந்தவளாயும் இருந்ததால். அவள்மேல் ஆசைகொண்டான், அவளும் அவன்மேல் ஆசையானாள். ராஜன் மகன் இஷாராச்செய்து அவளை அழைத்தான். அவள் தன் புருஷன் தலையை ஒரு கல்லின்மேல் வைத்துவிட்டு ராஜன் மகனுடன சென்றுவிட்டாள். புருஷன் விழித்துப் பார்க்கையில் மனைவியைக் காணாதபடியால் தேடி, ராஜன் மகனுடன் சென்றதாக அறியலானான, உடனே ராஜன் மகனைப் பின்தொடர்ந்து பிடித்து "ஏன் என்பெண்ஜாதியை கூட்டிக்கொண்டு போகிறீர்" என்று கேட்டதற்கு ராஜன் அவளை தனது வெள்ளாட்டி என்று பதிலளித்தான். அத்தருணம் ஈஸா நபி அவ்விடம்

வந்துகொண்டிருந்தார். அம்மனிதன் தன்னுடைய கிஸ்ஸாவை எல்லாம் அவரிடம் முறையிட்டான். ஈஸா நபி அவளையார் என்று வினவ, அவள் தான் வெள்ளாட்டி என்றும் இம்மனிதனை நான் அறியேன் என்றும் சொன்னாள். உடனே ஈஸா அவளிடம் தான் கொடுத்ததை கொடுத்து விடும்படி கேட்க அவள் கொடுத்து விட்டேன் என்று சொல்லி மைய்யத்தாக விழுந்துவிட்டாள். அப்போது ஈஸா இப்பெண்பிள்ளை அல்லாவின் முஃமினுக மவுத்தாகி பிறகு ஹயாத்தாக்கப்பட்டு காபிராக மவுத்தானுள் என்றூர்கள்.

அல்லாஹுத் தஆலா "ஈஸாவே உம்முடைய ரூஹை மூன்று ஸாஅத்து நேரம் நான் கைப்பற்றி உம்மை மவுத்தாக்கிறேன். பின்பு உம்மை ஹயாத்தாக்கிவைத்து என்னளவில் ஹயாத்தாக உயர்த்திக் கொள்கிறேன். உமக்கு மாறுசெய்து காபிர்களாக இருக்கிறூர்களே அவர்களை விட்டும் உம்மை தூரமாக்கிறேன். உம்மைத் தொடர்ந்து உண்மையாக்கிவைத்த முஸ்லிமானவர்களையும் நஸாராக்களையும் உமக்கு மாறு செய்த யஹூதிகளுக்கு மேன்மையாக்கிறேன். நீங்கள் கியாமத்து நாள் வருமளவும மீளுகிறது என்னளவிலாயிருக்கும். உங்களுக்கிடையிலே நீங்கள் இகதிலாபாயிருக்கிறதினுடைய காரியத்தில் ஹுக்கும் செய்வேன்" என்று திருகுர் ஆனிலே திருவுளமாயிருக்கிறுன்.

யஹூதிகளில் ஒரு கூட்டத்தினர் ஈஸா நபியைக் கண்டபோது, சூனியக்காரி மகன் சூனியக்காரன் வருகிறுன் என்று ஈஸாவையும் மரியமையும் படர்பேசினுர்கள். ஈஸா நபி அதனைக்கேட்டு அவர்கள் பேரில் பத்துவா செய்து ஆண்டவனிடம் இவைகளை விட்டும் காத்தருளும்படியும் தன்னையும் தனது தாயையும் படர் பேசினவர்கள் பேரில் லஃனத்து செய்யுமாறும் துஆசெய்தார்கள்.

அல்லாஹுத் தஆலா அவரது துஆவை கபூல்செய்து அவர்களை திட்டினவர்களை கின்ஸீர்களாக மாற்றி விட்டான். எஹூதிகள் அதைபார்த்து பயந்து அவரை எவ்விதத்திலும் வெட்டிப் போடவேண்டுமென்று ஒன்று கூடினுர்கள். அப்போது ஈஸா எஹூதிகளிடம் அல்லாஹுத் தஆலா அவர்கள் பேரில் கோபமாய் இருக்கிறதை யறிவித்தார். இச்சொல்லின் பேரில் அவர்கள் மிகவும் கோபங்கொண்டு எவ்விதத்திலும் ஈஸாவை கொன்றுவிட திடசித்தம் செய்தார்கள். அல்லாஹுத் தஆலா ஜிப்ரீலை அனுப்பி ஈஸா நபியை ஒரு அரையின் ஜன்னலுட்குள் புகுத வைத்து, அரையின் மேல் பகுதியில் துவாரம் உண்டு பண்ணச் செயது உயர்த்திக்கொண்டான். எஹூதிகளுக்குத் தலைமையானவரும் அவனது அமீரும், அவர்களுடைய அஸ்ஹாபிகளில் ஒருவனுகிய கைத்தனூஸ் என்பவனை அந்த ஜன்னலுட்குள்போய் ஈஸாவைக்கொன்று விடும்படி ஏவினுர்கள். அவன்

உள்ளே புகுந்து ஈஸாவைக் காணுமல் அவன் வெளியில் வர சிறிதுநேரம் தாமதித்ததால் எஹூதிகள் கைத்தானூஸ் ஈஸாவைக் கொன்று விட்டான் என்று எண்ணினூர்கள். அல்லாஹுத் தஆலா ஈஸாவுக்கொப்பாயிருக்கிற வடிவத்தை கைத்தானூஸின் பேரில் ஆக்கி வெளிவரச்செய்தான். எஹூதிகள் அவனை ஈஸா வென்றெண்ணி தூக்கிலிட்டார்கள்.

ஈஸா அலைஹிஸ்ஸலாமுக்கு தம்மை மவுத்தாக்கி பின்பு ஹயாத்தாக்கி உயர்த்திகொள்கிறேனென்று ஆண்டவனிடமிருந்து வஹிவந்தபோது, தம்முடைய அஸ்ஹாபிகளிடம் தமக்கு ஒப்பாக இருப்பவனைப்பிடித்து தூக்கிலிடப்படுமென்றும், அதற்கு கபூல் செய்தவன் தன்னுடன் சுவர்க்கத்திலிருப்பான் என்றும் சொன்னூர்கள். அதற்கு தமது அஸ்ஹாபிகளில் ஒருவர் இருமுறை கேட்டு ஒப்புக்கொள்ள ஈஸா (அலை) அவர்கள் அங்கீகரிக்க அவர் ஆண்டவனுல் ஈஸாவுடைய சூறத்திலாக்கப்பட்டு இருந்தார். பிறகு ஈஸா நபி ஒரு இருளான வீட்டிற்குள் புகுந்து ஜன்னல் மூலம் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் ஈஸாவை உயர்த்திக்கொண்டுபோனூர். எஹூதிகளின் தலைமைக் காரன் கைத்தானூவிடம் ஈஸாவைக் கேட்டதற்கு காணவில்லை என்று சொன்னூர். பிறகு தேடிபார்க்கையில் அவருக்கொப்பாகப்பட்ட சூரத்துடைய ஒருமனிதனைக் கண்டு ஈஸாவென்று அவரைத் தூக்கிலிட்டு கொன்றூர்கள். இதனுல், எஹூதிகள் தாங்கள் றஸூல் என்று இருந்த மரியமுடைய மகன் ஈஸாவை கொன்று விட்டதாக பெருமைகொண்டு ஆரவாரம் செய்தனர். ஆயினும் அவர்களில் சிலர் ஈஸாவை வெட்டினூர்கள் என்பதில் மாறுபாடடைந்தனர். ஏனெனில் சிலர் வெட்டினதில் வெட்டப்பட்டவருடைய முகம் ஈஸா வென்றும் அவருடைய சரீரம் ஈஸா வுடையதல்ல வென்றும் சிலர் எண்ணினூர்கள்.

இன்னும் சில கிரந்தங்களில் ஈஸாவை எஸூதிகள் பிடித்து கட்டி யிழுத்து கொண்டுபோகையில் மவுத்தானவர்களை ஹயாத்தாச்சுவது போலவும் பெருங்குஷ்டம், வெண்குஷ்டம், சூனியம் இவைகளை நீக்குவது போலவும் தம்மைதாம் இக்கயிருகளை விட்டும் தப்பிக்கொள்ளும்படி சொல்லி பரகசித்து அவர்மேல் முள்ளை எறிந்து தூக்கிலிட ஒரு மரத்தை நட்டினூர்கள். அச்சமயம் பூமி எல்லாம் இருளாயிற்று என்றும் அல்லாஹுத் தஆலா மலக்குகளை அனுப்பி எஸூதிகளின் தலைவனுக்கு ஈஸாவுக்கு ஒப்பாயிருக்கிற சொரூபத்தையளித்து அவனை தூக்கிலிட செய்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

அல்லாஹுத் தஆலா திருகுர்ஆனில் திருவுளமானதுபோல ஈஸா நபியை பகலிலே மூன்று ஸாஅத்து நேரமட்டும் மவுத்தாக்கி

பிறகு ஹயாத்தாக்கி வானத்தளவில் உயர்த்திக்கொண்டான். ஈஸாவிற் கொப்பானவரை தூக்கிலிடப்பட்டபோது ஒருபெண் தூக்குமரத்திலருகில் போய் விசாரத்துடன் அழுதுகொண்டிருந்தது. ஈஸா நபி அப்பெண்ணிடம் யார்பேரில் அழுகிறீர்கள் என்றும் தான் அல்லாஹுத் தஆலாவால் தன்னளவில் உயர்த்தப்பட்டு விட்டான் என்றும், தூக்கில் போடப்பட்டவன் தனக்கு ஒப்பானவன் என்றும் சொன்னார்கள். இன்னும், ஈஸாவிற்கு ஒப்பானவர் பனிஇஸ்ராயீல்களிலுள்ள ஹந்தீறுடைய மகன் அஸுயூஹு என்றும் அவர் சிகப்பாயிருந்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஈஸா நபி வானத்திலுயர்த்தப்பட்டு அவ்விடம் ஏழுநாளிருந்தார்கள். பிறகு அல்லாஹுத் தஆலா ஈஸா நபிக்கு "எஹூதிகள் உம்முடைய உபதேசத்தை நிராகரிப்பதின்மேல் தீபரிக்கிறார்கள். நீர் இறங்கி உம்முடைய அஸ்ஹாபிகளுக்கு வஸீயத்து செய்யும்; மரியமுல் மஜிதிலானியா என்கிற பெண்பிள்ளை உமது மேல் மெத்தவும் அழுகிறாள். அவளை அழவேண்டாமென்றும் மஸ்ஜிதை லாஜிமாக்கிக்கொள் என்றும் சொல்லும்" என்றான்.

அந்தாகியாவுடைய சிற்றூர்களில் வஜிதிலான் என்ற ஓர் ஊரில் பனீ இஸராயில் கோத்திரத்தை செர்ந்த ஒரு சாலிஹான பெண்வசித்து வந்தாள். அவளுக்கு என்னும் ஹைறஹு வருகிற இல்லத்து உண்டாயிருந்தது. பனீ இஸ்ராயீல்களில் உத்தமர்களில் அநேகர் இப்பெண்ணை மணந்து கொள்ள கேட்டும் அவள் யாருக்கும் உடன்படவில்லை. அவள் தன்னையே சிரேஷ்டமாக எண்ணி மணம் செய்ய நிராகரித்தாள் என்றும் அவரவரும் எண்ணினார்கள். ஆனால் அவள் தன்னுடைய ஐபைமறைப்பதற்காக சம்மதியாதிருந்தாள். ஒருநாள் ஈஸா நபி அவ்வூருக்கு வந்த செய்தியை கேட்டு அவரிடம்போய் தன் இல்லத்தைச் சொல்ல வெட்கித்து, அவர் பின்போய் முதுகைத்தொட்டாள், உடனே ஈஸா நபி வியாதியையுடையபெண் சௌக்கியத்தை பூரணத்துடன் நம்பி என்முதுகைத்தொட்டால் அல்லாஹுத் தஆலா அவள் நாடியதை கொடுப்பானாக! என்று துவாசெய்தார்கள். உடனே அவளுடைய ஹைறஹு நின்று இல்லத்து நீங்கிற்று. இந்தப்பெண்ணின் பெயர் தான் மரியமுல் மஜ்திலானியா. இதனால் இவள் ஈஸாவிற்கு ஈமான் கொண்டு அவரை தூக்கிலிட்டதாக கேள்விப்பட்டு அங்கு சென்று முன் கூறியது போல் அழுதாள். அல்லாஹுத் தஆலா ஏவியபடி ஈஸா நபி மரியமுல் மஜ்திலானியாவினுடைய ஊரிலிறங்கியபோது மலைகளெல்லாம் ஒளிவாகி ஹவாரியூன்களெல்லாம் வந்து கூடினார்கள். ஈஸா நபியை அல்லாஹுத் தஆலா பூமியிலிறங்கி ஹவாரியூன்களை ஒவ்வொருவரை ஒவ்வொரு பகுதிக்கு அனுப்பி தன்னுடைய தீனைக்கைப்பற்ற உபதேசம் செய்யும்படி ஏவினான். பிறகு

ஈஸா நபியை அல்லாஹுத் தஆலா தன்னளவில் வானத்திலுயர்த்தி சிறகையும் ஒளிவையும் உடித்தி ஆத நபியுடைய வடிவத்தை நீக்கி மலாயிகத்துகளுடன் பறக்கவும் மனிதராகவும் மலக்காகவும் பூமியிலும் வானத்திலும் எங்கும் இருக்கச் செய்தான்.

ஈஸா நபியை வானத்தளவில் உயர்த்திய பிறகு ஹவாரியூன்கள் ஈஸா நபி ஏவினபடி புத்தூஸ் ரோமுக்கும்; நதராணி, மனிதரை மனிதர் தின்கிற ஊருக்கும்; தௌமா, பாபிகளுக்கும்; பல்கஸ், கபுர்வானுக்கும்; அபுரிகியாமும் நஜிஸரும், அபுஸுரூருக்கும்; யவ்பூஸ், சலாமுக்கும்; கலமா ஹிஜாஜுக்கும் சென்றார்கள், மேற்கூறிய ஊர்கள் அஸ்ஹாபுல் கஹ்புகள் உடைய ஊராய் இருந்தபடியால் அந்தந்த ஊருக்கு அனுப்பி வைத்த ஹவாரியூன்களை அந்தந்த ஊர் பாஷையை பேசும்படி செய்தார்கள். பின்பு எஹூதிகள் ஒன்று சேர்ந்து ஹவாரியூன்களை அதாபுசெய்ய தொடங்கினார்கள். இச்செய்தி புத்தைவணங்குகிறவனாக இருந்த ரோம் அரசனுக்குத் தெரியவந்தது. இன்னும் அவனது ராஜங்கத்தில் மவுத்தானவர்களை ஹயாத்தாக்கியும், நஸல்களை நீக்கச்செய்தும் ஹைபான செய்திகளை எல்லாம் அறிவித்தும் இருக்கும்படியான சக்திவாய்ந்த ஒரு மனிதர் இருந்தார் என்றும் அவர்மேல் எஹூதிகள் பகைகொண்டு கொன்று விட்டனர் என்றும் அரசனுக்குத் செய்தி எற்றிற்று. உடனே அரசன் மிக்க கைசேதப்பட்டு எஹூதிகளில் நின்றும் ஹவாரியூன்களை தன்னிடம் அழைத்துவரும்படி ஆட்களை அனுப்பி வைத்தான். அவர்கள் வந்ததும் ராஜன் ஈஸாவுடைய மார்க்க போதனைகளைக் கேட்க அவர்கள் சொன்னார்கள். அவன் அவர்களைத்தொடர்ந்து ஹவாரியூன்களுக்கு ஈமான் கொண்டு அவர்கள் தீனிலாகிவிட்டான். பிறகு ஈஸாவிற்கொப்பானவரை தூக்கில் போட்டதை அவரைத்தூக்கைவிட்டு கைபாக்கிதூக்கு மரத்தைக்கொண்டு வரச் செய்து அதைச் சங்கையுடன் ஈஸாவென்று பேணுதலுடன் வைத்துக்கொண்டான். பிறகு பனீ இஸ்ராயில்கள் மீது கோபங் கொண்டு அநேகரை வெட்டி விட்டான். இதனால் ரோமில் பிளவு ஏற்பட்டது.

"பீவிமரியம் 13-வது வயதில் ஈஸாவை ஹமலாகி ஜலமென்கிற ஊரில் லகமுடைய மகள் வீட்டில் ஸ்கந்தருடைய காலத்திலிருந்து 25-வருடத்திற்கு பிறகு ஈஸா பிறந்தார். அவர் பிறந்த முப்பதாம் வருடத்தில் அல்லாஹுத் தஆலா அவருக்கு நுபுவ்வத்து கொடுத்து பிறகு தன்னளவில் பைத்துள் முகத்திஸ் என்னும் ஊரில் ரமலான்மாதம் லைலதுல் கதருடைய இரவில் முப்பத்தி மூன்றாவது வயதில் வானத்தளவில் உயர்த்திக் கொண்டான். அவருடைய நுபுவ்வத்து பூமியில் நபியாக மூன்று வருஷம் இருந்தார். பீவிமரியம் ஈஸாநபி வானத்திலுயர்த்தப்பட்ட பிறகு

ஒரு வருஷம் ஹயாத்தாயிருந்து வபாத்தானுர்கள்" என்று வஹ்பிப்னுமுனப்பா பேசி வருகிறுர்கள்.

"அல்லாஹுத் தஆலா ஈஸா நபியை உயர்த்திக் கொள்ள நாடிய போது ஹவாரியூன்களை உடற்பிறப்பாக்கிக் கொண்டு அவர்களில் நின்றும் ஷம்ஹூனையும் எஹ்யாவையும் பீவிமரியமிடம் எந்நேரமும் இருக்கச் சொல்லி அவர் போகுமிடமெல்லாம் உடன் செல்லும்படி காவலாக நியமித்தார். ரோம் அரசனுகிய பாதூன் இடம் பீவிமரியத்தை அழைத்துச் சென்றுர்கள். இவர்களுக்கு முன் யூனுஸ் என்கிறவர் ராஜாவை தீனிலழைக்க போயிருந்தார். இவர்களும் போய் சேர்ந்தபோது ஷம்ஹூனையும் யூனுஸையும் வெட்டி தலைகீழாகத் தூக்கி விட்டான். இதனைக் கண்டு மரியமும் எஹ்யாவும் ஓடுகையில் இவர்களைப் பின்பற்றி வந்தார்கள். உடனே பூமி பிளந்து இருவரும் அதனுள் மறைந்தார்கள். அரசனும் அவனது அஸ்ஹாபிகளும் பூமியைத் தோண்டிப்பார்க்கையில் ஒருவரையும் காணுமல் மண்ணை மூடிவிட்டு அல்லாவுடைய ஏவல் என்று அறிந்து கொண்டார்கள். பிறகு ஹவாரியூன்களை சேர்த்து கொண்டு எஹூதிகளை வெட்டி அவர் இஸ்லாத்திலானுர்" என்று ஒருவர் சொல்லியிருக்கிறுர்.

"அன்பியாக்களுடைய தாய்மார்கள் பல பிரிவைக்கொண்ட ஒரே தீனையுடைவர்கள்; மரியமுடைய மகன் மிக்க சிரேஷ்டமாய் றஸூலாய் அனுப்பப்பட்டவர்; உம்மத்துகளின்மேல் எனக்கு கலீபாவாக யிருப்பார், அவர் மனிதராயும், சிகப்பு வெள்ளை கலந்தவராயும், மயிர் அடர்த்தி யின்றியும், மிஸிர்பட்டணத்தில் நெய்யப்பட்ட இரண்டு பிடவையை உடுத்திக்கொண்டிறங்கி கலீபை எல்லாம் முறித்துகின்ஸீரைக்கொண்டு திறைகெட்டுகிறதை வாஜிபாக்கி பைத்துல்லாவிற்கு ஹஜ் உம்ரா செய்து இஸ்லாமாகிறதின் பேரில் மனிதரை வெட்டுவார். அவருடைய காலத்தில் தஜ்ஜாலை ஹலாக்காக்கி பூமியில் அச்சம் தீரும்படி செய்வார். புலி ஒட்டகையுடனும், ஒனுய் ஆடுடனும் பிள்ளைகள் பாம்புடனும் விளையாடி மேய்வார்கள். அவர் பூமியில் 40 வருஷம் ஜீவித்து கலியாணம் செய்து பிள்ளையும்பெற்று பின்பு மவுத்தாவார். முஸ்லிமானவர்கள் அவரை தபன் செய்வார்கள்" என்று ஒரு கிதாபில் இருப்பதாக அபூஹுரைரா ரிவாயத்து செய்திருக்கிறுர்.

அல்லாஹுத் தஆலா ஈஸாவை தன்னளவில் உயர்த்திக் கொண்டபோது இருவரை அனுப்பிவைத்தான். அவர்கள் இருவரையும் ஜனங்கள் பொய்யாக்கிவைத்தார்கள். மூன்றுவது ஒருவரையும் அனுப்பி முன்னுள்ள இருவரையும் சிரேஷ்டித்தான். மூவரும் ஜனங்களிடம் நாயனுல் அனுப்பப்பட்ட றஸூல் என்றும் உலமாக்களென்றும் சொன்னுர்கள், என்று அல்லாஹுத் தஆலாகுர்

ஆனில் திருவளமாயிருக்கிறான். ஈஸாநபியுடைய ஹவாரியூன்களில் நின்றும் இருவரை அந்தாகியா என்னும் ஊருக்கு அனுப்பிய போது அங்கு யாஸீனுடைய ஸாஹிபு ஹபீபுல் புகாரி என்னும் கிழவன் ஆடுமேய்க்கக்கண்டு ஸலாம் சொன்னார்கள். அவர் இவர்களை, யார்? என்று வினவியதற்கு தாங்கள் ஈஸாவுடைய றஸூல் என்றும் தாங்கள் புத்துகளை வணங்குகிறதைவிட்டும் நாயனுடைய இபாதத்தின் வணக்கத்தில் அழைப்பதற்காக அனுப்பப்பட்டவர்கள் என்றார்கள். கிழவர் அதற்கு அத்தாக்ஷிகேட்க இவர்கள் அல்லாவின் உதவி கொண்டு, நஸல், பிறவிக்குருடு, வெண்குஷ்டம், கருங்குஷ்டம் முதலியவைகளை சுவாத்தியம் செய்வதாக தெரிவித்தார்கள். கிழவர் தனது மகன்வெகுகாலமாக நஸலாயிருப்பதை சொல்லி அழைத்து சென்று, இவர்களுடைய கையினால் தடவி அல்லாவினுதவியால் நஸல் நீங்கிற்று. இச்செய்தி ஊரெங்கும் தெரிந்து, பாவி, அழைத்துச்சென்று நோயாளிகள் நாயன் உதவியால் சொஸ்தமடைந்தார்கள்.

சலாவுன் என்றும் நதிஜஸ் என்றும் வழங்கப்படும் அவ்வூர் ராஜன் புத்தை வணங்கி கொண்டிருந்தான். இச் செய்தியை அவன் கேள்வியுற்றழைத்து விசாரித்தான். அவர்கள் ஈஸாவுடைய றஸூல் என்று சொல்ல, அவன் முஃஜிஸாத்து வினவியதற்கு, நஸல் வியாதிகளைத் தீர்ப்பதாக தெரிவித்தார்கள். எக்காரியத்திற்கு வந்தீர்களென்று அரசன் வினவியதற்கு, பார்க்காமலும் கேட்காமலும் இருக்கிற புத்தை வணங்குவதைவிட்டும் நீக்கி பார்ப்பவனும் கேட்பவனுமாகிய அல்லாஹுத் தஆலாவை வணங்குவதற்காக அழைக்க வந்தோமென்றார்கள். ராஜா கோபங்கொண்டு ஒவ்வொருவருக்கும் 100 அடி அடிக்க சொன்னான். இந்த இரண்டு றஸூலையும் பொய்யாக எண்ணினதால் ஈஸா அலைஹிஸ்ஸலாம் இருவர்களுக்கு ஒத்தாசையாய் ஷம்ஊனஸ்ஸபாவை அனுப்பி வைத்தார்.

ஸம்ஊன் மாறு வேஷமாக ராஜாவுடைய கூட்டங்களிடையே சேர்ந்து சீக்கிரத்தில் ராஜாவுக்கு அறிமுகமானார். அப்போது ஷம்ஊன் " இரண்டு மனிதர்கள் தங்களை தங்களுடைய தீன் அல்லாத வழியில் அழைத்ததாகவும், அவர்களை கோபிதது சிறையில் வைத்ததாகவும் கேள்விப்பட்டேன்" என்று ராஜாவிடம் கேட்டான். அதற்கு ராஜன் 'ஆம்' என, ஷம்ஊன் "தாங்கள் அவர்களை ஏதேனும் விசாரிக்காமல் சிறையில் வைப்பது முறையல்ல" வென்று சொல்ல, ராஜன் அவ்விருவர்களை அழைத்தான். ஷம்ஊன் அவர்களைப்பார்த்து "உங்களை யார் இவ்விடம் அனுப்பினது" என அவர்கள், நாடியதை செய்யக்கூடிய எல்லாம் வல்ல இறைவன் எங்களை அனுப்பினான்' என்றார்கள். அப்போது நீங்கள் என்ன

Q7
N-8

முஃஜிஸாத்து செய்வீர்கள் என்று ஷம்ஊன் கேட்க, அவர்கள் ராஜன் என்ன முஃஜிஸாத்து கேட்டாரோ அதைச் செய்வோம் என்றார்கள். அப்போது ராஜன் கண்ணில்லாத ஒரு பெண் பிள்ளையை கண்கொடுத்து பார்வையுண்டாக்கும்படி ஏவினான். இருவரும் கண் தலம் பிளக்க துஆசெய்தார்கள். உடனே கண் தலம் பிளந்தது. இரண்டு மண் உருண்டைசெய்து இருகண் தலத்தில் வைக்கவே இரண்டு கண்ணும் ஒளிபெற்று பார்வையும் உண்டானது.

இக்காரணத்தைக் கண்டு ராஜன் பிரமிக்கவே ஷம்ஊன் 'உங்கள் நாயன் இத்தகைய காரியங்களை செய்வானா?' என ராஜன் 'செய்பான்' என்றான். பிறகு ராஜன் மையத்தை ஹயாத்தாக்கி வைத்தீர்களானால் நாங்கள் எல்லோரும் உங்களைக்கொண்டு ஈமான் கொள்கிறோம் என்றான். இதைக்கேட்ட இருவர்களும் எங்கள் நாயன் சக்திபெற்றவன் தான் என்றார்கள். ராஜன் ஏழுநாள் சென்ற மையத்தொன்றைகொண்டு வரச்செய்து அந்தமையத்தை ஹயாத்தாக்கச் சொன்னான். மையத்துடைய தகப்பனார் காயிபாயிருந்தாலும் ஏழுநாளாய் மையத்தை வைக்கச் செய்திருந்ததாலும் மையத்து நாற்றமாயிருந்தது. எனினும் இரண்டு றஸூலும் அல்லாவிடம் மையத்தை உயிர்ப்பிக்குமாறு துஆசெய்பவே மையத்து உயிர்பெற்று எழுந்து "நான் ஏழுநாளாய் மௌத்தாயிருந்து ஏழு நரகத்துடைய ஓடக்கரையிலும் என்னை புகுதவைக்கப்பட்டது. ஆகையால நீங்களிருக்கும் நிலைக்கொண்டு அஞ்சிக் கொள்ளுங்கள். அல்லாஹுத் தஆலாவைக்கொண்டு ஈமான் கொள்ளுங்கள். அந்த வானத்துடைய கதவுகள் எல்லாம் திறக்கப்பட்டு அங்கு அழகான வாலிபக்காரரைக்கண்டேன். அவர் இம்மூவருக்கும் மன்றாடி துஆஇறக்குவதைக்கண்டேன்" என்றது. இச்செய்திகளைச் செவியுற்ற ராஜன் அந்த மூன்று பேர்கள் யார் என்றுவினவ அதற்கு அந்த இரு தூதரையும் ஷம்ஊனையும் காண்பித்தான். பிறகு ஷம்ஊன் ஒன்றையும் மறைக்காமல் எல்லாம் ராஜாவிடம் சொன்னவுடனே புதுமையாகி ராஜாவும் அவருடைய கவுமுகளும் ஈமான் கொண்டார்கள்.

இன்னும் நபிமார்களின் விரிவான சரித்திரங்களுக்கு கஸஸுல் அன்பியாவையும், நமது காத்திமுன் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்களுடைய விரிவான சரித்திரத்தை நபிநாயகத்தின் ஜீவிய சரித்திரத்திலும் வாசித்துணர்க.

ஆமீன்! ஆமீன்!! றப்பல் ஆலமின்!!!

ஈஸா நபியுடைய கிஸ்ஸா முற்றிற்று.

Printed at Shahul Hameedia Press, Madras.

TAMIL NADU ARCHIVES LIBRARY
1|1|52

எங்களது சொந்த பிரசுரங்களுள் சில :—

நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது ரூ.	6	4	0
நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம் …	6	4	0
சீறுபுராணம் பாட்டு … …	3	12	0
சீறுபுராணம் மூலமும் உரையும் முதற்பாகம்	5	0	0
மஜ்மூஅ முஃஜிஸாதே றஸூல் …	1	14	0
சீரத்துல் பாறூக் … …	2	8	0
பத்ஹுல் மிஸர் … …	2	3	0
பைத்துல் முகத்திஸின் யுத்த சரித்திரம்	2	8	0
தரீக்குல் ஜன்னா … …	3	0	0
தன்பீஹுஸ்ஸாலிகீன் … …	1	8	0
பத்ஹுற் றஹ்மான் பில்பிக்ஹின் னுஃமான்	2	0	0
மஜ்மூஅ ஸூறத்துல் குர்ஆன் (முக்கியமான 40 ஸூராக்கள் தமிழிலும் அரபியிலும்)	2	8	0
மிஃருஜுல் ஆரிபீன் பீ தர்ஜுமதி மின்ஹாஜில் ஆபிதீன் …	2	8	0
மிப்தாஹுஸ்ஸலாஹ் பீ யீலாஹின்னிகாஹ்	3	0	0
மிப்தாஹுஸ் ஸுபுஹானி பீ தர்ஜுமத்தி மஜ்மூஉஸ் ஸுல்தானி …	1	14	0
ழரூருல் முஃமினீன் 1 முதல் 4-வது பாகம்	4	6	0
ஷை 5-வது பாகம் முதல் 8-வது பாகம்	4	6	0
ஷை 9-வது பாகம் முதல் 12-வது பாகம்	4	6	0
ஷை 1 முதல் 12 பாகம் வரை …	11	4	0
கதீஜா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	4	0
பாத்திமா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	4	0
ஆயிஷா நாயகி அவர்களின் ஜீவிய சரித்திரம்	1	9	0
ஷை 3 நாயகிகளின் சரித்திரங்கள் சேர்த்து	3	12	0

கிடைக்குமிடம்:—

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,

நெ. 20. ஹைறோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.

G6A / 2-71